விலை ரூபா 20 பக்கங்கள் 28

**மின்வாசிப்பு டிஜிற்றல் மீற்றர் பொருத்தும் பணிகள் ஆரம்பம்**

பாவனையாளர்கள் மின் கட்டணங்களை முகாமைத்துவம் செய்வதற்கு வசதியாக



பக். 10


# உதயன்

27°c - 24°c
ஓரளவு
மேக மூட்டம்

சுடர் 31 கதிர் 060 வள்ளுவர் ஆண்டு 2047 தை 11, திங்கட்கிழமை 25.01.2016


## வடக்கு மக்கள் கருத்தறிவு அடுத்த வாரத்தில் ஆரம்பம்

### புதிய அரசமைப்பு தயாரிப்பது தொடர்பில்

கொழும்பு, ஜன. 25

புதிய அரசமைப்பைத் தயாரிப்பது தொடர்பில் கருத்துக்களைப் பெற்றுக் கொள்ளும் மாவட்ட மட்டத்திலான மக்கள் சந்திப்பு, அடுத்த மாதம் முதல் இடம்பெறவுள்ளதாக, அரசமைப்புத் தயாரிப்பது தொடர்பில் மக்கள் கருத்துக்களை ஆராயும் குழு தெரிவித்துள்ளது.

20 பேர் அடங்கிய குறித்த குழுவினர், அண்மையில் கொழும்பு மாவட்டத்தில் மக்களின் கருத்துக்களைக் கேட்கும் பணிகளை மேற்கொண்டனர்.

மேலும், ஏனைய மாவட்டங்களில் அடுத்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் 29ஆம் திகதி வரை காலை பக். 23

## தேசியப் பாதுகாப்புக்கு தேவைப்படும் தனியார் காணிகள் விடுவிக்கப்படாது

### அவற்றுக்குப் பதிலாக மாற்றிடங்களில் காணிகள் வழங்கப்படும் என்கிறார் பாதுகாப்புச் செயலர்

கொழும்பு, ஜன. 25

வடக்கில் இராணுவத்தினரிடமுள்ள தனியார் காணிகளில் தேசியப் பாதுகாப்பு நலன்களுக்குத் தேவைப்படும் காணிகள் விடுவிக்கப்படாது எனப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கருணாசேன ஹெற்றியாராச்சி தெரிவித்துள்ளார்.

அத்துடன், இராணுவத்தினரின் தேவைகளுக்குப் பயன்படுத்தப்படும் காணிகளின் உரிமையாளர்களுக்கு மாற்று இடங்களில் காணிகள் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். பக். 25



முச்சந்தி முரளி



எல்லாரும் வருகினம் எதுவும் நடக்கிறதாத் தெரியேல்ல...

# ஹுசைன், சுஷ்மா பெப்ரவரி 5 இல் கொழும்பு வருவர்

### ஒரே நாளில் வரும் இருவரையும் எதிர்கொள்ளத் தயாராகிறது அரசு

கொழும்பு, ஜனவரி 25

பெப்ரவரி 5 ஆம் திகதி இலங்கை வரவுள்ள இரண்டு சர்வதேச முக்கிய பிரமுகர்களை எதிர்கொள்வதற்கு இலங்கை வெளிவிவகார அமைச்சு தயாராகி வருகின்றது.

ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் சையிட் அல் ஹுசைனும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜும், அடுத்த மாதம் 5ஆம் திகதி இலங்கைக்குப் பயணம் மேற்கொள்ளவுள்ளனர். பக். 23



### பருத்தித்துறையில் இரு நகைக்கடைகளில் திருடர்கள் கைவரிசை

வடமராட்சி, ஜன.25

வடமராட்சி பருத்தித்துறைப் பகுதியில் ஒரே இரவில் இரு நகைக்கடைகள் நேற்று முன்தினம் இரவு உடைக்கப்பட்டு நகைகள் களவாடப்பட்டிருக்கின்றன.

இது தொடர்பில் நகைக்கடை உரிமையாளர்களால் முறைப் பக். 23

### குருநகர் கடலில் மூழ்கி 10 வயது சிறுவன் சாவு

யாழ்ப்பாணம், ஜன. 25

கடலில் தம்பியாருடன் விளையாடிய சிறுவன் பரிதாபகரமான முறையில் கடலில் மூழ்கி உயிரிழந்த சம்பவம் நேற்று மதியம் குருநகர் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

இவ்வாறு சாவடைந்த சிறுவன் குருநகர், தொடர்மாடியைச் சேர்ந்த குருநகர் சென். ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் தரம் 5 இல் கல்வி கற்கும் ரூபன் அன்ரனி பெட் கீர்த்தனன் (வயது -10) என்பவராகும்.

தொடர்மாடி குருநகரைச் சேர்ந்த 10 வயது 8 வயது சிறுவர்கள் மதியம் தமது வீட்டுக்கு அருகாமையில் உள்ள கடற்கரையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த படகில் ஏறி கடலில் குதிப்பதும் பின், படகில் ஏறுவதுமாக, மூத்த சகோதரன் விளையாட பக். 23

## கொழும்புத் துறைமுகநகர் திட்டத்துக்கு 2 நிபந்தனைகள்

### விதித்துள்ளது இந்திய அரசு

கொழும்பு, ஜன.25

கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தைத் தொடர்வதற்கு, சீனாவுக்கு அனுமதி அளிக்க இலங்கை அரசிடம் இந்தியா இரண்டு நிபந்தனைகளை முன்வைத்துள்ளது.

இவ்வாறு கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. இது தொடர்பில் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளதாவது,

சீனாவின் இராணுவ மூலோபாயத் திட்டத்தின் ஒரு பகுதியாகவே கொழும்புத் துறைமுக நகரத் திட்டம் முன்னெடுக்கப்படுவதாகக் கருதி இந்தியா இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறது.

எனினும், சீனாவுடனான இராஜதந்திர உறவுகளைப் பாதிக்கும் என்பதால், இந்தத் திட்டத்தைத் தொடர பக். 23

## காணாமற்போனவர்களின் பிரச்சினைக்கு உரிய தீர்வு

### புதுக்குடியிருப்பில் நேற்று உறுதியளித்தார் ஜனாதிபதி

கொழும்பு, ஜன.25

போரின் போது, காணாமற்போனோர் தொடர்பிலான பிரச்சினைக்கு உரிய தீர்வு வழங்கப்படுமென நேற்று உறுதியளித்துள்ளார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

அத்துடன், மக்கள் தமது சொந்த வாழ்விடங்களுக்கு திரும்புவதற்கும் விரைவில் நடவடிக்கை எடுப்பேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் புதிதாக அமைக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலை பக். 25



## முஸ்லிம்கள் வாழும் பகுதிகளில் வெடி கொளுத்தி 'சிங்க லே' கோசம்

### இனவாதக் குழுக்கள் தெற்கில் பேரணி

கொழும்பு, ஜன.25

முஸ்லிம்கள் செறிந்து வாழும் நகரங்களில் பட்டாசு கொளுத்தி, வாகனங்களுக்குப் பலவந்தமாக 'சிங்க லே' என்ற ஸ்டிக்கரை ஒட்டி சிங்க லே அமைப்பு (சிங்கத்தின் இரத்தம்) அடாவடியில் ஈடுபட்டுள்ளது எனக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

சிங்க லே அமைப்பினர் கொழும்பிலிருந்து கண்டிக்கு நேற்று முன்தினம் வாகனப் பேரணியொன்றை நடத்தினர்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அனுஷ்டான வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர், கொழும்பு – கண்டி பிரதான வீதி வாயிலாக இந்தப் பயணம் ஆரம்பமானது. சொகுசு வாகனங்கள் பல பேரணியில் பங்கேற்றன.

வாகனப் பேரணியில் பங்குபற்றியிருந்தவர்கள் ஏந்தியிருந்த தேசியக் கொடியில் சிறுபான்மை பக். 23

## இலங்கை இனப்பிரச்சினையில் மத்திய அரசு இரட்டை வேடம்

### வை.கோ. குற்றச்சாட்டு

கொழும்பு, ஜன. 25

இலங்கைப் பிரச்சினை மற்றும் ஜல்லிக்கட்டு விவகாரத்தில் மத்திய அரசு இரட்டை வேடத்துடன் செயற்பட்டு வருவதாக ம.தி.மு.க. பொதுச் செயலாளர் வை.கோ. தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள அவர், எதிர்வரும் 26 ஆம் திகதி குடியரசு பக். 23

யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சி
இன்னும் 4 நாட்களில்
JITF 2016
7th JAFFNA INTERNATIONAL TRADE FAIR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



இணுவில் கந்தசுவாமி ஆலயத்தின் புதிய நுழை வாயில் கோபுர கும்பாபிசேகம் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம் பெற்றது. அடியவர்களின் அரோகரா கோசத்தின் மத்தியில் நுழைவாயில் கோபுரத்துக்கு அபிசேக நீரை வேத மந்திரங்கள் ஒலிக்க அந்தண குரவர்கள் ஊற்றி கும்பாபிசேகம் நடத்தினர். (ற-ஐ-86)

# வடக்கு ஊடகவியலாளர் செய்தி சேகரிக்கத் தடை

*ஜனாதிபதி கலந்து கொண்ட முல்லைத்தீவு நிகழ்வில்*

முல்லைத்தீவு, ஜன.25

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கலந்து கொண்ட புதுக்குடியிருப்பு ஆடைத் தொழிற்சாலைத் திறப்பு விழா நிகழ்வுக்கு உதயன் ஊடகவியலாளர்கள் மற்றும் வடக்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் வடக்குப் பயணத்தின் போது வடக்கு ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்படுவது இது இரண்டாவது தடவையாகும்.

முல்லைத்தீவு–புதுக்குடியிருப்பு பகுதியில் அமைக்கப்பட்ட ஆடைத் தொழிற்சாலை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் உத்தியோக பூர்வமாக நேற்றுத் திறக்கப்பட்டது.

இந்தத் திறப்பு விழாவில் ஜனாதிபதி பங்கெடுப்பதை முன்னிட்டு நேற்றுமுன்தினம் முதல் முல்லைத்தீவு-புதுக்குடியிருப்பு பகுதியில் விசேட அதிரடிப்படையினர், பொலிஸாரின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டிருந்தது.

குறித்த நிகழ்வில் செய்தி சேகரிக்க வடக்கு ஊடகவியலாளர்கள் சென்றபோது அவர்களுக்கு அனுமதி இல்லை என்று தெரிவித்து ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் செய்தி சேகரிக்க அனுமதி மறுத்தனர்.

வடக்கு ஊடகவியாளர்களை நிகழ்வுக்கு அனுமதிக்காதது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தினருடன் தொடர்புகொண்டு கேட்ட போது குறித்த நிகழ்வு அமைச்சர் ரிசாத் பதியுதீனாலேயே ஒழுங்கு படுத்தப்பட்டது. தாங்கள் இதற்கு பொறுப்பல்ல என்று பதிலளித்தனர்.

அதேவேளை, குறித்த நிகழ்வுக்கு பொதுமக்கள், பாடசாலை அதிபர்கள் ஆகியோருக்கும் நிகழ்வில் கலந்து கொள்ள அனுமதி மறுக்கப்பட்டிருந்தது என்றும் தெரிவிக்கப்பட்டது.

அண்மையில் பலாலியில் நடைபெற்ற தேசிய பொங்கல் விழாவிலும் குறிப்பிட்ட ஊடகங்கள் மட்டும் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உதயன் ஊடகவியலாளர்கள் உட்பட்ட பலர் திருப்பி அனுப்பப்பட்டிருந்தனர். (ற-21,ரி7)

## தெல்லிப்பழை புற்றுநோய் பிரிவு மகரகம தரத்துக்கு அபிவிருத்தி

*மாகாண சுகாதாரத் திணைக்கள அதிகாரிகள் தெரிவிப்பு*

யாழ்ப்பாணம், ஜன.25

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையின் புற்றுநோய் வைத்தியப் பிரிவை மகரகம வைத்தியசாலையின் தரத்துக்கு அபிவிருத்தி செய்யும் பணிகள் எதிர்வரும் மார்ச் மாதம் முன்னெடுக்கப்படவுள்ளன என்று மாகாண சுகாதாரத்திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் புற்றுநோய்த் தடுப்பு பிரிவை மகரகம வைத்தியசாலையில் உள்ள தரத்துக்கு உயர்த்துவதற்கான வேண்டுகோள் விடுக்கப்பட்டது. அதன் பயனாக இந்த ஆண்டு வரவு-செலவுத் திட்டத்தின் மூலம் சுகாதார அமைச்சு குறித்த பணிகளுக்கு ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்தது. அதற்கான அனுமதியும் தற்போது வடமாகாண சுகாதாரத் திணைக்களத்துக்கு கிடைத்துள்ளது. எனவே இதற்கான திட்டப் பணிகள் மிக வேகமாக இடம் பெறுகின்றது.

அதனால் வட மாகாணத்தில் புற்றுநோய் வைத்தியப் பிரிவைக் கொண்ட ஒரேயொரு வைத்தியசாலையான தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலையில் இயங்கும் புற்றுநோய் வைத்தியப் பிரிவை மேம்படுத்தும் நோக்கில் குறித்த வைத்தியசாலையில் பல அபிவிருத்தி வேலைகளும் அதற்கான உபகரணக் கொள்வனவும் மேற்கொள்ளப்படவுள்ளன.

வடபகுதியில் அதிகரிக்கும் புற்றுநோய்த் தாக்கத்துக்கு உள்ளாகும் நோயாளர்கள் தற்போது பெரும் நிதிச் செலவின் மத்தியில் மகரகம வைத்தியசாலையை நாடும் சூழல் காணப்படுவதால், இதனை நிவர்த்தி செய்யும் வகையில் தெல்லிப்பழை ஆதாரவைத்தியசாலையின் புற்றுநோய்தடுப்புப் பிரிவை அபிவிருத்தி செய்ய, மத்திய சுகாதார அமைச்சு நிதி ஒதுக்கீடு மேற்கொள்ள வேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டதோடு, ஜனாதிபதிக்கும் வேண்டுகை சமர்ப்பிக்கப்பட்டது.

இதன் பயனாக 2016 ஆம் ஆண்டின் சுகாதார அமைச்சின் நிதி ஒதுக்கீட்டில் இருந்து குறித்த வைத்தியசாலையின் புற்றுநோய்த் தடுப்புப் பிரிவின் அபிவிருத்திக்கு மட்டும் ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் குறித்த புற்றுநோய்த் தடுப்புப் பிரிவில் தற்போது நிலவும் பெரும் நெருக்கடிகளைத் தீர்க்க முடியும். அதனால் வட மாகாண மக்களின் அலைச்சலை மட்டுமன்றி , நிதி விரயத்தையும் கட்டுப்படுத்த முடியும்.

இருப்பினும், கிடைத்த ஆயிரம் மில்லியனுடன் ஏனைய தேவைகள் தொடர்பிலும் கோரிக்கைகள் விடப்பட்டு எதிர்வரும் காலத்தில் மகரகமவைத்தியசாலையை ஒத்த தரத்துக்கு உயர்த்த முயற்சிக்கப்படும்.

இருப்பினும், எதிர்வரும் மார்ச் மாதம் ஆரம்பிக்கப்படும் பணிகள் இந்த ஆண்டின் நவம்பர் மாதத்துக்கு முன்பாக நிறைவு செய்யவே திட்டம் இடப்பட்டுள்ளமையால் அடுத்த ஆண்டு முதல் முடிந்தளவு திருப்திகரமான சேவையை வழங்க முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-ஐ-101)

## ஜனாதிபதியின் வருகையால் வீதியில் காத்திருந்த மக்கள்

*முன்னறிவித்தல் இன்றி வீதி மூடப்பட்டதால்*

முல்லைத்தீவு, ஜன.25

ஜனாதிபதியின் முல்லைத்தீவு வருகைக்காக புதுக்குடியிருப்பு-ஒட்டுசுட்டான்வீதி நேற்று மூன்று மணித்தியாலங்களுக்கு மேலாக மக்களுடைய போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படாது மூடப்பட்டது.



அதனால் வைத்தியசாலை உட்பட பல தேவைகளுக்காக சென்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர்.

புதுக்குடியிருப்பில் புதிதாக அமைக்கப்பட்ட ஆடைத்தொழிற்சாலையைத் திறப்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்று முல்லைத்தீவு வந்திருந்தார். அதையடுத்து குறித்த வீதி மு.ப.9 மணி முதல் மதியம் வரை பொலிஸாரால் மூடப்பட்டது.

முன்னறிவித்தல் ஏதுமின்றி குறித்த வீதி மூடப்பட்டதை அடுத்து, பொதுமக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொண்டனர். வைத்தியசாலைக்குச் செல்பவர்கள், வயல் காவல் முடிந்து வீடு செல்லும் விவசாயிகள் மற்றும் மரணவீட்டுக்குச் செல்பவர்கள் என நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் வீதியில் நீண்ட நேரம் காத்துக்கொண்டிருந்தனர். (ற-21,ரி7)

## யாழ். இந்து இன்ரக் கழக 25ஆவது ஆண்டு நிறைவு விழா

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இன்ரக் கழகத்தின் 25 ஆவது வருட நிறைவும், பதவி ஏற்பு வைபவமும் இன்று நடைபெறவுள்ளது.

இன்று முற்பகல் 11. 30 மணிக்கு, யாழ்.இந்துக் கல்லூரி மண்டபத்தில் நிகழவுள்ள இந்த விழாவின் பிரதம விருந்தினராக எஸ். அனுராஜும், சிறப்பு விருந்தினராக கே.தர்ஷனும் கலந்து கொள்ளவுள்ளனர். (ற-ரி4)

## ஓட்டோ தடம்புரண்டதில் மாணவர்கள் அறுவர் காயம்

*புலமைப்பரிசில் பயிற்சி வகுப்புக்குச் சென்றவேளை*

சாவகச்சேரி ஜன.25

ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பயிற்சி வகுப்புக்கு மாணவர்களை ஏற்றிவந்த ஓட்டோ வீதியை விட்டு விலகித் தடம் புரண்டதில் ஓட்டோ சாரதியும் ஆறு மாணவர்களும் காயமடைந்தனர். காயமடைந்தவர்கள் சாவகச்சேரி வைத்தியாசலைக்குக் கொண்டு வரப்பட்டு ஒரு மாணவிக்கு கை முறிந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். மற்றொரு மாணவி சாவகச்சேரி வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஓட்டோ சாரதியும் நான்கு மாணவர்களும் சிறு காயங்களுக்கு இலக்கான நிலையில் வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று பி.ப. 3 மணியளவில் சாவகச்சேரி கனகன்புளியடி வீதியில் கிராம்புவில் பகுதியில் இடம்பெற்றது. சரசாலை தெற்குப் பகுதியிலிருந்து மாணவர்களை ஏற்றி வந்த ஓட்டோவே தடம்புரண்டது.

சம்பவத்தில் சரசாலை தெற்கைச் சேர்ந்த அன்ரன்தவராசா கோபிகா ( வயது10 ) என்னும் மாணவி யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். கோபிராஜ் சஜித்தா ( வயது10 ) என்னும் மாணவி சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்

சாவகச்சேரி பெருங்குளம் பகுதியில் உள்ள தனியார் கல்வி நிலையத்துக்கு மாணவர்களை அழைத்து வந்த மேற்படி ஓட்டோவே தடம்புரண்டது. (வ- 9)

## பூங்கனித் தாவரப்பண்ணை அச்சுவேலியில் நிர்மாணம்

*12 ஏக்கர் நிலப்பரப்பில்*

அச்சுவேலி, ஜன.25

அச்சுவேலி மேற்கில் விவசாயத் திணைக்களத்தின் பூங்கனி இயல் தாய்த் தாவரப்பண்ணை 12 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

பழமரங்கள் நடுகைசெய்யப்படுவதோடு விவசாயிகள் நடுகை செய்வதற்கான நல்லின மரக்கறிப் பயிர் நாற்றுக்களின் விற்பனையும் இங்கு நடைபெறுகின்றது.

அச்சுவேலி கைத்தொழிற்பேட்டை செல்வநாயகபுரம் வீதியில், விவசாயத் திணைக்களத்துக்குச் சொந்தமான பூங்கனி இயல் தாய்த்தாவரப்பண்ணை அமைந்துள்ளது.

விவசாயத் திணைக்களத்துக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்த 12 ஏக்கர் நிலம் கற்கள் கிளறப்பட்டு பயிர்ச் செய்கைக்கு ஏற்ற வகையில் சீர்செய்யப்பட்டு நீர்ப் பாசனத்துக்கான குழாய் இணைப்புக்கள் செய்யப்பட்டு பழப்பயிர் நடுகை மேற்கொள்ளப்படுகின்றது.

தோடை, தேசி, மா, பலா, மாதுளை, பன், அம்பிறல், ரகன்வூட் உள்ளிட்ட பல்வேறு பழமரங்கள் அவற்றுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட அளவில் தனித்தனியாக நடுகை செய்யப்படுகின்றன.

அதேவேளை விவசாயிகள் தமது தோட்டங்களில் நடுகை செய்வதற்கு ஏற்ற நல்லின நாற்று வகைகளுக்கான மேடைகள் அமைக்கப்பட்டு நாற்றுக்கள் நியாய விலையில் விற்பனை செய்யப்படுகின்றன.

அச்சுவேலி பூங்கனி இயல் தாய்த்தாவரப் பண்ணை தொடர்பாக யாழ்.மாவட்ட விவசாயப் பணிப்பாளர் கி.ஸ்ரீபாலசுந்தரம் தெரிவித்ததாவது-

அச்சுவேலி பூங்கனி இயல் பண்ணை முழுமையாக செயற்படத் தொடங்கியதும் வடக்கு மாகாணத்தில் மாநிலப் பண்ணையாக அமைவதோடு பழப்பயிர்ச் செய்கையில் ஈடுபட விரும்புவோர் மற்றும் பழப்பயிர்ச் செய்கையாளர்களுக்கு பல்வேறு தேர்ச்சிகளை, மாதிரிகளைக் கண்டுகொள்ளும் இடமாகவும் விவசாய மாணவர்களுக்கு செயல்முறை கற்றலுக்கான களமாகவும் அமையும் என்றார். (ற-ஐ-11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் தொழில் பிரச்சினைக்குத் தீர்வாக வெளிநாட்டு முதலீடுகள்

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 25

வடக்கில் இளைஞர், யுவதிகளின் தொழில் பிரச்சினைக்குத் தீர்வாக உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்களின் உதவியுடன் எதிர்காலத்தில் புதிய முதலீட்டு வாய்ப் புக்களை வடமாகாணத்தில் ஏற்படுத்தவுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

வடக்கில் இளைஞர், யுவதிகளுக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் நோக்கில் புதுக்குடியிருப்பில் நிர்மாணிக்கப்பட்ட ஹைத்ரமணி ஆடைத்தொழிற்சாலையை நேற்று முற்பகல் திறந்து வைத்து உரையாற்றும் போதே, அவர் இதனைத் தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்துள்ளதாவது,

வடக்கிலும் தெற்கிலும் உள்ள அனைத்து மக்களும் மகிழ்ச்சியுடன் வாழ்வதைக் காண்பதே எமது எதிர்ப்பார்ப்பு. வடக்கு மக்களுக்கு அபிவிருத்தியின் நன்மைகளைப் பெற்றுக்கொடுத்து, அந்த மக்களின் சகல பிரச்சினைகளையும் தீர்ப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும்.

மனிதர்களின் வாழ்வை மகிழ்ச்சியாக வைத்திருப்பதற்கு மணல், செங்கல் மற்றும் சிமெந்தினால் முடியாது. மக்களின் உள்ளங்களை இணைப்பது அரசின் பொறுப்பாகும். நாட்டில் மீண்டும் ஒரு போர் ஏற்படுவதற்கு இடமளிக்காது எல்லா மக்களினதும் தேவைகளை நிறைவேற்ற வேண்டும். அவர்கள் மத்தியில் சமாதானம் சகோதரத்துவம் மற்றும்நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதற்கு புதிய அரசு அர்ப்பணிப்போடு உள்ளது என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வுக்கு, ஜனாதிபதியைப் படுகொலை செய்ய முயன்ற குற்றச் சாட்டில் சிறைத்தண்டனை அனுபவித்து அண்மையில் விடுதலை செய்யப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர் ஜெனீவனும் நேற்று அங்கு அழைக்கப்பட்டிருந்தார்.

அங்கு அவரும் அவரது பெற்றோரும் ஜனாதிபதியைச் சந்தித்து தங்களது நன்றியைத் தெரிவித்தனர். அதன் போது, ஏனைய அரசியல் கைதிகளையும் விடுவிக்குமாறு அவரிடம் கோரியதாக ஜெனிவன் தெரிவித்தார்.

(வ-4)

# இந்திய வீட்டுத்திட்டப் பயனாளியிடம் பாலியல் லஞ்சம் கோரிய விவகாரம்

## குற்றவியல் விசாரணைகள் ஆரம்பம்

கொழும்பு, ஜன.25

இந்திய வீட்டுத்திட்டப் பயனாளியிடம் பாலியல் லஞ்சம் கோரியதாக மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டின் பிரகாரம் இலங்கை செஞ்சிலுவை சங்கப் பணியாளருக்கு எதிராகக் குற்றவியல் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கொழும்பு ஊடகமான சண்டே ரைம்ஸ் செய்தி வெளியிட்டுள்ளது. இதுதொடர்பில் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

குறித்த சம்பவம் தொடர்பில் கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றில் வழக்குப் பதிவு செய்வது தொடர்பில் சட்டமா அதிபரிடம் ஆலோசனை கேட்கப்பட்டுள்ளது எனப் பொலிஸ் பேச்சாளர்ருவான்குணசேகர தெரிவித்துள்ளார்.

அத்துடன் பொலிஸ்மா அதிபரின்பணிப்புரைக்குஅமைய இது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. எனினும் பாதிக்கப்பட்டவரைத் தவிர்த்து உறுதியான சாட்சியங்கள் இதுவரை கிடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(வி)

# புத்தூர் நிலவெடிப்புக்கு தாழிறக்கமே காரணம்

## புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் தெரிவிப்பு

புத்தூரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றநிலவெடிப்புக்குத் தாழிறக்கமே காரணம் என்றும் அங்கு நில தாழிறக்கமே ஏற்பட்டுள்ளதாகவும் புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் மேற்கொண்ட முதற்கட்ட ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளதாகத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

புவி சரிதவியல் மற்றும் சுரங்கப் பணியகம் யாழ். மாவட்ட அதிகாரிகளுடன் இணைந்து குறித்த பகுதியில் நேற்றைதினம் கண்காணிப்பை மேற்கொண்டதாகப் பணியகத்தின் பணிப்பாளர் நாயகம் பர்ணாட் பிரேம் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பகுதியில் 50 மீற்றர் அளவில் நில தாழிறக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரி வித்துள்ளார். அதிக சத்தத்துடன் குறித்த பகுதியில் நில தாழிறக்கம் ஏற்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டார்.

எவ்வாறாயினும் இந்த நில தாழிறக்கமானது ஏதேனும் அதிர்வினால் ஏற்பட்ட தாக்கத் தினால் உருவாகியுள்ளதா என்பது தொடர்பில் அநுராதபுரத்திலுள்ள நில அதிர்வு கண் காணிப்பு மத்திய நிலையத்தினூடாக ஆராயப்படுவதாகவும் பர்ணாட் பிரேம் கூறினார்.

எனினும் யாழ். மாவட்டத்தில் காணப்படும் சுண்ணாம்புக் கல் கட்டமைப்புக்கு அமைய இவ்வாறான தாழிறக்கங்கள் ஏற்படும் என ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும், புவி சரிதவியல் தொடர்பான பேராசிரி யருமான செனவி எபிடவத்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை நில வெடிப்புத் தொடர்பில் தகவல்கள் திரட்டப்பட்டு வருவதாக தேசிய கட்டட ஆய்வு நிறுவக அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பணிப்பாளர் ஆர்.எம்.எஸ். பண்டார தெரிவித்தார்.

(வ-4)

வேலைவாய்ப்பு
தொடர்புகளுக்கு: 077 2174 741
புத்தக விநியோகத்தர் தேவை. (30 வயதிற்கு மேற்பட்ட ஆண்)
புத்தக கடையில் பணிபுரியக் கூடியவர் தேவை.

தேவை
உடனடித் தொடர்புக்கு: 075 049 5685
எமது நிறுவனத்திற்கு மிக்ஷர் வகைகள் உற்பத்தி செய்வதற்கும், பொதி செய்வதற்கும் மற்றும் உற்பத்திப் பொருள்களை வியாபார நிறுவனங்களுக்கு விநியோகிப்பவர்களுமான விநியோகஸ்தர்கள் தேவை.
(ஆண், பெண் இருபாலாரும்)

யாழில் 57ம் பிரிவு
கையடக்க தொலைபேசி திருத்தும் பாடநெறி
Mobile Phone Repairing Course
மாதம் 50,000 முதல் 100,000 இற்கு மேல் வருமானம் பெறும் நிரந்தர உள்நாட்டு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு
Jan. 30
காலை 9.00 மணி முதல் 30, 31, Feb. 01, 02 ஆகிய நான்கு தினங்களில்
Special Trainer
Ganesh Sir
2500/-
10,000/-
இலவசமாக இரகசியங்கள் அடங்கிய CD கையேடு வழங்கப்படும்.
Certificate வழங்கப்படும்
PMS POWER MULTI SYSTEM
Hospital Road, Jaffna.
(Vembady Junction)
077-6131358

Galaxy Star
வெற்றி வாரம் 028
திகதி 24.01.2016
05 08 33 53 59
அடுத்த புதன் கிழமை
சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 3,013, 900/-

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 24.01.2016
வெற்றி வாரம் 1933
ஊதா
தனுசு
03 27 39 50
செவ்வாய்க்கிழமை வெற்றிப்பொதி
ரூ 4,087,520/-

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
இம்முறை O/L எழுதியோர், பல்கலை புகுமுக மாணவர்கள் இளைஞர், யுவதிகள், தொழில்புரிவோர், வெளிநாடு செல்வோர் இணைய முடியும்.
பாடப்புத்தகங்கள், Video DVD, சான்றிதழ் முற்றிலும் இலவசம்!
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம் 30.01.2016 சனிக்கிழமை
1. காலை 08.00-10.00
2. காலை 10.00-12.00
3. பி.பகல் 01.00-03.00
4. மாலை 03.00-05.00
எமது 3 மாத பயிற்சி நிறைவில் தமிழைப்போல சரளமாக ஆங்கிலம் பேசமுடியாது விடின் முழுப்பணமும் திருப்பி வழங்குவதற்கான உத்தரவாதம்.
30.01.2016 இற்குமுன் விண்ணப்பித்தல்வேண்டும். ஒரு பிரிவில் 20 பேர் மட்டுமே!
SAAMSON
Experts in English Training
279, ஆஸ்பத்திரி பின்புறம், யாழ்நகர்.
021 320 3313
077 1570 486

யாழ் BCAS CAMPUS இல் புதிய பிரிவுகள்...
PEARSON
University of Wolverhampton
London South Bank University
UK Degree in
Quantity SURVEYING
Leading to BSc (Hons)



அனுபவம் வாய்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர் குழாம்.
இலகு தவணைக் கட்டணம்.
வசதியான நவீன கற்றல் முறை மற்றும் சூழல்.
பிரசித்தி மற்றும் பெறுமதி வாய்ந்தது.
RECOGNIZED UGC
www.bcas.lk
BCAS CAMPUS
16, Point Pedro Road, Jaffna
Tel : 021 221 9910
Hotline 077 710 2131
16 YEARS
Colombo | Mt.Lavinia | Kandy | Kurunegala | Jaffna | Batticaloa | Ampara | Qatar

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினையில் நடுநிலை தவறிவிட்டார் முதலமைச்சர்

## குற்றஞ்சாட்டுகிறார் மருத்துவர் முரளி வல்லிபுரநாதன்

யாழ்ப்பாணம், ஜன. 25

சுன்னாகம் குடிதண்ணீர்ப் பிரச்சினைகள் தொடர்பில் வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் ஒருதரப்பினரிடம் மட்டுமே கருத்துக்களைக் கேட்டு நடுநிலை தவறியவராக, செயற்படுவதாக சுன்னாகம் சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் பிரதிநிதி மருத்துவர் முரளி வல்லிபுரநாதன் குற்றஞ் சாட்டியுள்ளார்.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் சுன்னாகம் கழிவு ஒயில் கலப்பால் பாதிப்படைந்த தண்ணீரைக் குடிக்கமுடியுமா? குடிக்க முடியாதா? என்பதைத் தெளிவுபடுத்துவது தொடர்பான கருத்தரங்கு நேற்று மு.ப 10மணிக்கு சுன்னாகம் தெற்கு சனசமூக நிலையத்தில் நடைபெற்றது.

இதன்போது, முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு மக்களுக்கான தெளிவுபடுத்தலை மேற்கொள்ளும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குடிதண்ணீரில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்களைச் சீர் செய்வதற்காக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையை ஏற்றுக்கொள்ளமுடியாதுள்ளது. ஆய்வுகளை மேற்கொள்வதிலும், மேற்கொண்ட ஆய்வின் தன்மைகளை வெளிப்படுத்துவதிலும் பின்னடிப்பைக் காட்டிவருவதாக நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினர் மீதும் குற்றஞ்சாட்டினார் அவர்.

இந்த விடயத்தில் வெளிப்படைத் தன்மைகள் பேணப்படுதல் வேண்டும். நொதெண் பவர் நிறுவனத்தினர் குற்றவாளிகள் என்றால், அவர்களுக்கு அனுமதியை வழங்கியவர்களும் குற்றவாளிகளே.

எனவே, உண்மைகள் வெளிப்படுத்தப்படும் வரையிலும் மக்களுக்காக தினம் 3 லீற்றர் குடிதண்ணீரை உறுதி செய்வது தொடர்பிலும் உரிய கரிசனைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும் என்றார்.

இந்த விடயத்தில் அக்கறையற்றுச் செயற்படும் மாகாணசபை உறுப்பினர்களையும்மற்றும் யாழ். மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினர்களையும் அவர் கடுமையாக விமர்சித்தமை குறிப்பிடத்தக்கது. (வ-ரி5)

# சந்திரிகா, மகிந்த சு.கவுக்காக பரப்புரை

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ச, சந்திரிகா பண்டாரநா யக்க குமாரதுங்க ஆகியோர் இணைந்து எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்காக பரப்புரையில் ஈடுபடுவது என்று சிறிலங்கா சுதந்திரக்கட்சிதீர்மானித்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்நாள், முன்னாள் ஜனாதிபதிகளும் ஒரே மேடையில் கொண்டு வருவது சாத்தியப்படாது போனாலும், வெவ்வேறு மேடைகளிலாவது கட்சிக்காக செயற்பட முன்வருமாறு அழைப்பு விடுப்பதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம் கட்சியின்சிரேஷ்ட உறுப்பினர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்தத் தேர்தலில் ஏனைய கட்சிகளையும் இணைத்துக் கொண்டு போட்டியிட, எதிர்வரும் நாள்களில் பேச்சு ஆரம்பிக்கப்படவுள்ளது என்று சிறி. ல.சு.க. சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரை மேற்கொள்காட்டித் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ற)

ALLIANCE FRANCAISE DE JAFFNA
பிரெஞ்சு மொழியை பிரெஞ்சு முறையில் கற்றுக்கொள்ளுங்கள்
பிரான்ஸ், கனடா, சுவிற்சர்லாந்து செல்வோருக்குமானது.

* பிரான்ஸ் FOREIGN MINISTRY & FRANCE EMBASSYயின் கீழ் இயங்குகிறது. தலைமை நிறுவனம் FRANCE இல் உள்ளது.
* INTERNATIONAL DIPLOMA (DELF A1): இலங்கையில் AFமட்டுமே இப் பரீட்சையை நடாத்துகிறது. இதனைப் பெற்றால் பிரான்ஸில் உள்ள கட்டாய பரீட்சை தேவையில்லை. கட்டணம் AF மாணவர்களுக்கு 4000/= ஏனையோருக்கு 10300/= கொஞ்சம் பிரெஞ் படித்தவர்களும் எம்முடன் இணையலாம். மொழி பெயர்ப்புகள்

மாணவர்களுக்கு 40% கழிவு
* இலவசம் படிக்கும் பாடங்களின் PHOTOCOPIES, படித்ததற்கான LETTER, VISA FORM நிரப்புதல், CD, BOOKS பாவனை.
* யாழ், வன்னி, திருகோணமலை, மட்டக்களப்பு, கொழும்பைச் சேர்ந்த நூற்றுக்கணக்கானோர் AF இல் படித்தே வெளிநாடு செல்கிறார்கள்.

ஆரம்பம் 31.01.2016 2 p.m உடன் தொலைபேசியில் பதியவும்.
021 222 8093 61, கச்சேரி - நல்லூர் வீதி, யாழ்ப்பாணம்.
கச்சேரி பஸ்நிலையம் → புகையிரதகடவை → AF (வெள்ளை மாடிக்கட்டடம்)

வீடு விற்பனைக்கு
யாழ்ப்பாணம் விக்டோரியா வீதியில் சுகாஸ்-ஞானம்ஸ் ஹோட்டல் அருகில் 1 ¾ பரப்பளவில் 3 படுக்கை அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட வீடு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: இரத்தினசிங்கம்
தொலைபேசி இல: 004 162 974 067
மின்னஞ்சல்: josephra2008@hotmail.com

வேலையாள் தேவை தொடர்பு: 077 868 9500
1½ வயது குழந்தையைப் பராமரிப்பதற்கு வேலையாள் தேவை. சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். இடம்-ஆனைக்கோட்டை.

மணமகள் தேவை தொடர்பு: 077 239 5894
யாழ். இந்து கௌரவ குடும்பம் 1981 உத்தரம் 04. ஐரோப்பிய குடியுரிமையுடைய 28 கிரகபாவம் கொண்ட மணமகனுக்குப் பொருத்தமான அழகிய மணமகள் தேவை. (சீதனம் எதிர்பார்க்கப்பட

யாழ்.புத்தகசாலையின் விசேட விலைக்கழிவு விற்பனை
நீங்கள் கொள்வனவு செய்யும் அனைத்துப் புத்தகங்களுக்கும்
1000/= மேல் 15%, 2500/= மேல் 20% விலைக்கழிவு வழங்கப்படும்.
யாழ்.கிளையில் Visa காட் வசதி உண்டு.
தொடர்புகளுக்கு:
யாழ்.புத்தகசாலை, கனகபுரம் விளையாட்டுக்கழக சந்தி, கனகபுரம், கிளிநொச்சி 021 491 7467
077 834 9507
யாழ்.புத்தகசாலை 305,307,309 மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம். 021 221 7874


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிட பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ் 100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போது குளுக்கோஸ் என்று கேட்காமல் றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்.
PAKED BY : Royal Industries
T.P: 077 727 7670 colombo - 13
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்
ஏக விநியோகஸ்தர்கள்: சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P: 021 222 2567
* விளையாட்டுத்துறையில் வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் வீறு கொண்டெழும் விசேட சக்தியை வழங்குவது றோயல் குளுக்கோஸ்.
* நோயுற்றவேளை சோர்வுற்று இருக்கும் உங்களுக்குப் புத்துணர்வும் புதுத்தென்பும் தருவது றோயல் குளுக்கோஸ்.
* காலை முதல் மாலை வரை வேலை அதிகம் காரணமாக சோர்வுற்ற நிலை அடையும்போது புதிய உற்சாகம் பெற உங்கள் கையில் இருக்க வேண்டியது றோயல் குளுக்கோஸ்.
* மழலைகளுக்கும் மகப்பேற்றுத் தாய்மாருக்கும் விளையாட்டு வீர, வீராங்கனைகளுக்கும் முதியோருக்கும் மூதாதையர் காலத்தில் இருந்து முன் நின்று உற்சாகம் தருவது றோயல் குளுக்கோஸ்.
உற்பத்தியாளர்: றோயல் இன்டஸ்றீஸ், வூல்வொண்டல் ஸ்றீற், கொழும்பு-13
சந்தைப்படுத்துவோர் : சிவா நறுமணப் பூங்கா, 288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

விஸ்டம்
தொழில் நுட்பக் கல்லூரி
இல.63, சிவன் வடக்கு வீதி, வண்ணார் பண்ணை, யாழ்ப்பாணம்.
க.பொ.த.(உ/த) 2015 தொழில்நுட்பப் பிரிவில் சித்தியடைந்த மாணவர்களுக்கான அறிவித்தல்
எமது கல்லூரியில் கல்வி கற்று க.பொ.த.(உ/த) 2015 இல் தொழில்நுட்பப் பிரிவுகளில் பரீட்சைக்குத் தோற்றி முதன்மைப் பெறுபேறுகளைப் பெற்றுக்கொண்ட மாணவ மாணவிகளுக்கான கௌரவிப்பு நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் ஒன்று எமது கல்லூரியில் இடம் பெறவுள்ளது.
காலம் - 26.01.2016
நேரம் - பிற்பகல் 3.00 மணி
இந்தக் கலந்துரையாடலில் கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களில் பரீட்சைக்குத் தோற்றி, மாவட்ட மட்டத்தில் முதல் 15 நிலைகளுக்குள் சித்தியடைந்தவர்களும், யாழ்.மாவட்டத்தில் மாவட்ட மட்டத்தில் முதல் 50 நிலைகளுக்குள் சித்தியடைந்த மாணவர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.
தொடர்பு: 077 248 7774
- நிர்வாகி -

கற்கைநெறிகள்
ஆரம்பம் January 2016
தமிழ்மொழிமூல விளக்கம்
- Fundamental of Information Technology- FIT 6 Months
- Information of Communication Technology - ICT 8 Months
- Certificate in Printing Technology - 4 Months
- Certificate in Web Design - 3 Months
- Certificate in Internet & E-mail -2 Months
- Certificate in AutoCAD (2D & 3D Modeling) - 3 Months
Craft Certificate Courses
தமிழ்மொழி மூலம் - 6 மாதங்கள் - முழுநேரம்
- Electrical Wiring - மின்இணைப்பும் நிர்மாணமும்
- Refrigeration & Air-Conditioning Mechanic - குளிரூட்டுதல் பயிற்சி நெறி
- Machine shop Practice - லேத் வெல்டிங் பிற்றிங் பயிற்சிநெறி
- Radio,TV and Electronic Servicing Practice - இலத்திரனியல் சாதனங்கள் திருத்துதல்
- Aluminum Fitting & Fabrication- அலுமினியம் பொருத்துதலும் இணைத்தலும்
- Motor cycle Mechanic- மோட்டார் வாகனம் திருத்துதல்
மூன்றாம் நிலைக்கல்வி, தொழிற்கல்வி ஆணைக்குழுவில் பதிவு செய்யப்பட்டது. பதிவு இலக்கம் : P25/0014
For More Information:
Director,
Jaffna College Institute of Technology, Vaddukoddai
Jaffna, Sri Lanka. Tel : 0212250975

பாராட்டி வாழ்த்துகின்றோம்

யாழ்.பல்கலைக்கழகத்தில் 20.01.2016 புதன்கிழமை நடைபெற்ற 31ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில்
MA(2nd upper)
முதுகலைமாணிப் பட்டம் பெற்ற
மு/பாலிநகர் மகா வித்தியாலயத்தின் தமிழ் பாட ஆசிரியரான
செல்வி சி.சிவமலர்
அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று உயர வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைச் சமூகம்.
மு/பாலிநகர் மகா வித்தியாலயம், வவுனிக்குளம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வடமாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தின் கிளிநொச்சி மாவட்ட அலுவலகத்தால் ஆடை வடிவமைத்தலுக்கான தேசிய வாழ்க்கைத் தொழிற்றகைமைச் சான்றிதழுக்கான பயிற்சி வகுப்பு கடந்த திங்கட்கிழமை கணேசபுரம் கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் ஆரம்பிக்கப்பட்டது. கரைச்சி பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அலுவலர் திருமதி வி.வைகுந்தன் தலைமையில் நடைபெற்ற பயிற்சி வகுப்பை கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரச அதிபர் சி.சத்தியசீலன் ஆரம்பித்தார். (ற-ஐ-9)

# அரசியல் ஆலோசனைக் குழு அடுத்த மாதம் கிளிநொச்சிக்கு

கிளிநொச்சி, ஜன.25

அரசியல் அமைப்புக்கான ஆலோசனையைப் பெறும் குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்துக்கு அடுத்த மாதம் 8 , 9 ஆம் திகதிகளில் சமுகமளிக்கவுள்ளனர் என்று மாவட்ட அரச அதிபர் சு. அருமைநாயகம் தெரிவித்தார்.

நாட்டில் இடம்பெறவுள்ள அரசியல் யாப்பு மாற்றத்துக்காக கருத்தறியும் உப குழு ஒன்றை ஜனாதிபதி நியமித்துள்ளார். குறித்த அமைப்புக்கான ஆலோசனையைப் பெறும் குழுவினர் கிளிநொச்சி மாவட்டத்துக்கு வரவுள்ளனர்.

2015ம் ஆண்டு இடம் பெற்ற ஜனாதிபதித்தேர்தல் மற்றும் நாடாளுமன்றத் தேர்தலிலும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு உட்பட சில முக்கிய அரசியல் கட்சிகள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன உள்ளிட்டோரிடம் முன்வைத்த கோரிக்கைகளில் ஒன்றான அரசியல் யாப்பு மாற்றத்துக்கான ஏற்பாடுகள் தற்போது தீவிரம் பெற்றுள்ளன.

இந்த யாப்பை நிறைவு செய்ய முன்பு சகல தரப்பினரதும் கருத்துக்களை உள்வாங்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டதற்கு அமைய கருத்துக்களைப் பெறும் வகையில் ஜனாதிபதியால் ஓர் உப குழு நியமிக்கப்பட்டது. குறித்த குழுவினர் மாவட்டம் தோறும் சென்று கருத்துக்களைப் பெறும் பணியை ஆரம்பித்துள்ளனர்.

மேற்படி குழுவினர் மக்களின் கருத்தைப் பெறும் வகையில் கிளிநொச்சி மாவட்டத்துக்கும் வரவுள்ளனர். இந்தக் குழுவிடம் தமது கருத்தையும் சமர்ப்பிக்கவிரும்பும், கட்சிகள், அமைப்புக்கள் அல்லது தனிநபர்கள் குறித்த தினத் தில் வருகை தரும் குழுவினரிடம் தமது கருத்தை நேரடியாக சமர்ப்பிக்க முடியும் என அரச அதிபர் தெரிவித்தார்.

(ற-ஐ-101)

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில்
20.01.2016 புதன்கிழமை
நடைபெற்ற 31 ஆவது பட்டமளிப்பு
விழாவில் **நுண்கலைமாணி** (B.FA)
பட்டம் பெற்ற
செல்வி **கௌசிகா**
**யோகநாதன்**
அவர்களைப் பாராட்டி வாழ்த்து-
வதோடு அவர் மென்மேலும்
பட்டங்கள் பதவிகள் பெற்று வாழ
உளமார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
குடும்பத்தினர்.
கண்டி வீதி, கொடிகாமம்.

மதுரத்தின் ஆசிரியர்களைப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்



திரு க. நித்தியானந்தன்
B.A(Hons), PGDE, MEd
திரு ந. சதீஸ்கரன்
BEd, MEd
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 31 ஆவது பட்டமளிப்பு
விழாவின் முதல்நாள் மூன்றாவது அமர்வில்
முதுகல்விமாணிப்
பட்டம் பெற்ற எமது நிறுவன ஆசிரியர்களைப் பாராட்டி
வாழ்த்துவதோடு மேலும் பல பட்டங்களைப் பெற்று
சிறப்படைய மனதார வாழ்த்துகின்றோம்.
டச்சுவீதி,
கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
இயக்குநர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.
மதுரம் கல்வி நிறுவனம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்.பல்கலைக்கழகத்தில் 20.01.2016
புதன்கிழமை நடைபெற்ற 31ஆவது
பொதுப்பட்டமளிப்பு விழாவில்
**தமிழில் முதுகலைமாணி**
M.A in Tamil பட்டத்தைப் பெற்ற
**மார்க்கண்டு**
**செல்வதாஸ்**
அவர்களை மேலும் பல பட்டங்கள் பெற்று
வாழ்வில் உயர மனதார வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
மனைவி (மயூரி),
மாமா (கனகரத்தினம்),
மாமி (மல்லிகாதேவி)
மச்சான்மார்கள் (மதன்.மயூரன். மதீப். மதிவதன்)
சித்தப்பா (விஜயகுமாரன்)
கைதடி சந்தி, கைதடி.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்
31 ஆவது பட்டமளிப்பு விழாவில்
முதுகலைமாணி பட்டத்தைப் பெற்ற
K. துஸ்யந்தன்
B.A (Hons, M.A in Tamil
(Second Upper)
அவர்களைப் பாராட்டி வாழ்த்துவதோடு
மென்மேலும் பல பட்டங்கள்
பெற்றுச் சிறப்புற
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்:
தவம் குடும்பத்தினர்.
பெரியதம்பிரான் வீதி,
வண்-மேற்கு,
யாழ்ப்பாணம்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்



கலாநிதி திருமதி
ஹிமலதா
இராஜேஸ்வரன்
B.A(Hons), M.Phil, Ph.D
யாழ்ப்பாணப்
பல்கலைக்கழகப்
31 ஆவது பொதுப்
பட்டமளிப்பு விழாவில்
புவியியல் துறையில்
கலாநிதி (Ph.D)
பட்டம் பெற்றதையிட்டு
மனமார
வாழ்த்துகின்றோம்.
வாழ்த்துவோர்
குடும்பத்தினர்.
புதிய மூர்வீதி,
மன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசக் கூடிய அளவுக்கு தகுதியற்றது சிங்க லே

## ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு

கொழும்பு, ஜன.25
சிங்க லே அமைப்பு பேசக் கூடிய அளவுக்கு பெறுமதியான அமைப்பு அல்ல என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.
ஊடகமொன்று எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கையிலேயே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.
நாம் பெறுமதியானவற்றைப் பற்றி மட்டுமே பேச வேண்டும். நாட்டு மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்ட அரச தலைவர் என்ற வகையில் நாட்டுக்கு பயன் தரக் கூடிய மற்றும் பெறுமதியான வற்றைப் பற்றி மட்டுமே பேச வேண்டும். பெறுமதியற்ற விடயங்கள் பற்றிப் பேச வேண்டிய அவசியமில்லை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.
இதுகுறித்து அவர் மேலும் கூறியுள்ளதாவது-
சிங்க லே அமைப்பு தொடர்பான உண்மை நிலைமையை படித்தவர்களும், புத்திஜீவிகளும்புரிந்துகொண்டுள்ளனர். எது தேவையானது எது தேவையற்றது என்பதை சமூகத்தில் இருக்கும் புத்தி சாலியான தரப்பினர் புரிந்து கொண்டுள்ளனர்.- என்று தெரிவித்துள்ளார்.
(ற)


## பிரார்த்திக்கின்றோம்

எமது பாடசாலை ஆசிரியர் திரு. ந.நிறஞ்சன் அவர்களின் அன்புத் தாயார்

### திருமதி சரஸ்வதி நல்லதம்பி

26.12.2015 அன்று காலமானார். அன்னாரின் பிரிவால் துயருறும் அவர்தம் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தினைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்
கிளி/ பூநகரி ஸ்ரீ விக்னேஸ்வரா வித்தியாலயம்


# சுயாதீனத்துக்குச் சிக்கல் ஏற்படுத்தும் தீர்மானங்கள்

## மகிந்த எம்.பி. கவலை

கொழும்பு, ஜன.25
எதிர்காலத்தில் சில சம்பவங்கள் நடைபெறக் கூடும். நாட்டின் சுயாதீனத்துக்குச் சிக்கல் ஏற்படும் விதமாக சில தீர்மானங்கள் எடுக்கப் படுகின்றன. - இவ்வாறு தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதியும் தற்போது நாடாளுமன்ற உறுப்பினருமான மகிந்த ராஜபக்ச.
தங்காலை உஸ்வெவ குருகொடெல்ல புராண விகாரையில் நேற்று முன்தினம் நடைபெற்ற சமய உற்சவம் ஒன்றில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.
அங்கு அவர் தெரிவித்துள்ள தாவது-
இது பிக்குமாருக்கு தட்டுப்பாடு நிலவும் காலம். பிக்குமார் இல்லாத காரணத்தால் விகாரைகள் மூடப்பட்டுள்ளன.
கிராமங்களுக்கு அந்நிய மதங்களைச் சேர்ந்தவர்கள் வந்து பௌத்தர்களை அவர்களின் மதங்களுக்கு மாற்றி வருகின்றனர். நாம் அவர்களைக் குறை கூறிப் பயனில்லை.
மதசுதந்திரம் இருப்பது போல, நாம் எமது மதத்தைப்பாதுகாத்துக்கொள்ள வேண்டும். அரசியலமைப்புச் சட்டத்திலும் அது உள்ளது. கட்டளை சட்டம் என்பதால், அது அவ்விதமா கவே நிறைவேற்றப் படுகிறதா? என்பதில் சிக்கல் உள்ளது.
எதிர்காலத்தில் சில சம்பவங்கள் நடக்கக் கூடும் என்பது அனைவருக்கும் தெரியும். நாட்டின் சுயாதீனத்துக்கு சிக்கல் ஏற்படும் விதமாக சிலர் தீர்மானங்களை எடுக்கும் சந்தர்ப்பம் இது.
வெளிநாட்டு சக்திகளுக்கு அடிபணிந்து இந்த நாட்டை பிரிக்கவும் இல்லாத பிரச்சினையை ஏற்படுத்தி, சிங்கள, தமிழ் நட்புறவுகளை சீர்குலைக்க நடவடிக்கை எடுக்கும் போது பிக்குமார் முன்னோக்கி வருவதை தடுக்க சட்டமூலத்தின் ஊடாக முனைப்புகள் மேற் கொள்ளப்படலாம்.- என்று தெரிவித்துள்ளார்.
(ற)

# சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை ஆலோசனையை சீரமைக்க முடிவு

கொழும்பு, ஜன. 25
தனியார்வைத்தியசாலைகளின் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைகளுக்கு அமைவான ஆலோசனைகளை மறுசீரமைப்பதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது. சிறுநீரகக் கடத்தல் தொடர்பில் ஆராய ஐவரடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.
இது தொடர்பில் தனியார் வைத்திய சேவைகள் ஒழுங்குபடுத்தும் சபையின் தலைவர் வைத்தியர் காந்தி ஆரியரத்ன தெரிவித்துள்ளதாவது:-
தனியார்வைத்தியசாலைகளின் ஒழுக்கக் கட்டுப்பாட்டு விதிமுறை தொடர்பான பிரதிநிதிகளை அழைத்து அறிவுறுத்தப்பட்டுள்ளது. சிறுநீரக அறுவை சிகிச்சைகளை முறையான வகையில் முன்னெடுப்பது இதன் நோக்கமாகும்.
பெண்கள் தொடர்பில் காணப்படும் நிபந்தனைகளுக்கு மேலதிகமான சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையின் பின்னர் அவர்களது எதிர்காலம் தொடர்பிலும் இதன் போது அவதானம் செலுத்தப்பட வுள்ளது.
அத்துடன் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சையின் போது ஏற்படும் உயிரிழப்புக்கள் தொடர்பில் உள்ள சட்ட விதிமுறைகளை மறுசீரமைக்கவுள்ளது. அத்துடன் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை திட்டமிடப்பட்டு இடம்பெறாவிடின் அது தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அறிவியுங்கள்.
குறித்தநிபந்தனைகளின் அடிப்படையில் சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சைகள் இடம்பெறுகின்றதா என்பது தொடர்பில் ஆராய்வதற்கான திடீர் சுற்றிவளைப்புக்களை மேற் கொள்ளவுள்ளன.
தற்போது தனியார் வைத்தியசாலைகளில் வெளிநாட்டவர்களுக்கு சிறுநீரக மாற்று சத்திர சிகிச்சை செய்வதற்கு தற்காலிகமாகத் தடை விதிக்கப்பட்டுள்ளது.இதேவேளை நாட்டில் இடம் பெற்றதாகக் கூறப்படும் சிறுநீரக கடத்தல் தொடர்பில் ஆராய்வதற்கு ஐவரடங்கிய புதிய குழு வொன்று சுகாதார அமைச்சால் நியமிக்கப்பட்டுள்ளது.
நாட்டிலுள்ள தனியார் வைத்தியசாலைகள், இந்திய வைத்தியசாலைகளுடன் தொடர்புபட்டுள்ளது என்று கூறப்படும் சிறுநீரக கடத்தல் குறித்து விரிவாக ஆராய்ந்து அதன் அறிக்கையை புதிய குழு சமர்ப்பிக்கவுள்ளது.- என்றார். (ற-4)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22
01
1955



மறைவு
05
02
2015

### திருமதி நாகேஸ்வரி சிவபாலன்(மணி ரீச்சர்)

திதி: தைமாத அபரபக்க துதியை (25.01.2016)

ஓராண்டு சென்றதுவே உறங்காத
உன் நினைவு ஆறாத ரணமாகி
ஆறவில்லை நினைவலைகள்

குடும்பத்தினர்.
[வாசன் சுவிஸ்]



## 31ஆம் நாள் நினைவஞ்சலி

மலர்வு
08
02
1944



உதிர்வு
26
12
2015

அமரர்

### கனகாம்பிகை சதாசிவம்

மண்ணில் நல்ல வண்ணம் வாழ்ந்த மங்கை
விண்ணில் பறக்கையிலே உயிர் பிரிந்த கதை கேட்டு
கண் கலங்கி நாம் பரிதவித்து நிற்கின்றோம்
ஆண்டவன் தீர்ப்பெனினும் ஆறாத் துயரிதுவே

சீரும் சிறப்பும் இறைவனின் கொடை
இறப்பும் பிறப்பும் இயற்கையின் நியதி
கனகாம்பிகையெனும் நாமம் கொண்ட கண்மணியவளை
தினமும் பணிவோம் பாரினில் நாமே.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

135/1. இராசாவின்
தோட்டவீதி, யாழ்ப்பாணம்

குடும்பத்தினர்.



## நான்காம் ஆண்டு நினைவலைகள்



உதிப்பு 31.12.1957
உதிர்வு 25.01.2012

### தேவதாஸ் விவேகானந்தன்

பாசம் பொழிந்தே உறவுகளைக் காட்டி நின்றீர்
நேசம் வைத்து நேசத்தை சொல்லித் தந்தீர்
காலை மாலையென உழைத்தே உருக்குலைந்தீர்
ஆண்டுகள் நான்கானாலும் மறப்போமா உன் நினைவுகளை.

## முதலாம் ஆண்டு நினைவலைகள்



உதிப்பு 20.06.1980
உதிர்வு 21.12.2014

### விவேகானந்தன் பிரகாஸ்

ஆண்டொன்று சென்றாலும் அகலாது உன் நினைவு
அல்லும் பகலும் அயராது உழைத்த - பிரகாஸே
இத்தனை சகோதரர்களையும் அன்போடு காத்தவனே
அயலவர்க்கும் ஊரவர்க்கும் அன்பை அள்ளிக் கொடுத்தவனே.

என்றும் உங்கள் நினைவோடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தைப்பூசத்திருநாளை முன்னிட்டு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலையில் இணுவில் கந்தசுவாமி ஆலயத்துக்கு மருதனார் மடம் சந்தியில் அமைந்துள்ள வைரவர் ஆலயத்தில் இருந்து நூற்றுக் கணக்கான காவடிகள் எடுத்து வரப்பட்டன. இரு நூறுக்கும் மேற்பட்ட பெண்கள் பாற்குடம் எடுத்து ஊர்வலமாக ஆலயத்தை வந்தடைந்தனர். (ந-ஜ-86)

# சுன்னாகம் தண்ணீரின் தன்மையை உறுதிப்படுத்தாவிட்டால் போராட்டம்

## சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

சுன்னாகம் முதல் பாதிக்கப்பட்ட நான்கு பிரதேச சபைகளிலும் வாழும் மக்கள் பருகுவதற்கான குடி தண்ணீரின் தன்மையை உறுதிப்படுத்தி, நிலத்தடி நீரைப் பாதுகாப்பதற்கு உரிய வகையில் விஞ்ஞான ரீதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

இல்லாதவிடத்து பாதிக்கப்பட்டவர்களில் குறைந்தது 10 ஆயிரம் மக்களை ஒன்று திரட்டி வடமாகாண சபையின் பேரவைச் செயலகம் முன்பாக போராட்டம் நடத்த வேண்டிய நிலைமை உருவாகும். - இவ்வாறு சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பினர் தெரிவித்துள்ளனர்.

சமூக நீதிக்கான வெகுஜன அமைப்பின் ஏற்பாட்டில் சுன்னாகம் கழிவு ஒயில் கலப்பால் பாதிப்படைந்த நீரைக் குடிக்க முடியுமா? குடிக்கக் கூடாதா? என்பதனை தெளிவுபடுத்துவது தொடர்பான கருத்தரங்கு, நேற்று சுன்னாகம் தெற்கு சனசமூக நிலையத்தின் முத்தமிழ் மன்ற மண்டபத்தில் நடைபெற்றது. அதன்போதே இவ்வாறு தெரிவிக்கப்பட் டுள்ளது. இதுகுறித்து மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது-

வடமாகாண சபையால் நியமிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ள ஆய்வறிக்கையை ஏற்றுக் கொள்ள முடியாது. எனவே பாதிக்கப்பட்டுள்ள நிலத்தடி நீரை உரிய வகையில் முகாமை செய்வதற்கான வழிமுறைகள் உருவாக்கப்படுதல் வேண்டும்.

நிபுணர்குழுவின் ஆய்வு தொடர்பாக நம்பகத்தன்மையுடன் கூடிய உறுதியான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். குற்றவாளிகள் கண்டுகொள்ளப்பட்டு அவர்கள் தண்டிக்கப்படுவதுடன் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நிவாரணங்களும் வழங்கப்படுதல் வேண்டும்.

தண்ணீர்த் தாங்கிகளினுடாக வழங்கப்டுகின்ற தண்ணீரின் சுகாதாரத் தன்மைகள் தொடர்பிலும் வெளிப்படைத்தன்மை வேண்டும். உயிர் கொல்லும் ஈயத்தின் கரைசல் கலப்பால் பாதிக்கப்பட்டதாக கூறப்படும் 5 கிணறுகளும் அடையாளப் படுத்தப்படுதல் வேண்டும். ஒரு வருடத்திற்கு மேலாக நொதேன் பவர் நிறுவனம் இயங் காத போதும் மின்தட்டுப்பாடு நிலவவில்லை.

எனவே தேவையற்று இருக்கும் இந்த நிறுவனம் முற்றாக மூடப்படுதல் வேண்டும். நான்கு பிரதேசசபைகளின் பல பகுதிகளில் இன்றும் குடி தண்ணீர் விநியோகம் தடைப்பட்டுள்ளது. இந்தப்பிரதேசங்களில் மக்களுக்கான குடி தண்ணீர் தொடர்சியாக வழங்கப்படுதல் வேண்டும்.

முதலான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டதுடன் மக்கள் நலனில் அரசியல் தலைவர்கள் ஒற்றுமைத்தன்மையுடனும் வெளிப்படைத் தன்மையுடனும், இறையாண்மையைத் தாங்கியுள்ள மக்கள் பிரச்சினைகளை விரைந்து தீர்க்கும் வகையில் செயற்படுதல் வேண்டும்.- என்று தெரிவிக்கப்பட்டது. (ற-ரி5)

# முதியோர்களின் நலன்களுக்காக இந்த வருடம் புதிய செயற்றிட்டம்

## கைதடி முதியோர் இல்ல அத்தியட்சகர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன.25

பெற்றோர்களை பிள்ளைகளே பராமரிக்க வேண்டும். முதியவர்கள் சந்தோசமான மன மகிழ்வாக, ஆரோக்கியமாக வாழ்வதற்கும் சமூகத்தில் அவர்கள் நற்பிரசைகளாக மதிக்கப்படவேண்டும். அதற்கான விழிப்புணர்வு செயற்றிட்டம் இந்த ஆண்டு முதியோர் இல்லத்தால் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு கைதடி முதியோர் இல்லத்தின் அத்தியட்சகர் த. கிருபாகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

எமது சமூகத்தில் பெற்றோர்கள் யாவரும் பிள்ளைகளால் தான் பராமரிக்க வேண்டும். அதற்கான விழிப்புணர்வு செயற்றிட்டத்தை இந்த ஆண்டு முதியோர் இல்லத்தினர் மேற் கொள்வதற்கு திட்டமிடுகின்றனர்.

குறிப்பாக இந்த அரச முதியோர் இல்லத்தில் தங்கியிருக்கும் முதியோர்கள் உட்பட மாவட்டத்திலுள்ள சகல முதியவர்களும் தமது சமூகத்துடன் உறவுகளுடன் மிகவும் மனமகிழ்வுடன் கூடி வாழ வேண்டும்.

வயது முதிர்ந்த இந்த முதியவர்களை கைவிட முடியாது. பிள்ளைகள் உறவுகள் இருந்தும், முதியோர் இல்லங்களை நாடிச் செல்வதைத் தவிர்க்க வேண்டும்.

இவற்றுக்கு எல்லாம் முதியவர்கள் யாவரையும் சந்தோசமான, ஆரோக்கியமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

பிள்ளைகள் தமது தாய்தந்தையரை கைவிடுவதைத் தவிர்க்க வேண்டும். - என்றார் .(ந-ஜ-17)

# அச்சுவேலி சீர் திருத்தப் பாடசாலைக்கு கட்டடம் அமைக்கப்பட்டும் பயனில்லை

## போதிய ஆளணி இன்மையால்

அச்சுவேலி,ஜன.25

அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் சிறுமிகளின் பயன்பாட்டுக்கு என 18 மில்லியன் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் பொருத்தமான ஆளணி இன்மையால் பயன்படுத்தப்படாமல் உள்ளது.

அச்சுவேலி வசாவிளான் வீதியில் நீண்ட காலம் தனித்துவத்தோடு செயற்பட்டு வந்த அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப்பாடசாலை போர்க்காலத்தில் முற்றாக அழிவடைந்ததை அடுத்து 2009 ஆம் ஆண்டுக்குப் பின்னர் புதிதாக கட்டுமானங்கள் மேற்கொள்ளப்பட்டு செயற்பட்டு வருகின்றது.

சிறுவர் சீர்திருத்தப் பாடசாலைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 26 ஏக்கர் நிலப்பரப்பில் அச்சுவேலி சிறுவர் சீர்திருத்தப் பாடசாலையில் சிறுவர் தடுப்பு இல்லம், சான்று பெற்ற பாடசாலை, விவசாயப் பண்ணை போன்ற உட்கட்டுமானங்கள் செயற்படுகின்றன.

இந்த நிலையில் நீதிமன்றங்களால் அறிவுறுத்தப்படும் சிறுமிகள் தங்கி இருப்பதற்கான சான்று பெற்ற பாடசாலை, சிறுமிகள் தடுப்பு இல்லம் என்பனவற்றுக்கான புதிய கட்டடம் 18 மில்லியன் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள போதிலும் இதுவரை பயன்படுத்தப்படாமல் உள்ளது.

சிறுமிகள் பராமரிப்பு மற்றும் பாதுகாப்புக்கான மகளிர் ஆளணி நியமிக்கப்படாமல் இருப்பதாலேயே சிறுமிகளுக்கான புதிய கட்டடம் பயன்படுத்தப்படாமல் உள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-11)

# கூக்குரலிட்டு செல்லும் மாணவரால் சிரமம்

சாவகச்சேரி, ஜன.25

சாவகச்சேரி டச்சு வீதியில் தினமும் மாலைவேளைகளில் தனியார் கல்வி நிலையத்துக்குச் சென்று திரும்பும் மாணவர்கள் கூக்குரலிட்டவாறு செல்கின்றனர் என்று அந்தப் பகுதி மக்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

தினமும் மாலை 6.30 மணி தொடக்கம் 7 மணி வரை வீதியில் சைக்கிள்களில் செல்லும் மாணவர்கள் கூக்குரலிட்டுச் செல்வதால் அந்தப் பகுதியில் உள்ள மாணவர்கள் கல்வி கற்க முடியாத நிலை காணப்படுகின்றது என்றும் அவர்கள் தெரிவித்தனர். (ஜ-9)

# அரச பொது ஊழியர் சங்க புதிய நிர்வாகத் தெரிவு

முல்லைத்தீவு, ஜன.25

அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாகிகள் தெரிவும் நேற்று முன்தினம் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் இலங்கை அரச பொது ஊழியர் சங்க தலைவர் எஸ். லோகநாதன் தலைமையில் நடைபெற்றுள்ளது.

முற்பகல் 10 மணியளவில் ஆரம்பமான புதிய நிர்வாகிகள் தெரிவானது அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் ஆலோசகரும், சமாதான நீதிவானுமாகிய சலீம் தலைமையில் நடைபெற்றது.

புதிய நிர்வாகத்தில் இணைப்பாளராக சி. சற்குணம், மேலதிக இணைப்பாளராக ந. மாசுதன், செயலாளராக வே. விஜயராசா, மேலதிக செயலாளராக கா. அருனகிரியும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் பிரதேச இணைப்பாளராக ஏழு பேரும், உள்ளூராட்சி இணைப்பாளராக ஒருவரும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் முல்லைத்தீவு மாவட்ட கிளையால் பன்னிரண்டு தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் வடமாகாண சபையின் பிரதி அவைத்தலைவர் அன்ரனி ஜெகநாதன், முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் மற்றும் அகில இலங்கை அரச பொது ஊழியர் சங்கத்தின் தலைவர் எஸ். லோகநாதன், வட மாகாண இணைப்பாளர் மகேஸ்வரன், வன்னி மாவட்ட இணைப்பாளர் புண்ணிய மூர்த்தி, மற்றும் யாழ் மாவட்ட இணைப்பாளர் எஸ். சங்கர் மற்றும் ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.(ற-21, ரி7)



# ஆசிரிய கலாசாலை கலைவிழா





வலி வடக்கு, ஜன.25

கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் ஆரம்பக் கல்வி மன்றம் முன்னெடுத்த கலை விழா கலாசாலையின் ரதிலஷ்மி மண்டபத்தில் நடைபெற்றது.

அதிபர் வி.கருணலிங்கம் தலைமையில் இடம்பெற்ற இன்றைய விழாவின் பிரதம விருந்தினராக தென்மராட்சி கல்வி வலயப் பணிப்பாளர் சு. கிருஷ்ணகுமாரும், சிறப்பு விருந்தினர்களாக யாழ்ப்பாணக் கல்வி வலயப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் (கல்வி முகாமைத்துவம்) பொ. அருணகிரிநாதனும் யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் நா.மகேந்திரராஜாவும் கலந்து கொண்டனர். கலாசாலையில் ஆரம்பக் கல்வி பாடநெறியைக் கற்கும் மாணவ ஆசிரியர்களின் கற்கைக்காலம் எதிர்வரும் மார்ச் மாதத்துடன் நிறைவடைவதை முன்னிட்டு ஆரம்பக் கல்வி ஆசிரிய மாணவர்களால் கலை நிகழ்வுகளுக்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. (ந-ஜ-86,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தச்சடம்பன்- புதியநகரில் சமூக விரோத செயல்கள்

## பொலிஸாருக்கு அறிவித்தும் நடவடிக்கை எடுப்பதில்லை என மக்கள் குற்றச்சாட்டு





முல்லைத்தீவு, ஜன.25

ஒட்டுசுட்டான் பிரதேச செயலகத்துக் குட்பட்ட தச்சடம்பன் கிராம சேவையாளர் பிரிவில் பல சமூக விரோத செயல்கள் இடம்பெறுகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ள பொதுமக்கள் அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுத் துள்ளனர்.

சமூக விரோதச் செயல்கள் தொடர்பில் பொலிஸாருக்கும், இராணுவத்தினருக்கும் தெரியப்படுத்தியபோதும் நடவடிக்கைகள் எவையும் எடுக்கப் படவில்லை என்று தெரிவிக்கும் பொது மக்கள், இந்த அசமந்தப் போக்கு சமூக விரோதச் செயல்களுக்கு ஊக்கம் வழங்குகின்றது என்றும் சுட்டிக் காட்டியுள்ளனர்.

தச்சடம்பன் புதிய நகர் கிராமத்தில் 74 குடும்பங்கள் புதிதாக குடியமர்த் தப்பட்டிருந்த நிலையில் பத்துக்கு மேற் பட்ட குடும்பங்கள் புதியநகர் கிராமத்தில் வசிக்காமல் வேறிடத்தில் வாழ்கின்றனர்.

ஆள்கள் குடியிருக்காத வீடுகள், காணிகளுக்கு வரும் ஜோடிகள் வீடுகளில் தங்கி இருந்து செல்கிறார்கள். அதற்கு சிலர் உடந்தையாகவும் இருக்கிறார்கள். அத்துடன் கசிப்பு பரல்களை ஒளித்து வைக்கவும் சில சமூகவிரோதக் கும்பல்கள் குறித்த வீடுகளைப் பயன்படுத்துகின்றனர் என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

இதுகுறித்து தாம் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குத் தெரியப்படுத்தியிருந்த போதும் அவர்கள் எந்த நடவடிக்கையும் எடுத்ததாகத் தெரியவில்லை என்றும் மக்கள் விசனம் தெரிவித்தனர்.

அத்துடன் தச்சடம்பன் கிராம சேவையாளர் பகுதியில் உள்ள கற்கிடங்கு என்னும் கிராமத்தில் சட்ட விரோதமாக காட்டு மரங்கள் வெட்டப்பட்டு வெளியிடங்களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றன. வெளியிடத்து நபர்களே இதனை முன்னின்று நடத்துகின்றனர் என்றும் அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து பொலிசாருக்கும், இராணுவத்தினருக்கும் தெரியப்படுத்தியும் எந்த நடவடிக்கையும் எடுக்கப் படவில்லை என்று குற்றஞ்சாட்டியுள்ள பொதுமக்கள், அவர்களின் அசமந்தப் போக்கு இந்தச் செயல்கள் அவர்களின் ஆசீர்வாதத்துடனேயே நடைபெறுகின்றதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது என்றும் குறிப்பிட்டனர்.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் குறித்து ஒட்டுசுட்டான் பிரதேச அதிகாரிகளிடம் கேட்டபோது, சட்டவிரோதச் செயற்பாடுகளில் ஈடுபடுவோருக்கு எதிராகவும், காடழிப்பில் ஈடுபடுவோருக்கு எதிராகவும் சட்ட நடவடிக்கை எடுக்கப் பட்டு வருகின்றது என்று தெரிவித் தனர்.

புதிய நகர் வீட்டுத் திட்டம் பெண்களைத் தலைமைத்துவமாகக் கொண்ட குடும்பங்களுக்கும், மாற்றுத் திறனாளிகளுக்குமே வழங்கப்பட்டது. அங்குள்ள பெண்கள் கிளிநொச்சியில் உள்ள ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுவதால் குறித்த வீடுகளில் தங்கியிருக்க முடிவதில்லை. அவ்வாறு குடியமராத வீடுகள் சமூக விரோதச் செயற்பாடுகளுக்குப் பயன்படுத்தப்படலாம். இவை தொடர்பில் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

(ற-21,ரி7)



# பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் மன்னாரின் பல இடங்களிலும்

## நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

மன்னார்,ஜன.25

மன்னார் தீவுப்பகுதியில் பல்வேறு இடங்களில் பாதுகாப்பற்ற ரயில் கடவைகள் காணப்படுகின்றன என்றும் அதனால் மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது குறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறிப்பாக தாராபுரம் பிரதான வீதியை ஊடறுத்துச் செல்லும் பகுதியில் பாதுகாப்பற்ற ரயில் கடவை காணப்படுகின்றது. குறித்த ரயில் கடவையில் ரயில் வரும்போது எழுப்பப்படும் சமிக்ஞை ஒலி மாத்திரம் எழுப்பப்படுகின்றது என்று அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

சில நேரங்களில் ரயில் வராத சந்தர்ப்பங்களிலும் நீண்ட நேரம் சமிக்ஞை ஒலி எழுப்பப்படுகின்றது என்றும் அவர்கள் கூறுகின்றனர். இதனால் நீண்ட நேரம் மக்கள் குறித்த வீதியைக்கடக்காமல்நிற்கவேண்டியுள்ளது என்றும் மக்கள் தெரிவிக்கின் றனர்.

எனவே தாராபுரம் பிரதான வீதியை ஊடறுத்துச் செல்லும் ரயில் கடவைக்கு பாதுகாப்பான ரயில் தடை வேலியை அமைத்து ஊழியர்களை கடமைக்கு அமர்த்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மன்னார் தாழ்வுபாடு பிரதான வீதியில் உள்ள ரயில் கடவையில் பல்வேறு இடர்கள் காணப்படு கின்றன என்று அதனூடாகப் பயணிப்பவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

குறித்த ரயில் கடவையிலும் சமிக்ஞை ஒலி மாத்திரமே எழுப்பப்படுகின்றது.

ஆனால் பாதுகாப்பான ரயில் வேலி அமைக்கப் படவில்லை. இதனால் அந்தப் பகுதியால் செல்கின்ற மக்களும்பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சில நேரங்களில் நீண்ட நேரமாகக் காத்து நிற்கும் மக்கள் ரயில் வராததன் காரணத்தினால்சமிக்ஞை ஒலி நிறுத்தப்படுவதற்கு முன் குறித்த வீதியைத் தாண்டிச் செல்கின்றனர் இதனால் திடீர் விபத்துக்களும் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இவை தொடர்பில் அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்என்றுகோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

(ற-ஐ-56)

# நீண்ட கால போர் காரணமாக கலாசாரத்தை இழந்துள்ளோம்

## வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் கருத்து

வவுனியா,ஜன.25

வடக்கில் நடைபெற்ற நீண்டகாலப் போரால் உயிர் இழப்புக்கள், பொருள் இழப்புக்கள் மட்டுமல்ல கலை, கலாசார, விழுமியங்களை நாம் இழந்தவர்களாக உள்ளோம்.- இவ்வாறு வடக்கு சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

வவுனியாவில் இறம்பக்குளத்தில் வடமாகாண கல்வியமைச்சால் மாதாந்த கலை நிலா முத்து நிகழ்வு வடமாகாண கல்வித் திணைக்களத்தின் கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது-

நீண்டகாலப் போரின் பின்பு தமிழ் பேசும் மக்களாகிய நாம் சிங்கள சகோதரர்களுடன் வாழ்ந்து வருகின்றோம். நீண்டகால போரில் பல விடயங்களை நாம் இழந்துள்ளோம். உயிர் இழப்புக்கள், பொருள் இழப்புக்கள் மட்டுமல்ல. கலாசார விடயங்களை, பண்பாட்டு விழுமியங்களையும் நாம் புதைத்தவர்களாக, அதனை நாம் இழந்தவர்களாக உள்ளோம்.

இவ்வாறான விழாக்களில் ஊடாக எமது இனத்தின் அடையாளம், மொழி, கலாசாரத்தை கட்டியெழுப்பக் கூடியதாக உள்ளது. எமது எதிர்கால சந்ததிக்காக அதனை பேணுவதற்கும், சிறப்பான வாழ்வை வாழ்வதற்கும் விழாக்கள் உதவுகின்றன. -என்றார்.

(ற-ஐ-402)

# மன்னார் மாவட்டத்தில் மருத்துவர் பற்றாக்குறை

## 18 வைத்தியசாலைகளில் 78 மருத்துவர்கள் மட்டும் கடமையில்

மன்னார், ஜன.25

மன்னார் மாவட்டத்தின் 18 வைத்தியசாலைகளிலும் நிறைவான வைத்தியசேவைக்காக 124 மருத்துவர்கள் தேவை உள்ள போதிலும், தற்போது 78 மருத்துவர் கள் மட்டுமே மாவட்டத்தில் பணியில் உள்ளனர் என்று மாகாண சுகாதாரத் திணைக்களப் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

மன்னார் மாவட்டத்தின் சுகாதார சேவையின் தேவை அதிகமாக உள்ள போதிலும் அங்கு உள்ள மருத்துவர்களின் வசதியானது போதாமையால் பெரும் நெருக்கடியின் மத்தியிலேயே மருத்துவர்கள் சேவையாற்றுகின்றனர் என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

குறித்த மாவட்டத்தின் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு 62 மருத்துவர்கள் தேவையாக உள்ள போதும், இங்கு 50 மருத்துவர்கள் மட்டுமே பணி புரிகின்றனர்.

இதே போன்று பொது வைத்தியசாலை தவிர்ந்த ஏனைய சகல வைத்தியசாலைகளுக்கும் 62 மருத்துவர்கள் தேவைப்படும் நிலையில் இங்கு 28 பேர் மட்டுமே கடமையில் உள்ளனர்.

மன்னார் மாவட்டத்தின் பொது மருத்துவமனை தவிர்ந்த ஏனைய வைத்தியசாலைகளாக முருங்கனில் ஓர் ஆதார வைத்திய சாலை யும், அடம்பன், தலைமன்னார், பேசாலை, எருக்கலம்பிட்டி, சிலாவத்தை, பண்டாரவெளி, வேப்பங்குளம், மறிச்சுக்கட்டி, ஆகியவற்றுடன், வங்காலை, நாணாட்டான், விடத்தல்தீவு, வெள்ளாங்குளம், பெரியமடு, இரணை இலுப்பைக்குளம், திருக்கேதீஸ்வரம், பெரியபண்டிவிரிச்சான் என 16 கிராமிய வைத்திய சாலைகளுமாக மொத்தம் 18 வைத்தியசாலைகள் உள்ளன.

இவ்வாறு மாவட்டத்தின் பரந்துபட்ட பிரதேசம் எங்கும் வைத்தியசாலைகளின் கட்டடங்கள் மட்டும் அதிகமாக உள்ள போதிலும் வடமாகாணத்தில் மருத்துவர்கள் பற்றாக்குறை உள்ள மாவட்டங்களில் ஒன்றாகவே மன்னார் மாவட்டமும் உள்ளது.

இதேவேளை வவுனியா மாவட்டத்தை பொறுத்தவரையில் மாவட்டத்தின் முழுமையான வைத்திய சேவையை வழங்குவதற்கு 150 மருத்துவர்கள் தேவை இருப்பினும், வவுனியா மாவட்டத்தில் தற்போது 131 பேரே சேவையில் உள்ளனர்.

அதில் மாவட்ட பொது வைத்திய சாலையின்சேவைக்கு 102 மருத்துவர்கள் தேவையான நிலையில், மருத்துவர்கள் தேவையை 98 வீதம் நிறைவு செய்த வட மாகாணத்தின் ஒரேயொரு மாவட்ட வைத்தியசாலையாக வவுனியா பொது வைத்தியசாலையே விளங்குகின்றது. இதன் பிரகாரம் இங்கு 100 மருத்துவர்கள் பணியாற்றுகின்றனர்.

ஏனைய கிராமிய வைத்திய சாலைகளின் சேவைக்காக 48 மருத்துவர்கள் தேவைப்படும் நிலையில் 38 வைத்தியர்களே பணி புரிகின்றனர். அதனால் கிராமிய வைத்தியசாலைகளில் பெருமளவில் மருத்துவர் பற்றாக் குறை இல்லாத போதும் துறை சார் மருத்துவ நிபுணர்கள் 19 பேருக்கு வெற்றிடம் நிலவுகின்றது.

வவுனியா மாவட்டத்தில் பொது வைத்தியசாலைக்கு அப்பால், செட்டிகுளம், சிதம்பரபுரம் ஆகிய இரண்டு ஆதார வைத்தியசாலைகளும்உள்ளதுடன்உளுக்குளம், மாமடுவ, நேரியகுளம், பாவற்குளம், பூவரசங்குளம், சூடுவெந்தபுலவு, கலாபோபஸ்வேவ, ஆகியவற்றுடன், ஓமந்தை, புளியங்குளம், நவ்வி, கனகராயன்குளம் என 11 கிராமிய வைத்தியசாலைகளுடன் மொத்தம் 14 வைத்திய சாலைகள் உள்ளன. (ஐ-101)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒளிமிக்க மாகாணமாக வடக்கை மாற்றுவோம்

## வடக்கு அவைத் தலைவர் தெரிவிப்பு

சாவகச்சேரி,ஜன.24

வட மாகாணத்தை ஒளிமிகுந்த மாகாணமாக மாற்ற வேண்டும் என்று வடக்கு மாகாண சபை தீர்மானித்துள்ளது என்று மாகாண சபையின் அவைத் தலைவர் சி.வீ. கே.சிவஞானம் அறிவித்துள்ளார்.

மாகாண சபையின் 37 ஆவது அமர்வின் போது ஏற்றுக் கொள்ளப்பட்ட எம்மை நாமே சீர்படுத்திக் கொள்வோம் என்னும் தீர்மானம் தொடர்பாக வடமாகாண முதலமைச்சர், சுகாதார அமைச்சர், விவசாய சுற் றாடல் அமைச்சர் ஆகியோருக்கு அவைத்தலைவர் அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

வடமாகாணத்தில் அனைத்துக் கிராமங்களையும் சீர்படுத்தி நகரங்களுக்கு ஈடாக்க வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. தற்போது மழைகாலம் தொடங்கியுள்ள நிலையில் வேலியடைக்கப்பட்டிருக்கும் மரக்கிளைகள் கவனிப்பாரற்று வளர்ந்து பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தி வருகின்றன. உயரமாக வளர்ந்துள்ள மரக்கிளைகள் மின்கம்பிகளில் உராய்ந்து அடிக்கடி மின் துண்டிப்புகள் அண்மைக்காலமாக ஏற்பட்டுவருகின்றன. சிலவேளைகளில் பாரதூரமான உயிராபத்துக்களும் ஏற்பட் டுள்ளன.

பிரதேச செயலகம் , பிரதேச சபைகள், நகரசபைகள் பொதுச் சுகாதார அலுவலகம் , பொலிஸ் திணைக் கள்ம் போன்ற அரச அமைப்புக்களின் ஊடாக எம்மை நாமே சீர்படுத்திக் கொள்வோம் என்ற உயரிய சிந்தனையை மக்கள் மத்தியில் ஏற்படுத்த மாகாண சபையினூடாக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

கட்டுப்பாடற்ற வகையில் வளர்ந்துள்ள வேலிகளின் கிளைகளை மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் வெட்டியழிக்க அறிவுறுத்த வேண்டும். அதனை மீறுவோர் மீது சட்ட நடவடிக்கை எடுத்து சூழலை அழகுபடுத்துவதோடு சீரான மின் விநியோகத்தை ஏற்படுத்தி வடமாகாணத்தை ஒளிமிகுந்த மாகாணமாக மாற்ற வேண்டும்.– என்றார். (ற–ஐ–9)

# அரச, தனியார் பஸ்களுக்கு இணைந்த நேர அட்டவணை

## பெப்ரவரியில் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் பூரணப்படுத்தப்பட்டுள்ளது

யாழ்ப்பாணம், ஜன.25

இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களுக்கான இணைந்தநேர அட்டவணைகள் அடுத்த மாதம் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணத்தில் இருந்து வவுனியா செல்லும் வழித் தடத்துக்கான இணைந்த நேர அட்டவணையும், ஏ–32 வீதியில் பயணிக்கும் பஸ்களுக்கான இணைந்த நேர அட்டவணைகளுமே பூரணப்படுத்தப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தில் பயணிகள் போக்குவரத்தை மக்களுக்கு உகந்த, பாதுகாப்பான போக்குவரத்தாக வழங்கும் திட்டத்தில் போக்குவரத்துச் சபைகளின் இணைந்த நேர அட்டவணை தயாரிக்கும் பணிகள் கடந்த வருடத்தில் மேற்கொள்ளப்பட்டன.

அடுத்த மாதம் நடைமுறைப்படுத்தப்படும் வகையில், இலங்கைப் போக்குவரத்துச் சபை மற்றும் தனியார் பஸ்களுக்கான இணைந்த நேர அட்டவணைகளில், இறுதிக் கட்ட திருத்தம் மேற்கொண்டு முடிவுகள் எடுப்பதற்கான கலந்துரையாடல், கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இதன்போதே முடிவு எட்டப்பட்டுள்ளது என்று வடமாகாண போக்குவரத்துத் துறை அமைச்சர் பா.டெனிஸ்வரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்த இணைந்த பஸ் சேவையைப் போன்று ஏனைய மாவட்டங்களுக்கான இணைந்த நேர அட்டவணை மிக விரைவாகச் சீர்செய்யப்பட்டு நடைமுறைப் படுத்தப்படவுள்ளது.

இவ்வாறு நடைமுறைப்படுத்தப்படும் இணைந்த நேர அட்டவணையை இரண்டு தரப்பினரும் இலாபத்தை மாத்திரம் கருதாமல், மக்களுக்குச் சிறந்த போக்குவரத்துச் சேவையை வழங்கும் வகையில் செயற்படவேண்டும். இந்த அட்டவனை நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் இணைந்த நேர அட்டவணையை மீறும் இரண்டு தரப்பினருக்கும் எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார். (ற–ஐ–ரி5)



காரைநகர் மணற்காடு முத்துமாரி அம்பாள் ஆலய கும்பாபிஷேக தின சங்காபிசேகமும் பாற்குடப் பவனியும் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது. வாரிவளவு கற்பக விநாயகர் ஆலயத்திலிருந்து மகளிரின் பாற்குடப் பவனி இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பெருந்திரளான தவில் நாதஸ்வரக் கலைஞர்களின் நாத மழை இடம்பெற்றது. (ற–ஐ–250)

# கல்வியங்காடு பொதுச்சந்தை விரைவில் புனர்நிர்மாணம்

யாழ்ப்பாணம், ஜன.25

கல்வியங்காடு பொதுச்சந்தை புனர்நிர்மாணம் செய்து அழகு படுத்தப்படவுள்ளது என்று யாழ். மாநகர ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்தார்.

கல்வியங்காடுபொதுச்சந்தைக்கு வருகை தரும் நுகர் வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நுகர்வோரின் எண்ணிக்கை அதிகரிப்பால் சந்தையில் இடநெருக்கடி ஏற்பட்டுள்ளது.

இதன் காரணத்தால் சந்தை வளாகத்தில் மீன் விற்பனைக் கட்டடத்தைச் சற்று அகலமாக்கி நிர்மாணம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதனை விட மழை காலத்தில் சந்தை வளாகத்தில் வெள்ளம் தேங்குவதால் சேறும் சகதியும் ஏற்படுவதோடு மக்கள் சிரமப்பட்டும் வருகின்றனர்.

அதையடுத்து வளாகத்தில் வெள்ளம் தேங்காதவாறு உள்ளகவீதிகள் நிர்மாணம் செய்யப்படவுள்ளன.

அத்துடன் மரக்கறிச் சந்தையும் இதன் மூலம் நிர்மாணம் செய்யப்படும்என்றும்ஆணையாளர் தெரிவித்தார். (ற–ஐ–17)

# கட்டுடை சைவ வித்திக்கு நவீன இரு மாடிக் கட்டடம்

யாழ்ப்பாணம், ஜன.25

கட்டுடை சைவ வித்தியாசாலைக்கு நவீன இரு மாடிக் கட்டடம் அமைக்கப்பட்டுள்ளது.

வித்தியாலயம் பல நூறு வருடங்களாக பழைய கட்டடத் தொகுதியிலேயே இயங்கி வந்த நிலையில் முன்னாள் அதிபர் துரை சிவஞானம் முன் வைத்த எண்ணக்கரு வுக்கு அமைய பல மில்லியன் ரூபா செலவில் நவீன வடிவி லான இரு மாடிக் கட்டடத் தொகுதி அமைக்கப்பட்டுள்ளது.

அதேவேளை கட்டடப் பணிகள் முடிவடைந்து திறப்புவிழா இடம்பெறும் வேளையில் அந்தப் பாடசாலயின் அதிபர் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார். அவரை தொடர்ந்தும் அதே பாடசாலை யில் கடமை புரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கட்டுடை மக்கள் கோரியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ற–ஐ)

# யாழ். நகர்ப் பகுதியில் திரியும் கட்டாக்காலி மாடுகள் ஏலத்தில்

## யாழ்.மாநகர சபை நடவடிக்கை

யாழ்ப்பாணம், ஜன.25

யாழ். நகரில் கட்டாக்காலிகளாகத் திரியும் மாடுகள் அனைத்தும் பிடிக்கப்பட்டு, ஏலத்தில் விற்கப்படவுள்ளன என்று யாழ் மாநகர சபை ஆணையாளர் பொ. வாகீசன் தெரிவித்துள் ளார்.

யாழ். நகரப் பகுதியில் அண்மைக் காலமாக அதிகரித்துள்ள கட்டாக்காலி மாடுகளால் பல்வேறு விபத் துக்களும், போக்குவரத்து இடையூறுகளும் ஏற்பட்டு வருகின்றன.

நகரத்தில் மக்களுக்குப் பெரும் இடையூறாக மாறியுள்ள கட்டாக்காலிகளை இல்லாது செய்வது தொடர்பான திட்டம் அண்மையில் யாழ் மாநகர சபையால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் தற்போது மாநகர எல்லையில் சுற்றித்திரியும் மாடுகளைக் கைப்பற்றி அவற்றை ஏலத்தில் விடுவதற்கான ஏற்பாடுகள் அடுத்த வாரத்துக்குள் முன்னெடுக்கப் படவுள்ளது என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது–

முதற்கட்டமாக தற்போது ஒரு மாடு பிடிக்கப்பட் டுள்ளது. எனினும் இது வரையில் இந்த மாட்டுக்கு உரிமை கோரப்படவில்லை அதனால் மாட்டை மாநகரசபையே பராமரித்து வருகின்றது.

எனவே உரிய அறிவித்தல் விடுக்கப்பட்டு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை இந்த மாட்டை ஏலத்தில் விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். இதற்கு அடுத்த கட்டமாக நகரில் கட்டாக்காலிகளாகத் திரியும் அனைத்து மாடுகளையும் அடுத்தவாரம் பிடிப்பதற்கு நடவ டிக்கை எடுக்கப்படவுள்ளது.

இவற்றைப் பராமரிப்பதற்காக முற்றவெளிப் பகுதிக்கு அருகில் இடம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்தப் பகுதியில் மாடுகள் அனைத்தும் 7 நாள்களுக்குக் கட்டி வைக்கப்படும். குறித்த 7 நாள்களுக்குள் மாட்டுக்கு உரியவர்கள் உரிமைகோராதவிடத்து பொது அறிவித்தல்கள் விடுக்கப்பட்டு மறுநாள் மாடுகள் அனைத்தும் ஏலத்தில் விற்கப்படும்.

எனினும் மாடுகளுக்கு உரிமைகோருபவர்கள்மேல் எதுவிதமான நீதிமன்ற செயற்பாடுகளும்மேற்கொள்ளப்பட மாட்டாது. மாறாக மாடுகள் கைப்பற்றப் பட்ட தினம் முதல், மாநகர சபையால் பராமரிக்கப்பட்ட தினம் வரையில் ஏற்பட்ட செலவுகளுக்கான அறவீட்டுடன் தண்டப் பணம் விதிக்கப்பட்டு உரியவர்களிடம் மாடுகள் கையளிக்கப்படும்.– என்றார். (ற–ஐ–ரி5)

# காவேரி கலாமன்ற ஒன்றுகூடல்

வலி.வடக்கு, ஜன.25

வடக்கில் சமூகப் பணியாற்றும் காவேரி கலாமன்றத்தின் ஒன்றுகூடல் கடந்த சனிக்கிழமை மாலை யாழ்ப்பாணம் கிறீன் கிறாஸ் விருந்தினர் விடுதியில் நடைபெற்றது.

வண. கலாநிதி ரி. எஸ். யோசுவா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் பிரதி அதிபர் ச.லலீசன் அதிதிப் பேச்சாளராகக் கலந்து கொண்டார். கலைகளின் ஊடாகச் சமுதாய வளர்ச்சி என்ற பொருளில் சிறப்புரை யும் இடம்பெற் றது.

நிகழ்வில் முன்னாள் பேராயர் எஸ். ஜெபநேசன், வண. ஏ.எஸ். தேவகுணா னந்தன், யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபர் கலாநிதி நோயல் விமலேந் திரன், அக்கராயன் மகா வித்தியாலய பிரதி அதிபர் பெருமாள் கணேசன், கிளிநொச்சி மாவட்ட கலாசார உத்தியோகத்தர் அருட்சந்திரன் உட்படப் பலர் கலந்து கொண்டனர். நிகழ்வில் கலாமன்றச் செயற்பாடுகளுக்கு வலுவூட்டும் வட்டுக்கோட்டை கதிர்காமர் குடும்பத்தினருக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் கொழும்பில் வாழும் 90 வயதுடைய சறோ கதிர்காமர் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார். (ற–ஐ–86)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மின்வாசிப்பு டிஜிற்றல் மீற்றர் பொருத்தும் பணிகள் ஆரம்பம்

## பாவனையாளர்கள் மின் கட்டணங்களை முகாமைத்துவம் செய்வதற்கு வசதியாக






கொழும்பு, ஜன.25
இலங்கை மின்சார சபையினால், மின்னிணைப்பு வழங்கப்பட்ட வீடுகளுக்கு மின் பாவனையை அளவிடும் டிஜிற்றல் மீற்றர் பொருத்தும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.
இதன்மூலம் மின்பாவனையாளர்கள் குறைந்த கட்டணம் அறவிடும் காலப்பகுதியில் தமது அதி உச்ச மினபாவனையை பெற்றுக்கொள்ளக் கூடிய வகையில் முகாமைத்துவம்செய்யும்திட்டம்நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.
குறித்த டிஜிற்றல் மீற்றர் பொருத்துவதற்கு வாடிக்கையாளர்களிடம் 8 ஆயிரத்து 700 ரூபா கட்டணம் மூன்று கட்டங்களாக அறிவிடப்படும் என இலங்கை மின்சார சபையின் உதவிப் பொது முகாமையாளர் பந்துல திலகசேன தெரிவித்துள்ளார்.
இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-
இலங்கை மின்சார சபையால் மின்வாசிப்பு டிஜிற்றல் மீற்றர் பொருத்தும் பணிகள் கடந்த 2011 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட போதும், பொதுத் தேவைகள் மற்றும் பெரியளவில் மின் இணைப்பை பெற்றுள்ள நிறுவனங்களுக்கு மாத்திரம் பொருத்தப்பட்டது.
எனினும்தற்போது வீடுகளுக்கான மின் இணைப்புகளுக்கு பொருத்துவதற்கானபணிகளை இலங்கை மின்சார சபை ஆரம்பித்துள்ளது.
குறித்த டிஜிற்றல் மீற்றர் பொருத்துவதற்கான கட்டணமாக 8 ஆயிரத்து 700 ரூபா அறவிடப்படும். குறித்த அறவீட்டுத் தொகையை மூன்று கட்டங்களாக பிரித்து வாடிக்கையாளர்கள் செலுத்தலாம்.
எனினும் நவீனமுறை ஸ்மாட் மீற்றர் தற்போது பொருத்தப்படவில்லை. குறித்த டிஜிற்றல் மீற்றரை லங்கா எலெக்ரிசிற்றி கம்பனி என்ற நிறுவனம் ஊடாக தயாரிக்கப்படுகிறது. இந்த டிஜிற்றல் மீற்றர் அனைத்து வீடுகளுக்கும் குறிகிய கால எல்லைக்குள் பொருத்த முடியாது.
தற்போது, பயன்பாட்டில் உள்ள சுழலும் தட்டு மீற்றருக்கு பதிலாகவே டிஜிற்றல் மீற்றர் பொருத்தப்படுகிறது. இதன்மூலம் இருவழித் தொடர்பு திறன் இல்லை. எனினும் குறித்த மீற்றருக்கான இணைப்பின் மின்வாசிப்பு அளவை தொலைவிலிருந்து அளவீடு செய்வதற்கு வசதிகள் உண்டு.
இந்த டிஜிற்றல் மீற்றர் மூலம் பாவனையாளர்கள் கட்டண நேர அளவீட்டை அறிந்து கொள்ள முடியும்.
குறித்த மீற்றரில் கட்டண அளவீட்டு முறை பகல் நேரம், கட்டண அதிகரிப்பு நேரம் மற்றும் கட்டணம் குறைவடைந்த நேரம் என மூன்று பிரிவுகளாக ஒழுங்கமைக்கப்பட்டிருக்கும்.
இதில் காலை 6.30 மணிதொடக்கம்மாலை 4.30 மணி வரை பகல்நேர கட்டண அறவீட்டுக் காலமாகவும் மாலை 6.30 மணி தொடக்கம் இரவு 10.30 மணி வரை அதிஉச்ச கட்டண அறவீட்டு காலமாகவும் இரண்டு காலப்பகுதிக்கும் இடைப்பட்ட நேரங்கள் குறைந்த கட்டண அறவீட்டு காலமாகவும் பிரிக்கப்பட்டுள்ளன.
இதன்மூலம் பாவனையாளர் தமது சலவை இயந்திரம்பாவனைமற்றும் மின்சாரக் கார்களுக்கான சார்ச் போன்ற அதி உச்ச மின் பாவனை காலப்பகுதியை கட்ட ணம் குறைவான நேரப்பகுதிக்கு ஒத்தி வைக்க முடியும். மினசாரக் கார்கள் வருகையை அடுத்தே குறித்த திட்டத்தை விரைவுபடுத்தியுள்ளோம். குறிப்பாக, டிஜிற்றல் மீற்றர் பொருத்தப்பட்டதும் மின்வாசிப்பு அளவு கட்டுப்பாட்டு நிலையத்திலிருந்து றிமோல்ட் மூலம் பெறப்படும். இதன் மூலம் தற்போது நடைமுறையிலுள்ள மின்வாசிப்பு பதிவேட்டை பேணும் முறை தவிர்க்கப்படும்.
அத்துடன், குறித்த திட்டத்தினால் பெரியளவில் மின்னிணைப் பெற்றுள்ளவாடிக்கையாளர்களுக்கான மின்பட்டியல் மின்னஞ்சல் ஊடாகவே அனுப்பப்படுகிறது.
அத்துடன் குறித்த மின்பட்டியலில் கடந்த கால மின்பாவனை தொடர்பான விவரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்கும். எனினும், தற்போது சுழலும் தட்டு மின்வாசிப்பு மீற்றர் பொருத்தப்பட்ட பாவனையாளர்களுக்கான கட்டண அளவீடு மூன்று வகையல்லாமல் ஒரு வகையிலேயே அறவிடப்படுகிறது -என்றார். (வ)

### மத்திய கலாசார நிதியத்தின் நிதி மோசடி விசாரணைக்கு

கொழும்பு,ஜன.25
மத்திய கலாசார நிதியத்தில் இடம்பெற்றுள்ளதாகக் தெரிவிக்கப்படும் பல நிதிமோசடிகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு கொழும்பு பிரதம நீதிவான் கிஹான் பிலபிட்டிய நிதிக் குற்றங்கள் விசாரணைப் பிரிவுக்கு உத்தரவிட்டிருந்தார்.
மத்திய கலாசார நிதியத்துக்கு உரித்துடைய இடங்கள் (அநுராதபுரம், பொலனறுவை, சிகிரியா) தொடர்பில் 5லட்சம் இறுவட்டுக்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்த போது 18 மில்லியன் ரூபா நிதி மோசடி, சிகிரியா உள்ளிட்ட உரித்துடைய இடங்களை பார்வையிடுவதற்கு வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு விநியோகிக்கப்படும் ரிக்கெற்றுக்களைக் களாவாக அச்சிட்டு நிதி மோசடி உள்ளிட்ட மோசடிகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ளுமாறு பிரதம நீதிவான் நிதிக் குற்றங்கள் விசாரணைப் பிரிவுக்குப் பணித்துள்ளார்.
இந்த மோசடிகள் இடம்பெறும் காலத்தில் முன்னாள் தொல்லியல் பணிப்பாளர் நாயகமும் அவர்களதுஎண்ணப்படி செயற்பட்டிருந்ததாக கணக்காளர் நாயகத்தின் அறிக்கையில் குறிப்பிடப் பட்டிருந்ததாகவும் பொலிஸார் நீதிமன்றத்துக்குத் தெரியப்படுத்தியிருந்தனர். (த-ஐ-22)

### 1980 இல் தொழில் இழந்துள்ளோருக்கு ஒரே தடவையில் 2 லட்சத்து 50 ஆயிரம்

கொழும்பு, ஜன. 25
1980 ஆம் ஆண்டின் ஜூலை வேலை நிறுத்தம் காரணமாக தொழில்களை இழந்துள்ளோருக்கு ஒரே தடவையில் 2 லட்சத்து 50 ஆயிரம் ரூபா வழங்குவது தொடர்பாக வரவு- செலவுத்திட்டத்தில் முன்வைக்கப்பட்டிருந்த, முன்மொழிவுகளின் பிரகாரம் அந்தக்கொடுப்பனவுகளைச் செலுத்தும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. தேசிய சேமிப்பு வங்கியில்வங்கிக்கணக்குகளை வைத்திருப்போருக்கு ஏற்கனவே அந்தப் பணத் தொகைகள் செலுத்தப்பட்டிருப்பதோடு, இலங்கை வங்கி மற்றும் மக்கள் வங்கிகளில் வங்கிக் கணக்குகளை வைத்திருப்போருக்கு பணச் செலுத்தல்கள் விரைவு படுத்தப்படவுள்ளதாகவும் நிதியமைச்சின் தகவல்கள் தெரிவித்துள்ளன. (த-ஐ-22)

## நீதிமன்றுக்கு விவரங்களை வழங்கவில்லை ராணுவம்

### பிரகீத் காணாமற்போனமை தொடர்பில்

கொழும்பு, ஜன.25
லங்கா ஈ நியூஸ் ஊடகவியலாளர் பிரகீத் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் குறித்த விவரங்களை நீதிமன்றுக்கு இராணுவம் இன்னமும் வழங்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.
இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
ஊடகவியலாளர் எக்னெலிகொட காணாமற்போன சம்பவம் குறித்த விவரங்களை வெளியிடுமாறு ஹோமாகம நீதவான், அண்மையில் இராணுவத் தளபதிக்கு உத்தரவிட்டிருந்தார்.
எனினும், விசாரணைகளுக்காக கிரித்தலே இராணுவ முகாமுக்கு சென்ற குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு தேவையான ஆவணங்களை இராணுவத்தினர் வழங்கவில்லை என தெரிவிக்கப்படுகிறது.
எக்னெலிகொட புலிகளுடன் தொடர்பு பேணியமைக்கான ஒலிப்பதிவு ஆதாரங்கள் காணப்பட்டால், ஏன் அவரை இராணுவத்தினர் கைது செய்யவில்லை என குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கேள்வி எழுப்பியுள்ளனர்.
பல தடவைகள் கோரிக்கை விடுக்கப்பட்ட போதிலும் சட்ட மா அதிபர் இந்த விடயத்தில் தலையீடு செய்யத் தவறியுள்ளதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
இதேவேளை- விசாரணைகளை முடக்கவோ- இடையூறு செய்யவோ- முயற்சி எடுக்கப்படவில்லை எனவும்- விசாரணைகள் வெளிப்படைத் தன்மையுடன் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும்- பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவரின் உள்ளங்களுக்கு ஏற்புடைய பாடத் திட்டம்

## தயாரிக்கப்படவேண்டும் என்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன

யாழ்ப்பாணம், ஜன. 25

சிறுவர் உள்ளங்களுக்கு ஏற்புடைய வகையில் பாடசாலைப் பாடத் திட்டங்களைத் தயாரிப்பதில் கல்வி அமைச்சு கவனம் செலுத்த வேண்டுமென்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.



5,6ஆகியதரங்களுக்குத் தற்போது நடைமுறையில் இருக்கும் பாடத் திட்டங்களில் பல்வேறு சிக்கல்கள் காணப்படுவதாகவும் அதனால் மாணவர்கள் பல அழுத்தங்களுக்கு உட்பட்டுள்ளதாகவும் பெற்றோர்களிடம் இருந்து தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி, இது தொடர்பில் கவனம் செலுத்துமாறு கல்வி அமைச்சின் அதிகாரிகளுக்குப் பணிப்புரை விடுத்தார்.

கல்வித்துறையில் புதிய சீர்திருத்தங்கள் தொடர்பில் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அதில் ஜனரஞ்சகப் பாடசலை எண்ணக்கரு தொடர்பில் இங்கு கவனம் செலுத்தப்பட்டதோடு, பிரதான பாடசாலைகள் சகலவற்றையும் ஜனரஞ்சகப் பாடசாலை மட்டத்துக்கு அபிவிருத்தி செய்து அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகளைக் கண்டறிவது தொடர்பிலும் ஜனாதிபதி கல்வி அமைச்சின் அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்.

தான் எந்தவொரு ஜனரஞ்சகப் பாடசாலைக்கும் எந்தவொரு பிள்ளையையும் சேர்த்துகொள்வதற்குக் கடிதங்கள் வழங்கவில்லை என்றும், எல்லா பாடசாலைகளையும் ஒன்று போல் அபிவிருத்தி செய்து பிள்ளைகளுக்குச் சம கல்வி வாய்ப்புக்களை பெற்றுக்கொடுப்பதே நோக்கம் என்றும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

அதுபோன்று 5ஆம் தரப் புலமைப் பரிசில் பரீட்சைக்கு பெற்றோர்களிடம் காணப்படும் போட்டித்தன்மை காரணமாக பிள்ளைகள் முகம் கொடுக்கும் அழுத்தங்கள் தொடர்பிலும் கவனம் செலுத்திய ஜனாதிபதி, எல்லோரினதும் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகளை கவனத்திற்கொண்டு அதற்கான ஒரு புதிய நிகழ்ச்சித் திட்டத்தைத் தயாரிக்குமாறும் ஆலோசனை வழங்கினார்.

இன்று இலங்கையில் தற்கொலை செய்துகொள்ளும் விகிதம் மிக வேகமாக அதிகரித்து வருவதுடன், அதற்கு பாடசாலைக் கல்வியில் பிள்ளைகள் முகம்கொடுக்கும் பிரச்சினைகள் எவ்வளவு தூரம் பாதிப்பு செலுத்துகின்றது என்பது தொடர்பில் கண்டறியுமாறும் ஜனாதிபதி கல்வி அமைச்சுக்கு ஆலோசனை வழங்கினார்.

> நாட்டின் இலவசக் கல்விக்கொள்கையை பலப்படுத்தி நவீன தொழில்நுட்பத்துடன் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொடுப்பது புதிய அரசாங்கத்தின் நோக்கம்.

நாட்டின் இலவசக் கல்விக்கொள்கையைப் பலப்படுத்தி நவீன தொழில் நுட்பத்துடன் பிள்ளைகளுக்குச் சிறந்த கல்வியைப் பெற்றுக்கொடுப்பது புதிய அரசின் நோக்கம். அக்கொள் கைகள் மற்றும் திட்டங்களை வகுக் கின்றபோது கல்வி அதிகாரிகளுக்கு முக்கிய பொறுப்பு இருப்பதாகவும் சுட்டிக்காட்டினார்.

கல்வி இராஜாங்க அமைச்சர் வீ.இராதாகிருஷ்ணன், பல்கலைக்கழக இராஜாங்க அமைச்சர் மொஹான் லால் கிரேரு, கல்வி அமைச்சின் செயலாளர் டப்ளியு.எம்.பந்துசேன, தேசிய கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் குணபால நாணயக்கார ஆகியோரும் இக்கலந்துரையாடலில் கலந்துகொண்டனர். (த-4)

# சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சை; 6 வைத்தியர்களுக்கு எதிராக மனு

கொழும்பு,ஜன.25

சட்டத்துக்கு விரோதமாக சிறுநீரக மாற்றுச் சத்திரசிகிச்சைகளை மேற்கொண்டமை குறித்துஇலங்கையிலுள்ளமூன்றுதனியார் வைத்தியசாலைகளின் ஆறு வைத்தியர்களுக்கு எதிராக இந்தியப் பொலிஸ் வழக்குகளைத் தொடுக்கவிருப்பதாக ஹிந்து பத்திரிகை தெரிவித்துள்ளது.

இந்தியாவில் இருந்து சிறுநீரக நோயாளர்கள் மற்றும் சிறுநீரகங்களைத் தானமாக வழங்கும் நபர்களை இலங்கைக்குவரவழைத்து, இலங்கையிலுள்ள தனியார் வைத்தியசாலைகள் மூன்றில் சிறுநீரகங்கள் பொருத்தப்படுவது பற்றி அண்மையில் தகவல்கள் வெளியாகியிருந்தன.

சிறுநீரக வர்த்தகமொன்றில் ஈடு பட்டுள்ள நபரொருவரைக் கைது செய்த தன் பின்னரே இந்திய தெலுங்கான மா நிலத்தின் நல்கொண்டா பொலிஸாரினால் இது சம்பந்தமாகத் தேடிக் கண்டறியப்பட்டிருந்தது.

கைது செய்யப்பட்டிருந்த நபர் மற்றும் அவரது நண்பரும் இது போன்ற 60 சிறுநீரக மாற்றுச் சத்திர சிகிச்சைகளை மேற்கொள்வதற்கு ஒத்துழைப்பு வழங்கியிருந்ததாக நல்கொண்டா பொலிஸார் தெரிவிப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய இலங்கையில் உள்ள 6 வைத்தியர்களுக்கு எதிராக வழக்குகள் தொடுக்கப்படும் எனவும் இந்திய பொலிஸ் துறை தெரிவிக்கிறது. (த-ஐ-22)




## போக்குவரத்து விழிப்புணர்வு

வீதி விபத்துக்களைத் தவிர்க்கும் வகையில் கிளிநொச்சி முருகானந்தாக் கல்லூரி மாணவர்களுக்கான வீதிப் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான விழிப்புணர்வு செயல்முறை கிளிநொச்சி போக்குவரத்துப் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் நடத்தப்பட்டது. கல்லூரிக்கு முன்பாக உள்ள மஞ்சள் கோட்டுக் கடவையில் போக்குவரத்து விதிமுறைகள் தொடர்பான விளக்கம் பொலிஸாரால் மாணவர்களுக்கு வழங்கப்பட்டது. (ற-ஐ-21)



# தனியார் ஊழியரின் சம்பளம் தொடர்பில் புதிய சட்டமூலம்

## விரைவில் நாடாளுமன்றில் பிரேரணை

கொழும்பு, ஜன.25

தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் ஊழியர்களின் மாதந்த அடிப்படைச் சம்பளம் ஆகக் குறைந்தது 10,000 ரூபாவாகவும் தினமொன்றுக்கு ஆகக்குறைந்த நாள் கூலியாக 400 ரூபாவையும் தேசிய ரீதியாக நடைமுறைக்குக் கொண்டுவரும் வகையிலான பிரேரணை விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

தேசியரீதியில்ஆகக்குறைந்த அடிப்படைச் சம்பளத்தை நடைமுறைக் கொண்டு வருவதற்கான சட்டம் இயற்றுவதற்காகவே குறித்த பிரேரணைநாடாளுமன்றில்சமர்ப்பிக்கப்படவுள்ளதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

குறித்த சட்டம் 2016 ஜனவரி முதலாம் திகதி நடைமுறைப்படுத்தப்படவுள்ளதாகவும் அரச தரப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அத்துடன், தொழில் வழங்குநர் ஒவ்வொரு ஊழியர் தொடர்பான வேலைப் பதிவேட்டை தொழில் நிறுவனத்தில் பேணவேண்டும் என உத்தேச சட்டத்தில் உள்ளடக்கப்படவுள்ளது. குறித்த பதிவேட்டில் ஒவ்வொரு ஊழியரின் வேலையின் வகுப்பு, வழங்கப்படும் சம்பள அளவுத்திட்டம் போன்ற விவரங்கள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

மேலும், ஊழியர் தொடர்பான பதிவேட்டை ஆராயும் அதிகாரம் தொழில் திணைக்கள் அதிகாரிகளுக்குள்ளது. இதன்மூலம் ஊழியர் ஒருவருக்கு உரிமைகள் மறுக்கப்படுவது கண்டறியப்படும் போது, தொழில் வழங்குநருக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுப்பது குறித்து உத்தேச சட்ட மூலத்தில் குறிப்பிடப்படவுள்ளது.

அத்துடன், குறித்த உத்தேச சட்டமூலத்தில் தனியார் ஊழியர்களுக்கு வரவு செலவுத்திட்ட நிவாரண கொடுப்பனவாக 1,500 ரூபா வழங்குவதற்கும் உத்தேச சட்டமூலத்தில் உள்ளடக்கப்படும் என அரச தரப்பு தகவல்கள் தெரிவிக்கின்றன. (வ)

# சிப்பாய்களின் 3ஆவது பிள்ளைக்கான 1 லட்சம் ரூபா கொடுப்பனவு நிறுத்தம்

கொழும்பு, ஜன.25

படைச் சிப்பாய்களின் மூன்றாது பிள்ளைக்காக வழங்கப்பட்டு வந்த ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவு இந்த ஆண்டுடன் நிறுத்தப்பட்டுள்ளது.

கடந்த அரசு, படைச் சிப்பாய்களுக்கு நன்றி பாராட்டும் வகையில் இந்தக் கொடுப்பனவை வழங்கியிருந்தது.

எனினும், இந்தமுறை வரவு-செலவுத் திட்டத்தில் முப்படை மற்றும் பொலிஸ் திணைக்களம் [illegible] சேவையாற்றி வருவோருக்கு பிறக்கும் மூன்றாவது பிள்ளைக்கு வழங்கப்பட்டு வந்த ஒரு இலட்சம் ரூபா கொடுப்பனவுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

இதனால் கொடுப்பனவு வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளதாக குறித்த தரப்புக்களுக்கு சுற்றுநிரூபம் ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளது. (த-ஐ-ரி5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பெண்களுக்கு அரசியலில் அதிகபங்கு: பொதுநலவாய பார்வையாளர் குழுவின் பரிந்துரை பயன் தருமா?

இலங்கையில் கடந்தவருடம் ஓகஸ்ட் 17 ஆம் திகதி நடந்து முடிந்த பொதுத் தேர்தல் தொடர்பாக ஆய்வு நடத்தியிருந்த பொதுநலவாய பார்வையாளர்கள் குழு (கொமன் வெல்த் ஒப்சேர்வர் குரூப்) வழங்கியுள்ள இறுதி அறிக்கையில் தேர்தல்களில் அரசு கடைப்பிடிக்கக்கூடிய பல பரிந்துரைகளில் பெண்களும் இலகுவாக தேர்தல்களில் பங்குபற்றும் வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளது.

கடந்த பொதுத் தேர்தலில் ஒன்பது பெண்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். தேசியப்பட்டியல் மூலமும் ஒருவர் தெரிவுசெய்யப்பட்டார். முழு நாடாளுமன்ற ஆசனங்களையும் கணக்கில் எடுத்தால் இது 5 வீதமே என்பது தெரியவந்துள்ளது.

அரசியலில் பெண்களின் பங்களிப்பு தொடர்பான விடயத்துக்கு முன்னுரிமை வழங்கும்படி பொதுநலவாய குழு வலியுறுத்தியுள்ளது.

பொதுப்பணிகளில் குறிப்பாக அரசியலில் பெண்களுக்கு தகுந்த இடம் வழங்கப்படுவதில்லை என்பது பொதுவான குற்றச்சாட்டாக இருந்துவருகின்றது. பெரும்பாலான இடங்களில் ஆண்களின் ஆக்கிரமிப்பு மேல் எழுவதால் பெண்களுக்குரிய வாய்ப்புக்கள் பறிக்கப்பட்டு விடுகின்றன. சமூகத்தில் பெண்களுக்கெதிராக இடம்பெறும் வன்செயல்கள் குறைவடைவதற்கு பொது அமைப்புகளிலும் அரசியலிலும் அதிக மதிமாக அவர்களின் பங்களிப்பு இருப்பது அவசியமாகும்.

பெண்களின் தேவைகள், அவர்கள் எதிர் கொள்ளும் நெருக்கீடுகள் இன்னும் இவை போன்ற பிரச்சினைகளை பெண்களைப் போன்று விளங்கிக் கொண்டுசெயற்படும் அளவுக்கு ஆண்கள் அக்கறை காட்டுவதில்லை அல்லது அவர்களுக்கு அவைகளில் உள்ள உள மற்றும் உடல் ரீதியான சிக்கல்கள் புரிவதில்லை என்பதான குற்றச்சாட்டுக்கள் இருந்துவருகின்றன.

அதனால் சட்டங்களை உருவாக்கும் சபைகளில் ஆண்களுக்கு சமமான அளவு இல்லாவிட்டாலும் நியாயமான அளவு உறுப்புரிமை பெண்களுக்கு இருப்பது அவசியமாகக் கருதப்படுகின்றது.

பொதுவாக ஆசிய நாடுகளில் பெண்களின் அரசியல் துறை பங்களிப்பானது அவர்களின் எண்ணிக்கைகளுக்கு இணையாக காணப்படவில்லை. அடிப்படையில் அரசியல் கட்சிகள் இதனை ஒரு முக்கிய பிரச்சினையாக எடுத்துக் கொள்ளாமல் இருப்பதுவே இதற்குக் காரணம். அதனால்தான் அரசியல்கட்சிகள் நாடாளுமன்றத்தில் பெண் உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரிக்கச் செய்யும்படி குழு பரிந்துரைத்துள்ளது. கட்சிகளின் வேட்பாளர் பட்டியல்களில் அல்லது தேசிய பட்டியல்களில் பெண்களுக்கென ஒரு குறிப்பிட்ட தொகையினர் வேட்பாளர்களாக அறிவிக்கப்படும் விதத்தில் அதனை கட்டாயமாக்கும்படி குழு பரிந்துரைத்துள்ளமை வரவேற்புக்குரியது.

பொதுநலவாய பார்வையாளர் குழு பரிந்துரைத்துள்ள இன்னுமொரு முக்கிய விடயம் வாக்குகள் எண்ணப்படும் முதல் கட்டத்திலேயே சாதாரண வாக்காளர்களின் வாக்குகளையும் தபாலில் வரும் வாக்குகளையும் ஒரே சமயத்தில் ஒன்றாகக் கலந்து எண்ணவேண்டும் என்பதாகும். இது வாக்களிப்பின் இரகசியத்தன்மையை காப்பாற்ற உதவும் என்று குழுவினர் கருதுகிறார்கள்.

எண்மர் கொண்ட பொதுநலவாய பார்வையாளர் குழுவானது இலங்கை தேர்தல் ஆணையாளரின் அழைப்பின்பேரில் மோல்டாவின் முன்னாள் அதிபர் கலாநிதி ஜோர்ஜ் அபேலாவின் தலைமையில் இலங்கைக்கு வந்து இந்த ஆய்வுகளை நடத்தியிருந்ததுடன் குழுவின் அறிக்கையின் பிரதிகள் இலங்கை அரசு, தேர்தல் ஆணையாளர் மற்றும் அரசியல் கட்சிகளுக்கும் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரியவந்துள்ளது.

பொதுத் தேர்தலை தேர்தல் ஆணையாளர் நடத்தியிருந்த முறையை உயர்ந்த மட்ட நேர்மைத்தன்மையுடன் நடத்தியிருந்தார் என பொதுநலவாய பார்வையாளர் குழுவினர் பாராட்டியிருந்தனர்.

தகவலறியும் சட்டம் நிறைவேற்றப்படுவதன் அவசியத்தையும் வலியுறுத்தியுள்ள அக்குழுவினர் தேர்தல் நடைமுறைகளின் வெளிப்படைத் தன்மையை அது மேலும் வலுப்படுத்துவதாக இருக்கும் என்பதையும் சுட்டிக்காட்டியுள்ளது.

அரசமைப்பொன்றை புதிதாக உருவாக்குவதில் தீவிரமாக இறங்கியுள்ள சிறிசேன - ரணில் அரசு பொதுநலவாய பார்வையாளர் குழுவினர் வழங்கியுள்ள பரிந்துரைகளை புதிய அரசமைப்பில் சேர்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு செய்வது நாட்டுக்கும் நல்லது அரசின் கோரிக்கையை ஏற்று ஆய்வு நடத்திய பொதுநலவாய பார்வையாளர் குழுவின் பணியும் பயன்பட்டதாக அமையும்.

# முதலமைச்சர் கனவில் மூழ்கியுள்ள அரசியல் கட்சிகள்





**சேரலாதன்**

தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலுக்கான திகதி நெருங்கிவரும் நிலையில் தேர்தல் நடவடிக்கைகள் அங்கு சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டன. தமிழ் நாட்டின் தற்போதுள்ள அரசியல் சூழ்நிலையில் மாற் றங்கள் ஏற்பட்டுள்ளதையும் அவதானிக்க முடிகின்றது. தமிழ்நாட்டைப் பொறுத்தவரை தி.மு.க அல்லது அ.தி.மு.க. ஆகிய கட்சிகளைச் சேர்ந்த தலைவர்களே முதலமைச்சர் பதவியை வகிப்பது வழக்கம். இந்த இரண்டு கட்சி களே மாறி மாறி ஆட்சி அமைத்து வருகின்றன.

ஆனால், இந்த முறை முதலமைச்சர் பதவிக்குரிய கனவில் பலர் மூழ்கி இருப்பதைக் காண முடிகின்றது. வழக்கமாக வெற்றி பெறக்கூடியவர்கள் எனக்கருதப்படும் கட்சியினரே முதலமைச்சர் பதவி தொடர்பாகப் பிரஸ்தாபிப்பார்கள். ஆனால் இதில் இன்று மாற்றம் ஏற்பட்டுள்ளது. காங்கிரஸ் கட்சியின் அகில இந்தியச் செய்தித் தொடர்பாளர் என்ற பதவியை வகிக்கும் நடிகை குஷ்பு, தமிழ் நாட்டின் அடுத்த முதலமைச்சர் ஈ.வீ.கே.எஸ். இளங்கோவன் தான் என்று கூட்டமொன்றில் வைத்து முழங்கியிருக்கிறார். இளங்கோவன் காங்கிரஸ் கட்சியின் தமிழ்நாடு பிரிவின் தலைவராகப் பதவி வகித்து வருகின்றார். அப்போது இளங்கோவனும் அங்கே அமர்ந்திருந்ததைக்காணமுடிந்தது.

குஷ்பு இளங்கோவனை மகிழ்ச்சிப்படுத்துவதற்காக இதனைக் கூறி இருக்கலாம்.

தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில் காங்கிரஸ் கட்சி அடிமட்ட நிலைக்குச் சென்று விட்டது. அகில இந்திய அளவில் காங் கிரஸ் ஒரு தேசியக்கட்சியாக உள்ளபோதிலும் தமிழ்நாட்டைப் பொறுத்த வரையில் செல்வாக்கை இழந்த நிலையில் காணப்படுகின்றது.

அதிலும் இளங்கோவன் பதவிக்கு வந்தபின்னர் நிலைமை மிகவும் மோசமாக மாறிவிட்டது. இந்தநிலையில் இளங்கோவன் தான் தமிழ்நாட்டின் அடுத்த முதலமைச்சர் என குஷ்பு கூறியிருப்பதுதமிழ்நாட்டுமக்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தி விட்டது. 1967 ஆம் ஆண்டு வரை காங்கிரஸ் ஆட்சிதான் இந்தியாவில் கோலோச்சியது. ஆனால் அறி ஞர் அண்ணா இதனை மாற்றி யமைத்தார்.

1967 ஆம் ஆண்டு இடம் பெற்ற சட்டமன்றத்தேர்தலில் அண்ணா தலைமையிலான தி.மு.க. அமோக வெற்றி பெற்று ஆட்சியைப் பிடித்தது. அன்றிலிருந்து திராவிடக்கட்சிகளே தமிழ்நாட்டில் மாறி மாறி ஆட்சி செய்து வருகின்றன. முதலமைச்சர் பதவியும் அவற்றுக்கு உரியதாகி விட்டது. இந்த நிலையில் தான் தற்போது முதலமைச்சர்பதவி தொடர்பான வாதப் பிரதிவாதங்கள் எழுந்துள்ளன.

பா.ம.க. நிறுவுநர் ராமதாஸ் தமது ஒரே புதல்வரான அன்புமணியை முதலமைச்சர் பதவிக்கு முன்னிறுத்துவதில் முனைப்புடன் செயற்பட்டு வருகின்றார். அன்பு மணியை முதலமைச்சராக ஏற்றுக் கொள்பவர்களுடன் மட்டுமேதேர்தல்கூட்டணிஅமைக்கப்படும்எனவும்அவர் அறிவித்து வருகின்றார். வன்னியர் இனமக்களைப் பிரதிநிதித்துவம் செய்யும் பா.ம. க. வுக்கு தமிழ்நாட்டில் பலமான வாக்குவங்கி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை - தே.மு.க. தலைவர் விஜயகாந்தையும், ம.தி.மு.க.தலைவர் வைக்கோவையும் அடுத்த முதலமைச்சர் எனச் சிலர் சித்திரித்து வருகின்றனர். இது எந்தளவுக்குச்சாத்தியமாகும் என்பது தெரியவில்லை.

தி.மு.கவைப் பொறுத்தவரையில் கலைஞர் மு.கருணாநிதி உயிருடன் இருக்கும் வரை அவருக்கு மாற்றீடாக எவரையும் எண்ணிப் பார்க்க முடியாது. அ.தி.மு.கவைப் பொறுத்தவரையில் எல்லாமே தற்போதைய முதலமைச்சர் ஜெயலலிதாதான். எதிர்வரும் சட்டமன்றத்தேர்தல், தமிழ்நாட்டு மக்களின் தலைவிதியைத்தீர்மானிக்கின்ற ஒன்றாக அமையப் போகின்றது. கட்சிகள் முதலமைச்சர் கனவிலிருந்து தம்மை முதலில் விடுவித்துக்கொள்ள வேண்டும். ஊழலில் ஈடுபடாத, மக்களுக்கு சேவையாற்றக் கூடியவர்களையே அந்தப்பதவி யில் அமர்த்த வேண்டும். அப்போது தான் ஊழல் இல்லாத நல்லாட்சி ஒன்று தமிழ்நாட்டில் மலரும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தியத்தேவர்

# ஏனையவர்களை மதிக்கும் பண்பு அரசியலில் வேண்டும்

வாக்குறுதிகளை வழங்குவதும் பேசித்தீர்த்துக் கொள்வோம் எனச் சொல்லிச் சொல்லியே பிரச்சினைகளைத் தட்டிக் கழித்து காலத்தை நீட்டிக் கொண்டிருப்பதும் நாட்டின் வழமையாகி விட்டது. இது பிரச்சினைகளை வளர்க்க உதவுமேயன்றி அவற்றுக்கான தீர்வாக அமையாது. தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து இடம் பெற்ற இவ்வாறான ஒரு இழுத்தடிப்பே இலங்கையில் இடம் பெற்ற மோசமான போருக்கு அடித்தளமாக அமைந்தது. அதனால்தான் மீண்டும் ஒரு போர் ஏற்படாதவாறு சமாதானத்திற்கான அடித்தளம் அமைய வேண்டும் என்பதை அரசு ஏற்றுக்கொண்டுள்ளது. புத்தபெருமான் இன்றிருந்தால் நல்லாட்சி அரசை உதைத்துத்தள்ளியிருப்பார் என்பது உதய கம்மன்பிலவின் கருத்து. இது ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருந்தவர்களால் இப்போது உணரப்படும் ஒன்றாகியுள்ளது. சந்திரிகா அம்மையாரும் கூட இதைத் தற்சமயம் ஒப்புக் கொண்டுள்ளார்.

புத்தபெருமான் தர்மத்தின் நாயகன். எல்லா உயிர்களும் ஒன்றே என்பதையும் அவைகளுக்குத் துன்பம் நிகழக் கூடாது. துன்பங்களை ஏற்படுத்தக் கூடாது என்று போதித்த மகான் அவர். தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான அரசும் அவரது போதனைகளைக் கவனத்தில் கொண்டு ஒரு நீதியான நல்லாட்சியை இந்த நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்று அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டுகின்றது. இப்படியான ஒரு நல்ல நோக்கத்தைக் கொண்டவர்களை எட்டி உதைப்பாரா புத்த பெருமான். அன்றேல் உயிர்களைக் கொன்று அவற்றின் உதிரத்தில் உல்லாசமாக வாழக் கனவு காணும் உதய கம்மன்பில போன்ற உயிர்க் கொல்லிகளை உதைப்பாரா? யாரை எட்டி உதைப்பார் அவர் என்பதைக் கூட உணர்ந்து கொள்ள முடியாதவர் உதய கம்மன்பிலவே.

மீண்டும் ஒரு பிரபாகரன் உருவாகக் கூடாது என்பதில் சிங்களத்தலைமைகளிடையே கருத்து வேறுபாடு கிடையாது. உதய கம்மன்பிலவும் இந்தக்கருத்தில் மறுதலிப்பற்றவராகவே இருப்பார் என்பதில் ஐயமில்லை.



“தற்போதைய ஜனாதிபதி மைத்திரிபாலசிறிசேன தலைமையிலான அரசும் அவரது போதனைகளைக் கவனத்தில் கொண்டு ஒரு நீதியான நல்லாட்சியை இந்த நாட்டில் ஏற்படுத்த வேண்டும் என்று அதற்கான முயற்சிகளை முன்னெடுப்பதில் ஆர்வம் காட்டுகின்றது.”

**பிரபாகரன் எவ்வாறு தோன்றினார்?**

கடந்தகாலங்களில் சாத்வீக முறையில் அகிம்சை வழியிலும் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண விரும்பாத தமிழ்மக்களின் நியாயமான கோரிக்கைகளுக்கும் போராட்டங்களுக்கும் செவிமடுக்காமல் நாங்கள்தான் எல்லாமும். நமக்கு மட்டுமே இந்த நாடு என்று திமிர்பிடித்த சிங்களத்தலைமைகளே பிரபாகரன் முளைக்கக் காரணமானவர்கள். இந்தியா, பாகிஸ்தான், சீனா, அமெரிக்கா போன்ற நாடுகள் பிரபாகரனுக்கு ஆதரவு நல்காவிடினும் கூட, அவருக்கெதிராக சிங்கள அரசியல் தலைமைகளுக்கு உதவி செய்யாதிருந்தால் நாட்டின் தலை எழுத்து வேறுபட்டிருந்திருக்கவும் கூடும். இப்படிப்பட்ட ஒரு சூழலில் இருந்து ஒரு வகையாக நாடு விடுபட்டு இப்போது சமாதானம், ஐக்கியம் என்ற நிலையை உருவாக்க முனையும் தருணத்தில் உதய கம்மன்பில, விமல் வீரவன்ச போன்ற; சந்திரிகா அம்மையார் நினைத் தது போன்றவர்கள் தொடர்ந்தும் இலங்கையை இம்சைக்கு உள்ளாக்க முனைந்தால் மீண்டும் ஒரு பிரபாகரன் உருவாக்கக்கூடாது என்ற எண்ணம் சாத்தியப்படுமா? போன புத்தி ஆனை கட்டி இழுத்தாலும் வராது என்பதுதான் நியதி. தமிழர்களும் இந்த நாட்டின் மக்கள் என்ற நியாயமான புத்தி சிங்களத் தலைமைகளிடம் இருந்து ஏற்கனவே தொலைந்து போன ஒன்று. அதனால் தான் சிறுபான்மை இனங்களும் ஏனையவர்கள் போல் உரிமைகள் பெற்ற இனமாக வாழவேண்டும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் மனதில் தோன்றியுள்ளது. முடிந்தவரை அதனை நிறைவேற்ற வேண்டுமென அவர் விரும்பியுள்ளார். எனினும் தன் புத்தியும் இல்லாமல் பிறர் புத்தியையும் கேளாமல் அலையும் தொண்ணூற்றி எட்டுப் புத்திக்காரர்கள் போல முட்டாள்களால் அரசுத்தலைவர் விரும்பும்.ஐக்கியம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக் கோரும் ஐக்கிய இலங்கைக்குள் சமஷ்டி அரசமைப்புமுறை என்பன உருவாகுமா என்பது கேள்விக்குரியதே.

**கோத்தவின் விருப்பம்**

இனவாதத்தை தமதுவாழ்வாதாரமாகக்கொண்டுள்ள விமல் வீரவன்ச, உதயகம்மன்பில கும்பலுடன் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்சவும் சேர்ந்து கொள்ளத் துடிக்கிறார் போலும். மக்கள் விரும்பினால் அரசியலுக்கு வருவேன் என அவர் சூளுரைக்கத் தொடங்கியுள்ளார். தமது தனித்துவத்தைப் பேணாது ஏனையவர்களின் தனித்துவத்துக்கும் மதிப்பளிக்கும்மனிதர்களே அரசியலுக்குவரத் தகுதியானவர்கள் என்பதை முதலில் தெரிந்து கொள்ள வேண்டும்.

# வெல்லப்பட வேண்டிய வேண்டுகோள்கள்

யாழ்.மாவட்டத்தின் அதிக தேவைகளை உருவாக்கும் இடங்கள் மூன்று. அவையாவன:-
திருநெல்வேலி,நல்லூர், கொக்குவில் ஆகும்.

திருநெல்வேலியானது பெரியதொரு சந்தையையும், சிறந்த பல்கலைக்கழகத்தையும், பிரபல்யமான தனியார் மருத்துவ மனையையும் மற்றும் வங்கிகள், வர்த்தக நிலையங்களையும், விவசாயப்பண்ணைகளையும் கொண்டுள்ளது.

இதன் பொருட்டு பல இடங்களிலிருந்தும் மக்களின் தேவைகள் திருநெல்வேலியை நோக்கி குவியம் கொள்வது தவிர்க்க முடியாததாகும். அதேபோல திருநெல்வேலியை நோக்கியே மக்களும் நெருக்கமாகக் குடியமருகின்றார்கள்.

இரண்டாவது, நல்லூர் இலங்கையிலே புனித நகராகிறது. பிரசித்தி பெற்ற ஆன்மிக ஆலயங்கள், ஆதீன பீடங்கள், மண்டபங்கள், தொண்டு நிறுவனங்கள், சங்கிலியன் தோப்பு , திணைக்களங்கள் , பிரதேச செயலகம், மாநகர சபை, தீயணைப்புப் பிரிவு, பூங்காக்கள், கம்பன் கழகம், இந்து, கிறிஸ்தவ மன்றங்கள், விடுதிகள், வர்த்தக வங்கி நிறுவனங்கள் என இந்த நகரை நோக்கித் தினமும் படையெடுக்கின்றனர். இத்தகு நிலை வரவர இன்னும் அதிகரிக்குமே தவிர குறைய வாய்ப்பே இல்லை.

மூன்றாவதாக, யாழ்ப்பாணத்தை அண்மித்த அடர்த்தியான மக்கள் வசிக்கும் இடம் கொக்குவில் ஆகும். பிரபல்யமான பாடசாலைகள், பிரபல்யமான ஆலயங்கள், அழகான சந்தை, பஞ்சாங்க கேந்திர நிலையம், வங்கிகள், தொழில்நுட்பக்கல்லூரி, புகையிரத நிலையம், வர்த்தக நிலை யங்கள் என கொக்குவிலுக்கு மகிமை சேர்க்கின்றன. மேற்கூறப்பட்ட இடங்களுக்கு மாணவர்களும், பேர றிஞர்களும், அறிவாளிகளும், விவசாயிகளும், ஆன் மிக வாதிகளும், பாமர மக்களும், தொழிலாளிகளும், முதலாளிகளும், அரசியல்வாதிகளும், ஆராய்ச் சியாளர்களும், குறிப்பாக வர்த்தகப் பெருமக்களும் நிறையவே வருகை தருகிறார்கள். இத்தகையோரில் பெரும்பாலானோர் வசதி, வாய்ப்பு, வாகன வசதி குறைந்தவர்களேயாவர். இவர்களது தேவைகள் எளிதாக நிறைவேற போக்குவரத்து ஒழுங்குகள் மிகவும் முக்கிய மானதாகும்.

**வேண்டுதல்கள்**

யாழ்ப்பாணத்திலிருந்து, காங்கேசன் துறை வீதி, பலாலி வீதி, பருத்தித்துறை வீதி வழியாகப் போக்குவரத்துச் சேவைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன. ஆனால் குறுக்கு வெட்டாக முக்கியமான இடங்களைத் தொடர்வதாகப் போக்குவரத்துச் சேவைகள் நடைபெறுவதில்லை. அவை பின்வருமாறு அமையலாம்.

1.நாச்சிமார் கோயிலிலிருந்து நல்லூர் வரைக்குமாக - திருநெல்வேலியை ஊடறுத்துச் செல்லுகின்ற இச் சேவையானது மூளாயிலிருந்து ஆரம்பித்து முத்திரைச்சந்தி வரை முடிவுறுவதாக அமைதல் வேண்டும்.

2. கொக்குவில் சந்தியிலிருந்து கச்சேரி வரைக்குமாக, திருநெல்வேலி மருத்துவபீடத்தையும், சந்தையும் ஊடறுத்துச் செல்கின்ற இந்தச் சேவையானது, மானிப்பாயில் இருந்து ஆரம்பித்து இணுவில் ஊடாகவோ அல்லது மருதனார்மடம் ஊடாகவோ சென்று கச்சேரியை அடைவதாக அமைதல் வேண்டும்.

3. உப்புமடம் கோண்டாவில் சந்தியிலிருந்து கோப்பாய் ஆசிரிய பயிற்சிக்கலாசாலையூடாக, பருத்தித்துறை வீதியையடைந்து நல்லூருக்குச் செல்லும் வகையில் இந்தச் சேவை அமைதல் வேண்டும். இந்தச் சேவையை மருதனார்மடம் சந்தியிலிருந்து நல்லூருக்காய் அமைவது பொருத்தமானது.

**தனிப்பட்டது**

பெரிய பாடசாலைகள் தத்தமக்கே சொந்தமாக இரண்டு பேருந்துகளைக் கொள்முதல் செய்து சேவையில் ஈடுபடுத்துவார்களாக இருந்தால், மாணவர்கள் தெருவில் அந்தரிக்கும் அனாவசியமான தொந்தரவுகளை, காத்திருப்புக்களை, வெயிலில் காய்வதை, பெற்றோர்களின் வேதனையை, தேவையற்ற மூன்றாமவரின் பார்வைகளைத்தவிர்க்கலாம் அல்லவா? புத்திஜீவிகள் இதுபற்றி ஏனோ மௌனிப்பதேனோ! இதுவும் தரும காரியங்களாகும்.

**அடிப்படைத் தேவைகள்**

குறிப்பாகக் கழிப்பறை தொடக்கம் - கல்வி வரை, அடுக்களை தொடக்கம் ஆஸ்பத்திரி வரை ஏராளமான தேவைகள் தினம் தினம், கணம் கணம் பாமரமக்களிடம் தேங்கியிருக்கும் போது, நாம் அவர்கள்பால் கொண்டுள்ள வேண்டுதல்களைக் கொஞ்சமாவது இறங்கி, இரங்குவதற்கு ஆவன செய்வதும், வெல்ல வைப்பதும் அனைவரதும் தார்மீகப் பொறுப்பு ஆகும்.


கே.எஸ்.சிவஞானராஜா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிரியாவில் வான்வெளித் தாக்குதல்

## 7 சிறுவர்கள் உட்பட 29 பேர் சாவு


பெய்ரூட், ஜன.25
சிரியாவில் ஐ.எஸ். தீவிரவாதிகளின் ஆதிக்கம் உள்ள இடங்களில் அமெரிக்கா தலைமையிலான கூட்டுப்படை உள்ளிட்ட பல்வேறு தரப்பினர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.



பாரிஸ் தாக்குதலைத் தொடர்ந்து ஐ.எஸ். மீதான தாக்குதலைத் தீவிரப்படுத்த பிரான்ஸ் நாடுகள் சூளுரைத்தன. இதனிடையே ரஷ்யாவும் தனது பங்குக்கு சிரியாவில் தாக்குதல்களை நடத்தி வருகிறது.
இந்த நிலையில் சிரியாவில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட வான்வெளித் தாக்குதலில் சுமார் 29 பேர் கொல்லப்பட்டனர். சிரியாவின் கிழக்குப் பகுதியில் நடைபெற்ற இந்தத் தாக்குதலை ரஷ்யாவின் போர் விமானங்கள் நடத்தியதாக சிரிய கண் காணிப்பு குழு ஒன்று தெரிவித்துள்ளது.
காஸம் கிராமத்தில் நடைபெற்ற இந்தத் தாக்குதலில் 7 சிறுவர்கள் மற்றும் ஒரு பெண்ணும் கொல்லப்பட்டதாக அந்தக் கண்காணிப்புக் குழு தெரிவித்துள்ளது.
10 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளதாகவும், அதனால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக் கூடும் என்றும் கண்காணிப்புக் குழு தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

# பொலிஸாரிடம் சிக்கிய திருடர்கள்

குவின்ஸ் டவுன், ஜன.25
கார்த் திருடர்கள் குழு ஆட்டு மந்தை குறுக்கிட்டதால், பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவம் நியூசிலாந்தில் ஒற்றாகோ பகுதியில் இடம்பெற்றுள்ளது.
கார் திருடர்களைப் பொலிஸார் கைது செய்வதற்கு முயற்சித்தனர். ஆனால் அவர்கள் காரில் விரைவாகச் சென்றனர். பொலிஸாரும் தொடர்ந்து துரத்தினர்.
கிட்டத்தட்ட 90 நிமிடங்கள் பொலிஸாரால் துரத்தப்பட்டனர். இறுதியாக 150 ஆடுகளைக் கொண்ட மந் தைக் கூட்டம் வீதியைக் கடக்க முற்பட்டதால் திருடர்கள் தப்பிச் செல்ல முயன்ற பாதையை மறித்தது.
இதனால் திருடர்கள் பொலிஸாரிடம் சிக்கினர். இந்த சம்பவத்தில் 4 திருடர்கள் கைது செய்யப்பட்டனர். (ஐ-ரி4)





# அமெரிக்காவில் பனிப்புயல்

## 85 மில்லியன் மக்கள் பாதிப்பு; 18 பேர் சாவு

வொஷிங்டன், ஜன.25
அமெரிக்காவின் கிழக்கு பகுதியில் பெரும் பனிப்புயல் ஏற்பட்டுள்ளது. 20 மாநிலங்களைச் சேர்ந்த 85 மில்லியன் மக்கள் இதனால் பாதிக்கப்பட்டுள்ளனர். குறைந்தது 18 பேர் உயிரிழந்ததுடன், பலர் வாகன விபத்துகளுக்குள்ளானார்கள் என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.
வரலாறு காணாத பனிப்புயல் தாக்கியுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சுமார் 102 சென்ரி மீற்றர் உயரத்துக்கு இந்தப் பனிப்பொழிவு இடம்பெற்றுள்ளது. இதனால் நியூ யோர்க்கில் போக்குவரத்து ஸ்தம்பிக்கப்பட் டுள்ளது.
20 மாநிலங்கள் கடும் பனிப்புயலால் பாதிக்கப்பட்டுள்ளன. ஆயிரக்கனக்கான வீடுகள் மின்சாரமின்றி இருப்பதுடன், பெரும் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டுள்ளன.
வொஷிங்டன் நகரில் 86 சென்ரி மீற்றர் அளவுக்கு பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. போக்குவரத்துக்கள் கட்டுப்படுத்தப்பட்டதுடன், பாலங்கள் மூடப்பட்டுள்ளன. அவசரகால உதவி பணியாளர்களும், ...
களது வாக...
களும் சாலை...
பயணிக்க ...
அத்துடன் 7...
போக்குவர...
நிறுத்தப்பட்...
அத்துடன் ...
டுள்ளது. அ...
ளன. வான்...

# பிரான்ஸ் எல்லையில் பதற்றம்

பாரிஸ்,ஜன.25
பிரான்ஸின் எல்லையில் வசித்து வரும் அகதிகள் கலேஸ் துறைமுகத்தை முற்றுகையிட்ட சம்பவத்தால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.
பிரிட்டனின் உள்நாட்டுப் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு அகதிகளுக்கு அந்த நாடு கட்டுபாடு விதித்துள்ளது.
இதன் காரணமாக பிரிட்டனுக்குச் செல்ல முடியாத அகதிகள் பிரான்ஸின் எல்லையோரத்தில் குடிசைகள் அமைத்து வசித்து வருகின்றனர்.
மிகவும் மோசமான நிலையில் உள்ள இந்தக் குடியிருப்பில் 2 ஆயிரம் பேர் வரை வசித்து வருகின்றனர்.
இந்த நிலையில் பிரான்ஸ் இடதுசாரிகள் சார்பில் அகதிகளுக்கு ஆதரவாக ஆர்ப்பட்டம் நடைபெற்றது. இதில் ஏராளமானோர் கலந்துகொண்டனர். அதன் போது 500 இற்கும் மேற்பட்ட அகதிகள் பொலிஸ் தடுப்பைத் தாண்டி கலேஸ் துறைமுகப் பகுதிக்குள் புகுந்தனர்.
மேலும் 50 இற்கும் மேற்பட்டோர் பிரிட்டனுக்குச் செல்லும் கப்பலில் ஏற முயற்சி செய்துள்ளனர். இதனால் பரபரப்பு ஏற்பட்டது. இதையடுத்து பொலிஸார் கண்ணீர் புகைக் குண்டுகளை வீசியும் தண்ணீரைப் பீச்சியடித்தும் அவர்களை விரட்டியடித்தனர். இதன் காரணமாகத் துறைமுகம் மூடப்பட்டது.
இந்த சம்பவத்தால் வீதியில் ஏராளமான வாகனங்கள் அணி வகுத்து நின்றன.
இதையடுத்து யூரோ டனலும் மூடப்பட்டுள்ளது.
இந்தச் சம்பவத்தால் பிரான்ஸ் எல்லையில் பதற்றம் ஏற்பட்டுள்ளது. (ஐ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாயமான மலேசிய விமானத்தின் இன்னொரு பாகம் தாய்லாந்தில்?

யாங்கொங்,ஜன.25
தாய்லாந்துக் கடற்கரையில் மலேசிய விமானம் ஆர்370 இற்குச் சொந்தமான பாகங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

மலேசியாவின் கோலாலம்பூரில் இருந்து சீனாவின் பீஜிங்க்கு 239 பயணிகளுடன் சென்ற விமானம் கடந்த 2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் மாயமானது.

நீண்ட தேடலுக்குப் பின்னர் இந்த விமானம் கடலில் விழுந்து மூழ்கியிருக்கலாம் என்று அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில் கடந்த செப்ரெம்பர் மாதம் பிரான்ஸ் நாட்டுக்குச் சொந்தமான தீவில் கண்டுபிடிக்கப்பட்ட இறக்கை காணாமற்போன விமானத்தின் இறக்கையாக இருக்கலாம் என்று பிரான்ஸ் கூறியது.

மலேசிய அரசும், கண்டுபிடிக்கப்பட்ட இறக்கை ஆர்370 விமானத்துக்கு சொந்தமானதாக இருக்கலாம் என்று கூறியது.

இந்த நிலையில் தாய்லாந்தின் கடற்கரை அருகே மிதந்து வந்த மர்மப் பொருள் ஒன்றை கிராமத்தினர் கைப்பற்றியுள்ளனர்.

இது, மலேசிய விமானம் ஆர் 370யின் பாகமாக இருக்கலாம் என்று உள்ளூர் ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

எனினும் அந்தப் பொருள் விமானத்துக்குச் சொந்தமானது தான் என்று அரசின் சார்பாக எந்தத் தகவலும் வெளியிடப்படவில்லை.

முன்னதாக, விமானம் விபத்துக்குள்ளாகி அதிலிருந்தவர்கள் அனைவரும் சாவடைந்துள்ளனர் என்ற கூற்றை விமானத்தில் பயணம் செய்தவர்களின் உறவினர்கள் நம்ப மறுத்துள்ளனர்.

மேலும் விமானத்தில் பயணம் செய்தவர்கள் அனைவரும் பிணைக்கைதிகளாக வேறு எங்காவது மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)



# ஐ.நா.வில் 15 நாடுகளுக்கு வாக்களிக்க உரிமையில்லை

ஜெனீவா,ஜன.25
ஐ.நா.வுக்குச் செலுத்த வேண்டிய வருடாந்த நிதிப் பங்களிப்பை செலுத்தத் தவறிய 15 நாடுகள், ஐ.நா.வில் வாக்களிக்கும் உரிமையை இழக்கவுள்ளன.

தற்போது ஐ.நா. பாதுகாப்புச் சபையில் உறுப்பினராக உள்ள வெனிசுலாவும் இதில் அடங்கும். அந்த நாடு மட்டும் ஐ.நா. வுக்கு மூன்று மில்லியன் டொலர்கள் அளவுக்கு நிதி செலுத்த வேண்டியுள்ளது.

வாக்களிக்கும் உரிமையை இழந்த ஏனைய நாடுகளின் பட்டியலில் பஹ்ரைன், லிபியா, மாலி மற்றும் புருண்டி ஆகியவை உள்ளன.

ஐ.நா.வின் தடைகள் விதிக்கப்பட்டிருந்த ஈரானும் வாக்களிக்கும் உரிமையை இழக்கவிருந்த நிலையில், தனது பங்களிப்பைத் தற்போது செலுத்தியுள்ளது.

உள்நாட்டுப் போர் அல்லது கடும் வறுமையை எதிர்கொள்ளும் ஐந்து நாடுகள் பங்களிப்பு அளிக்கவில்லை என்றாலும் அவைகளுக்கான வாக்களிக்கும் உரிமையை ஐ.நா. நீக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# படகு கவிழ்ந்து 44 அகதிகள் சாவு

ஏதென்ஸ்,ஜன.25
போரால் பாதிக்கப்பட்டுள்ள சிரியாவிலிருந்து ஏராளமானோர் ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்கின்றனர். இவ்வாறு துருக்கியில் இருந்து கிரேக்க நாட்டுக்குச் சென்ற போது, நடுகடலில் நேற்று முன்தினம் இரு படகுகள் கவிழ்ந்தன.

இந்த விபத்தில் 20 சிறுவர்கள் உட்பட 44 பேர் கடலில் மூழ்கி இறந்தனர். மேலும் பலரைக் காணவில்லை எனக் கூறப்படுகிறது. இதுவரை 74 பேரை மீட்டுள்ளதாக துருக்கியின் கடலோரக் காவற்படையினர் தெரிவித்துள்ளனர். (ஐ)

ல்

ல்



ளும், அவர்
து வாகனங்
ம்சாலையில்
னிக்க அனுமதிக்கப்பட்டுள்ளனர்.
துடன் 700 இற்கும் அதிகமான விமானப்
க்குவரத்துச் சேவைகள் தற்காலிகமாக
ந்தப்பட்டுள்ளன.
துடன் பெரும் வெள்ளப்பெருக்கும் ஏற்பட்
ளது. அரச அலுவலகங்கள் மூடப்பட்டுள்
. வானிலை மையத்தால் மேலும் பனிப்பொழிவுக்கான எச்சரிக்கை விடுக்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

நியூயோர்க், டென்னிசே, ஜார்ஜியா, கென்டக்கி, வடக்கு கரோலினா, நியூஜெர்சி, வெஸ்ட் வெர்ஜினியா, மேரிலேண்ட், பென்சில் வேனியா, கொலம்பியா உள்ளிட்ட 11 மாகாணங்களில் அவசர நிலை பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. (ஐ-ரி4)

நியூசிலாந்தில் நடக்கும் மீன் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. சுற்றுலாப் பயணிகளால் தற்செயலாக அந்த மீன் அவதானிக்கப்பட்டதுடன், அதனை ஆய்வு கூடத்துக்குக் கொண்டு வந்து சேர்த்துள் ளனர். அது அங்லர் மீன் வகையைச் சார்ந்தது எனவும், இது மிகவும் அரிதான வகை எனவும் ஆய்வாளர்களால் தெரிவிக்கப்பட்டதுடன், மரபணு ஆய்வுக்குட்படுத்தப் பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-ரி4)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை ஒரு சவால்

அரியாலையூர்
மிஷாந்தி செல்வராஜா

ஆம்! மனிதா வாழ்க்கை ஒரு சவாலே. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருமே பல பிரச்சினைகள், போராட்டங்களுடன் தான் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆனால் தாம் வாழும் வாழ்க்கையை திருப்தியான மனநிலையில் வாழ்ந்து கொண்டிருப்பவர்களாக இருப்பது மிகவும் அரிதாகக் காணக்கூடியதாக உள்ளது. ஏனெனில் வாழ்க்கை பற்றி தெளிவான விளக்கமின்மை என்றே கூறலாம். ஒவ்வொரு மனிதனும் அறிவு பூர்வமாக சிந்திப்பதைவிட வெறும் உணர்வுகளுக்குக் கட்டுண்டு உணர்ச்சிகளுக்கு அடிமையாகி அந்த உணர்வுகளுக்கே அடிமைத்தனமாகியும் தெளிவான முடிவுகளைப் பெறமுடியாமல் வாழ்க் கையை வாழ முடியாமல் சிக்கித் தவிக் கின்றார்கள்.

மனித வாழ்வு என்பது வெறும் உடல் ரீதியான உணர்வுகளின் முடிவில் வாழ்ந்து முடிப்பதல்ல. நாம்அனைவரும்ஏதோவொரு நல்லதொரு இலக்கை நோக்கி வாழும் மனிதர்களாகச் செயற்பட வேண்டும். அந்த இலக்குகளில் தன்னம்பிக்கை வைத்துச் செய்யும் ஒவ்வொரு காரியங்களிலும் பற்றும் வைத்துச் செயற்படவேண்டும். பற்றுடன் செயற்பட்டாலே தான் எம் இலட்சியப் பாதையை முற்று முழுதாக நிறைவேற்ற முடியும். ஏனோ பிறந்தோம், வளர்ந்தோம் ,சாப்பிட்டோம் என்று வீணாக வாழ்வை வாழ்ந்து முடிக்காமல், எமது சிந்தனை, அறிவு என்பவற்றைப் பிரயோகித்து பூமியிலுள்ள இயற்கை வளங்களைப் பயன்படுத்தி மனித வாழ்வின் முன்னேற்றப் பாதையை உருவாக்கி மனிதனாக வாழ்ந்து மன தளவில் தைரியசாலிகளாக வாழ்ந்து ஏனைய மனிதர்களையும் தாழ்வு மணப் பாங்கின்றி வாழக் கற்றுக் கொடுக்க வேண்டும்.

மனிதர்களாகப் பிறந்த நாம் அனைவரும் தினமும் ஒவ்வொரு பிரச்சினைகளையும் சந்திக்க நேரிடுகிறது. பிரச்சினையை சந்தித்து அதனை சுமுகமாகத் தீர்த்து நாம் எமது வாழ்க்கையை முன்னேற்றிக் கொள்ள எமது மனநிலையைத் திடப்படுத்திக்கொள்ள வேண்டும். மனதளவில் தைரியசாலிகளாக நாம் விளங்கி அனைவருக்கும் எடுத்துக்காட்டாய் விளங்குவதன் மூலம் வாழ்க்கையில் ஏற்படும் பல பிரச்சினைகளை இலகுவாக நீக்கிக்கொள்ள முடியும். பிரச்சினைகளைச் சந்திக்கும் போது தான் எமது ஆறாம் அறிவை பிரயோகிக்க நேரிடுகிறது. வெறும் உணர்வு ரீதியாக முடிவுகளை எடுத்து வேதனைப் படுவதைவிட அறிவுபூர்வமாக சிந்தித்து அஞ்ஞான இருளை அகற்றுவதன் மூலமே மனதில் தெளிவு பிறக்கிறது. எமது மனநிலையும் ஆரோக்கியம் அடைகிறது.

பிரச்சினைகளைக் கண்டு ஓடி ஓடி ஒளிவதால் பிரச்சினைகள் எம்மை விட்டு நீங்கிப் போய் விடப்போவதில்லை. அச்சம் கொண்டு ஓடும்போது மரத்தில் ஒட்டிக் கொண்ட புழுப்போல பிரச்சினையும் எமது மனதில் தொற்றிக்கொண்டு தேவையில்லாத பல மனக்குழப்பங்களுக்கு ஆள்படுத்தித் தப்பான முடிவுகளை எடுத்துக்கொள்கின்றது. இதனால் எம்மை நாமே சித்திரவதை செய்து எமது உடலையும் உயிரையும் நீக்கிக் கொள்ளும் அளவுக்கு தற்கொலை என்ற தப்பான முடிவை எடுத்துக் கொள்கின்றோம். இதனால் என்ன நன்மை ஏற்படப்போகின்றது? அவசர புத்தி, ஆத்திரகுணம், அகங்காரம் போன்ற எதிர்மறையான சிந்தனைகளால் மணநோயாளிகளாக மாறவேண்டியமனோ பாவத்தை ஏற்படுத்தி விடுகின்றோம்.

ஆம்! மனிதா, மனிதர்களாக நாம் அனைவரும் வாழ்வதற்காகவே அன்றாடம் ஓடி ஓடி உழைக்கின்றோம். இரவு பகலாக உடலை வருத்திப் பாடுபடுகின்றோம். எமது சிந்தனைகளை சிறந்த வழியில் சிந்திக்க நேரிடும்போதேதான் சிக்கலான முடிவுகளையும் சுலபமாகத் தீர்க்கும் திறன் எம்மிடையே தோன்றுகின்றது. உதாரணமாக: நாம் நாளாந்தம் காலையில் எமது வீட்டை, சுற்றுப் புறச் சூழலைத் தூய்மைப்படுத்தும்போது தேவையில்லாத குப்பை கூளங்களை அகற்றி சுகாதாரமாக வாழ்கின்றோம். அதே போலவே உடல் உள சந்தோசத்துக்காக எமக்குத் தேவையான விடயங்களை, மனதுக்கு சந்தோசத்தைத் தருகின்ற செயற்பாடுகளைச் செய்து, அகத்திலே உள்வாங்கிக்கொண்டு சந்தோசமாக வாழக் கற்றுக்கொள்ளவேண்டும்.



> அச்சம் கொண்டு ஓடும்போது மரத்தில் ஒட்டிக் கொண்ட புழுப்போல பிரச்சினையும் எமது மனதில் தொற்றிக் கொண்டு தேவையில் லாத பல மனக் குழப் பங்களுக்கு ஆள்படுத் தித் தப்பான முடிவு களை எடுத்துக் கொள்கின்றது.

நாம் செல்லும் வழிப்பயணத்தில் எத்தனை மேடு பள்ளங்களைத் தாண்டிப் பயணிக்கின்றோம்? எத்தனை தடங்கலைத் தாண்டிச் சென்று எம் தேவையை நிறைவேற்றிக் கொள்கின்றோம்? எந்தப் பிரச்சினையையும் துன்பமாக நினைக்காமல், இவையெல்லாம் மனதுக்கு உரம் சேர்க்கும் படிக்கற்கள் என நினைத்துக் கொண்டு, எம்மை நாம் தாழ்வாக நினைக்காமல் எமக்கும் தனித்திறமை உண்டு என எண்ணியபடி எம் வாழ்க்கைப் பயணத்தையும் வளம் சேர்க்க வைராக்கியமுள்ள மணநிலையுள்ளவராக எந்த நிலையிலும் தளராமல் வாழக்கற்றுக்கொள் மனிதா! வாழ்க்கை வாழ்வதற்கே! வாழ்க்கை என்பது இறைவன் கொடுத்த வரப்பிரசாதமாக இருந்தாலும், எமக்கு நாம் கொடுக்கும் மனத்தைரியமும் தான்! இன்றே செயற்படு! விழிப்புடன் வாழ்! நம் நாட்டு நலனுக்காகவே!

# உங்களுக்கு 2016 எப்படி?





## கன்னி

[உங்களுக்கு 2016 எப்படி? என்ற தொடரில் கன்னி ராசிக்காரர்களுக்கான பலன்கள் பற்றிப் பார்த்தோம். கன்னி ராசி குறித்த விவரங்கள் இன்றும் தொடர்கின்றன.]

**பெண்கள்**

கணவன்- மனைவியிடையே சிறுசிறு கருத்து வேறுபாடுகள் தோன்றி மறையும். பொருளாதார நிலை சிறப்பாக இருப்பதால் குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். தடைப்பட்ட சுபகாரியங்கள் சில தடைகளுக்குப்பின் சிறப்பாக நிறைவேறி மகிழ்ச்சியளிக்கும். வயிறு சம்பந்தப்பட்ட பாதிப்புகளால் சற்று மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

**மாணவ- மாணவியர்**

கல்வியில் அதிக ஈடுபாட்டுடன் செயற்பட முடியும். எடுக்கும் முயற்சிகள் அனைத்திலும் வெற்றிமேல் வெற்றி கிட்டும். பள்ளி, கல்லூரி வாயிலாக இன்பச் சுற்றுலா மேற்கொள்ளும் வாய்ப்பும் அதனால் மகிழ்ச்சி தரக்கூடிய சம்பவங்களும் நடைபெறும். புதிய நண்பர்களின் நட்பால் சாதக பயன் கிடைக்கும். உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புகள் தோன்றி மறையும்.

**மாதப்பலன் (ஜனவரி)**

முயற்சி ஸ்தானமான 3இல் சனி சஞ்சரிப்பதும், 8ஆம் திகதி முதல் கேது 6இல் சஞ்சாரம் செய்ய விருப்பது எடுக்கும் முயற்சிகளில் ஏற்றத்தை ஏற்படுத்தும் அமைப்பாகும். எந்தவிதமான பிரச்சினைகளையும் சமாளிக்கக்கூடிய தைரியம் உண்டாகும். உடல் ஆரோக்கியத்தில் சிறுசிறு பாதிப்புகள் தோன்றினாலும், உடனே சரியாகிவிடும். நெருங்கியவர் களிடையே இருந்த கருத்து வேறுபாடுகள் மறைந்து ஒற்றுமை நிலவும். தொழில், வியாபாரத்தில் இருந்த போட்டி பொறாமைகளும் குறையும். 4இல் சூரியன் இருப்பதால் பணவரவுகளில் சிறுசிறு நெருக்கடிகள் தோன்றினாலும் செலவுகள் கட்டுக் கடங்கியே இருக்கும். விஷ்ணுவுக்கு பரிகாரம் செய்வது உத்தமம்.

**பெப்ரவரி**

முயற்சி ஸ்தானமான 3இல் சனி சஞ்சரிப்பதும், மாத பிற்பாதியில் 6-ல் சூரியன் சஞ்சரிப்பதும் உங்கள் பலத்தை அதிகரிக்கும் அமைப்பாகும். எடுக்கும் முயற்சிகளில் வெற்றிகிட்டும். உடல் ஆரோக்கியத்தில் ஓரளவுக்கு முன்னேற்றம் ஏற்படும். எதிலும் சுறுசுறுப்பாக செயற்படக்கூடிய ஆற்றலும் உண்டாகும். தொழில், வியாபாரத்தில் இருந்த பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். பணவரவுகளில் தேவைக்கேற்றபடி இருந்தாலும் கொடுக்கல்- வாங்கலில் கவனமுடன் இருப்பது நல்லது. 2இல்செவ்வாய் இருப்பதால்நெருங்கியவர்களை அனுசரித்து நடப்பதன் மூலம் தேவையற்ற பிரச்சினைகளை குறைத்துக் கொள்ளமுடியும். குரு பகவானை வழிபாடு செய்வது நல்லது.

**மார்ச்**

முயற்சி ஸ்தானமான 3இல் சனி, செவ்வாய் சஞ்சரிப்பதும் மாத முற்பாதியில் 6இல் சூரியன் சஞ்சரிப்பதும் உங்கள் பலத்தை அதிகரிக்கக்கூடிய அமைப்பாகும். பணவரவுகள் சுகமாக அமைந்து வீடு, மனை, வண்டி, வாகனங்கள் வாங்கக்கூடிய யோகம் உண்டாகும். குடும்பத்தில் மங்களகரமான சுபகாரியங்கள் கைகூடும். தொழில், வியாபாரத்திலிருந்த நெருக்கடிகள் விலகும். புத்திர வழியில் மகிழ்ச்சி, பூரிப்பு உண்டாகும். பெரிய மனிதர்களின் தொடர்பால் நற்பயன் ஏற்படும். துர்க்கையம்மனை வழிபடுவது சாலச் சிறந்தது.

**ஏப்ரல்**

ஜென்ம ராசிக்கு 3இல் சனி, செவ்வாய் சஞ்சரிப்பதும், 6-ல் சுக்கிரன் சஞ்சாரம் செய்வதும் பொருளாதாரரீதியாக ஏற்றத்தை ஏற்படுத்தும். குடும்பத்தேவைகள் அனைத்தும் பூர்த்தியாகும். கடந்தகால பிரச்சினைகள் அனைத்தும் படிப்படியாகக் குறையும். தடைப்பட்ட சுபகாரியங்கள் தடைகள் விலகி கைகூடும். பணவரவுகளும் சிறப்பாக இருப்பதால் கடன்களும் படிப்படியாகக் குறையும். தொழில், வியாபாரம் செய்பவர்கள் முன்னேற்றமான நிலையை அடைய முடியும். கொடுக்கல்- வாங்கல் லாபம் தரும். உத்தி யோகத்திலிருப்பவர்களுக்கு எதிர்பார்க்கும் உயர்வுகள் கிட்டும். நினைத்தது நிறைவேறும். சிவபெருமானை வழிபடுவது உத்தமம்.

**மே**

அஷ்டம ஸ்தானமான 8இல் சூரியன் சுக்கிரனும், 12இல் குரு, ராகுவும் சஞ்சாரம் செய்வதால் உடல் ஆரோக் கியத்தில் சற்று கவனமுடனிருப்பது நல்லது. பொருளா தார நிலையில் சிறுசிறு நெருக்கடிகள் ஏற்படும். எடுக்கும் எந்தவொரு காரியத்தையும் கஷ்டப்பட்டே முடிக்க வேண்டியிருக்கும். உடல் ஆரோக்கியத்தில் சற்று கவனம் செலுத்துவது உத்தமம். உற்றார்- உறவினர்களை அனுசரித்து நடந்து கொண்டால் அனுகூலமான பயனைப் பெறமுடியும். உத்தியோகத்தர்கள் பணியில் வீண்பழிகளைச் சுமக்க நேரிடும். முன்கோபத்தைக் குறைப்பது, பேச்சில் நிதானத்தைக் கடைப்பிடிப்பதும் நல்லது. சிவ வழிபாடு, துர்க்கை வழிபாடு மேற்கொள்வது நல்லது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் கலைப்பாலம் அமைப்போம்

## முல்லைத்தீவில் கவிப்பேரரசு வைரமுத்து

பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே மண்ணுக்கு உயிர் உண்டு என்று கண்டுபிடித்தவன் தமிழன். நமது வாழ்க்கையில் நமக்கு கற்றுத்தந்த செய்திகள் முன்னோர்கள் எமக்கு கற்றுத்தந்தவை. இதை மறந்து விடாதீர்கள். இந்த உழவர் திருவிழா இளைஞர்களுக்குத்தான் அதிகம் ஊட்டப்படவேண்டியது விவசாயிகளுக்கல்ல. உலகத்திலே எந்த இனமும் படாத துயரை இந்த மண் சுமந்து நிற்கின்றது என்று கவிப்பேரரசு வைரமுத்து தெரிவித்தார்.

முல்லைத்தீவில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வடமாகாண உழவர் திருவிழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்தார். அங்கு அவர் ஆற்றிய நீண்ட உரை வருமாறு:-

இந்த மண்ணிலே நிகழ்ந்த சரித்திரங்கள் வாழ்வியல் வீர தியாகங்கள் இந்த மண்ணிலே பதிவு செய்யப்பட வேண்டும் என்ற வேட்கை படைப்பாளி என்ற வகையில் என் மனதில் குடிகொண்டுள்ளது. ஈழத்து மண்ணின் பெருங்கதையை ஒரு மகா காவியமாக ஆக்குவதே வைரமுத்துவின் வாழ்வியல் திட்டம்.

வெடிமழையிலே கரைந்து போகாத எங்கள் தமிழர்கள் இந்த இடி மழையிலா கரைந்துபோகப் போகிறார்கள் என நான் நினைத்துக்கொண்டேன். இந்த மண்ணின் தமிழ் பெருமக்களே எனது இரத்த உறவுகளே உங்களை எல்லாம் பார்க்கும்போது எனது தோள்கள், எனது மார்பு அகலமாகிறது. உங்களின் கண்ணீரின், இரத்தத்தின் வியர்வையில், உங்கள் துயரத்தில் இந்தியாவில் அழுது கொண்டிருந்த ஓர் ஆன்மா இன்று உங்கள் முன் வந்து பேசிக்கொண்டிருக்கிறேன். உங்களை நலன் விசாரிக்க வந்தேன். உங்களின் கைகளை தொட்டுப் பார்க்க, உங்கள் கண்களில் வெளிச்சம் இருக்கிறதா என்று பார்க்க, உங்களுக்கு ஆறுதல் சொல்ல, உங்கள் அன்பை பகிர்ந்து கொள்ளவந்தேன். வாழ்க்கையில் இன்னும் மிச்சம் இருக்கிறது என்ற நம்பிக்கையை விதைக்க வந்தேன். நான் கொழும்பு வந்தபோதும் யாழ்ப்பாணம் பெருமண்ணை முதன் முதலாக இப்போதுதான் தொட்டு வணங்குகிறேன். மண்ணைத் தொடும்போது வந்த உணர்வை ஆயிரம் சொற்களால் எழுதிக்காட்ட முடியாது.

முள்ளிவாய்க்காலைப் பார்த்தேன், முல்லைத்தீவைப் பார்த்தேன், ஆனந்தபுரம் பார்த்தேன், புதுக்குடியிருப்பு பார்த்தேன், சாவகச்சேரி கடந்து வந்தேன், ஆனையிறவு பார்த்து வந்தேன் இவை எல்லாம் பார்த்து என் நெஞ்சில் ஒரு பெரிய கல்வெட்டு மாதிரி சம்பவங்கள் விரிகின்றன. நடந்தவைகளைப் பற்றி நான் பேசுவதற்கு நான் வரவில்லை, ஆனால் இந்த நிகழ்வுகள், இந்த சரித்திரக் குறிப்புக்கள், இந்த வாழ்வியல் இந்த வீரம், இந்த தியாகம், இவையெல்லாம் இந்த மண்ணில் பதியப்பட வேண்டும் என்ற வேட்கை ஒரு படைப்பாளி என்ற வகையில் பெற்றிருக்கிறேன். ஆகவே ஈழத்து மண்ணின் பெருங்கதையை ஒரு மகாகாவியம் ஆக்குவதே வைரமுத்துவின் வாழ்நாள் திட்டம் என்பதை நான் இந்த மண்ணில் எழுதிக்கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுகிறேன். எழுதுவேன், என் விரல்கள் சம்மதிக்கும் வரை எழுதுவேன், தமிழ் எனக்கு துணையிருக்கும் காலம் வரை எழுதுவேன் - என் நெஞ்சில் ஈரம் இருக்கும் வரை தமிழர்களின் கண்ணீர் மாற்றப்படும் வரை எழுதிக் கொண்டு இருக்க வேண்டும் எனத் தோன்றுகின்றது.

சாகும்போதும் தமிழ்படித்துச் சாகவேண்டும். என்சாம்பலும் தமிழ்மணந்து வேகவேண்டும். என்று எழுதிய சச்சிதானந்தப் புலவர் வாழ்ந்த மண்ணிலே நான் நிற்கிறேன்.

நண்பர்களே இந்த மண்ணில் நான் நிற்கும்போது இந்த உலகத்தில் எந்த இனமும் படாத துன்பத்தை எனது தமிழினம் பட்டிருக்கிறது என்ற வேதனை எனக்கு உணர்த்துகின்றது. வரலாற்றின் கண்களில் இரத்தம் கசிந்து கொண்டிருக்கிறது. அந்தக் கண்ணீரை அந்த இரத்தத்தை வரலாறு குறித்துக்கொள்ளட்டும். எமது மக்களின் கண்ணீரை துடைப்பதுதான் இங்கு மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது. நான் இங்கு வீராவேசத்துடன் பேசி உங்கள் இதயத்தை துடைத்து விட்டு போக வரவில்லை. மழை வருமோ என நீங்கள் அஞ்ச வேண்டாம். இங்கு வந்த மழை தமிழ் கவிஞருக்கு மட்டும் குடை இருக்கிறது. தமிழ் மக்களுக்கு குடை இல்லையே என்று சொல்லாமல் கொள்ளாமல் வெளியேறிவிட்டது. ஆதலால் தமிழ்க் கவிஞருக்கு மட்டும் குடை பிடிக்காமல் தமிழ் மக்களுக்கும் சேர்த்து குடைபிடியுங்கள் என்று கூறுகின்றேன்.

> உலகத் தமிழர்களில் அதிகம் கற்றவர்கள் யார் என்றால் இலங்கைத் தமிழர்கள் என்பதை நான் ஐ.நா. வரைக்கும் சொல்லுவேன். அவ்வாறு கற்றுத் தெளிந்தவர்கள். ஆழமான கல்வி ஆற்றல் உள்ளவர்கள். மனிதன் இருக்கும் இடத்தை தேடிவருவது விவசாயக் கலாசாரம். மனிதன் உணவைத் தேடிப் போனதற்கும் உணவு மனிதனைத் தேடி வந்ததற்கும் பத்தாயிரம் ஆண்டு இடைவெளி இருந்திருக்கிறது.

வைரமுத்து சொல்பேறு புலவன் மட்டுமல்ல ஏர்பிடித்து உழுதவனின் திருமகன் என்ற அடிப்படையில் என்னை அழைத்திருக்கின்றீர்கள். இன்னும் நான் விவசாயிதான். ஏர் பிடித்து உழுதவன்தான். கலப்பை பிடித்தவன்தான். அதனால்தான் விவசாயத்தின் வலி, விவசாயிகளின் வலி எனக்குத் தெரிகிறது. இந்த நாட்டில் விவசாயம் என்பது முக்கியமான உறுப்பு என்பது எனக்கும் தெரியும் உங்களுக்கும் தெரியும். ஆனால் இந்த நவீன உலகில் விவசாயம் எப்படிப் புரிகிறது எப்படித் தேய்கிறது எப்படிக் குறைகிறது என்பதைப் பாருங்கள். செவ்வாய்க்கிரகத்துக்கு சென்று விவசாயம் செய்ய முடியுமா என்று யோசிப்பவர்களே இந்த மண்ணின் விவசாயத்தைத் தெரிந்து கொள்ளுங்கள். இந்த மண்ணின்விவசாயத்தைத்தெரிந்து கொண்டால்தமிழன் வரலாற்றைப் அறிந்து கொண்டீர்கள் என்று அர்த்தம். நதிக்கரையில் பிறந்தது நாகரிகம். அந்த நாகரிகத்தின் உச்சம் விவசாயம்.

இந்த மண்ணில் கல்வி என்பது சில நூற்றாண்டுகளுக்கு முன்பே விதைக்கபப்பட்டுவிட்டது. உலகத் தமிழர்களில் அதிகம் கற்றவர்கள் யார் என்றால் இலங்கைத் தமிழர்கள் என்பதை நான் ஐ.நா. வரைக்கும் சொல்லுவேன். அவ்வாறு கற்றுத் தெளிந்தவர்கள். ஆழமான கல்வி ஆற்றல் உள்ளவர்கள். மனிதன் இருக்கும் இடத்தை தேடிவருவது விவசாயக் கலாசாரம். மனிதன் உணவைத்தேடிப் போனதற்கும் உணவு மனிதனைத் தேடி வந்ததற்கும் பத்தாயிரம் ஆண்டு இடைவெளி இருந்திருக்கிறது.

நண்டூர நெல்லும் நரியோட கரும்பும் வண்டியோட வாழையும் தென்னையும் நாட்டோட வேண்டுமென முன்னோர்கள் சொல்லிவைத்தார்கள். அதாவது ஒவ்வொரு நாற்றுக்குமான இடைவெளிகள் எவ்வாறு அமையவேண்டுமென்டதே இதன்பொருளாகும். இரசாயான உரத்தினால் மக்களுக்க பாதிப்பு ஏற்படுகிறது. இரசாயான உரத்துக்குப் பதிலாக இயற்கை உரங்களை பாவியுங்கள்.



தமிழர்களே வரலாற்றின் இரத்தக் கண்ணீரை வரலாறு துடைத்துக்கொள்ளும் உங்களின் இரத்தக் கண்ணீரை யார் துடைத்துக் கொள்வது?. விவசாயம் செய்வதற்கு காணி வேண்டாமா விவசாயக் காணி நிலங்கள் தங்களுக்குக் கிடைக்காதா என்ற ஏக்கம் இந்த மண்ணிலே இருக்கின்றது. மீள் குடியேற்றம் செய்யமாட்டார்களா என்ற ஏக்கம் இந்த மண்ணிலே இருக்கின்றது. அந்த ஏக்கத்தை வெளிப்படுத்த வேண்டியது எங்கள் கடமை என்றே நினைக்கத் தோன்றுகின்றது.

எந்தப் போருக்குப் பின்பும் துவண்டு விடாது வாழவேண்டும். இந்த மண்ணில் நீங்கள் புதிய நம்பிக்கையோடு உங்களை முன்னெடுத்துச் செல்லுங்கள். இந்த மண்ணில் புதிய நம்பிக்கையோடு நீங்கள் உங்களை முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன். இந்த மண்ணில் திருப்பித் தரமுடியாதவை நிறைய, திருப்பி தரமுடிந்தவை கொஞ்சம். உயிர்களை, புதைக்கப்பட்ட உடல்களை, இழந்து போன வாழ்க்கையை திருப்பித்தர முடியாது. ஆனால் நாம் பெறுவதெல்லாம் நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற நம்பிக்கையை திருப்பி பெறமுடியும் என்ற நம்பிக்கையை உங்களிடத்தில் வர வேண்டும். அந்த நம்பிக்கை என்பது எங்கள் பிள்ளைகள் கல்வி பெறவேண்டும் எங்கள் யுவதிகள் கல்வி பெறவேண்டும், எங்கள் வாழ்வு உலகத்தோடு போட்டி போடக்கூடிய அறிவார்ந்த இனமாக வர வேண்டும். இன்னும் வாழ்க்கை இருக்கு என நம்ப வேண்டும்.

எத்தனையோ கனவுகளோடு நான் இந்த மண்ணுக்கு வந்தேன். நண்பர்களுக்குத் தெரியாமல் என் கண்களை அடிக்கடி துடைத்துக்கொண்டேன். முதல்முதலில் இன உணர்வோடு இந்த தியாக வரலாறு தெரிந்து கொண்டு இந்த மண்ணுக்கு வருகிற ஒருவன் அழாமல் திரும்ப முடியாது. இந்த மண்ணை தொட்டுப்பார்க்காமல் திரும்ப முடியாது. கைக்குடையில் கட்டிக்கொள்ளாமல் திரும்ப முடியாது. இந்த மண்ணை பார்த்து வணக்குகிறேன். பெரியோர்களை வாழ்த்துகிறேன். தமிழர்களுக்கு நம்பிக்கையை பெற்றுக் கொடுங்கள், கல்வி பெற்றுக் கொடுங்கள், காணிகளை பெற்றுக் கொடுங்கள், எங்கள் தமிழர்களுக்குப் புதிய வாழ்க்கையை பெற்றுக்கொடுங்கள், அதற்கு நாங்களும் துணையிருப்போம் என்ற நம்பிகையை நான் உங்களுக்கு விதைக்கிறேன்.

உள்ளூர் உற்பத்திகள் உள்ளூர் வெளியீடுகள் ஆகியவற்றுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட வேண்டும். உள்ளூர் கலைஞர்கள் பாராட்டப்படவேண்டும்.

உள்ளூர் கலைஞர்களின் ஆற்றலை வளர்ப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் கலைக் கல்லூரிகள் நிர்மாணிப்பதற்கும் ஆற்றல்களை பெருக்குவதற்கும் தென்னிந்திய துறை சார்ந்தவர்களின் புலமையை பெற்றுக்கொள்ள வழி செய்ய வேண்டுமெனவும் விடுத்த வேண்டுகோளை ஏற்று தமிழ் நாட்டுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் கலைப் பாலம் கட்டுவோம். கலைப் பாலத்தை அமைப்பதற்கான முயற்சிகளை முன்னெடுப்போம் எனவும் வைரமுத்து தனது உரையில் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# வரலாற்றில் இன்றைய தினம்

41 - கிளாடியஸ் றோமப் பேரரசராக இரவு வேளையில் நடைபெற்ற பேச்சு வார்த்தையின் பின்னர் ஏற்றுக் கொள்ளப்பட்டார்.

1348 - வில்லாவில் ஏற்பட்ட நில நடுக்கத்தில் 5000 பேர் வரை சாவு.

1565 - விஜயநகர் படையைத் தோற்கடித்து, இந்திய கலிக்கோட்ட போரில் டெக்கான் சுல்தான் தென்னிந்திய இறுதி இந்து ராஜ்ஜியத்தை அழித்தார்.

1755 - மொஸ்கோ பல்கலைக்கழகம் ஸ்தாபிதம்.

1799 - அமெரிக்க வேர்மொன்ற் எலியாக்கிடம் ஸ்பூனர் விதைக்கும் இயந்திர காப்புரிமையைப் பெற்றுக் கொண்டார்.

1825 - நியூயோர்க்கில் றென்செல்லியர் பல்தொழில் என்னும் பெயரில் அமெரிக்காவின் முதலாவது பொறியியற் கல்லூரி திறந்து வைக்கப்பட்டது.

1875 - அடிமைத் தனத்துக்கு எதிரான சங்கம் நியூயோர்க்கில் உருவாக்கப்பட்டது.

1879 - பல்கேரிய தேசிய வங்கி தொடங்கப்பட்டது.

1881 - ஓரியன்ரன் தொலைத்தொடர்புக் கம்பனி - தோமஸ் அல்வா எடிசன் மற்றும் அலெக்ஸாண்டர் கிரகம்பெல் ஆகியோரால் உருவாக்கப்பட்டது.

1890 - சிக்காக்கோவில் ஆபிரிக்க - அமெரிக்கன் லீக் உருவாக்கப்பட்டது.

1890 - அமெரிக்காவில் ஐக்கிய சுரங்கத் தொழிலாளர் சங்கம் உருவாக்கம்.

1904 - பெனிசில் வேனியாவில் இடம்பெற்ற சுரங்க வெடி விபத்தில் 179 பேர் சாவு.

1915 - கண்டங்களுக்கிடையேயான தொலைபேசிச் சேவை தொடங்கப்பட்டது.

1916 - ஒஸ்ரியா - ஹங்கேரியிடம் மொன்ரி நீக்றோ சரணடைந்தது.

1918 - சோவியத் குடியரசை ரஷ்யா பிரகடனப்படுத்தியது.

1924 - முதலாவது குளிர்கால ஒலிம்பிக் விளையாட்டுப் போட்டிகள் சமோனிக்ஸ் பிரான்ஸில் தொடக்கி வைக்கப்பட்டது.

1939 - சிலி நாட்டின் சிலானில் ஏற்பட்ட நிலநடுக்கத்தால் 10,000 பேர் வரை சாவு.

1939 - கொம்பிய பல்கலைக்கழகத்தில் முதலாவது அணுப்பிளவு பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

1949 - இஸ்ரேலின் முதலாவது நாடாளுமன்றத் தேர்தலில் பென் கூரினுடைய மாபே கட்சி பெற்றியீட்டியது.

1955 - ஜேர்மனியுடனான போரை ரஷ்யா முடிவுக்குக் கொண்டுவந்தது.

1955 - அமெரிக்காவும் - பனாமாவும் கால்வாய் ஒப்பந்தத்தில் கைச்சாத்து.

1955 - 300 ஆண்டுகளில் ஒரு செக்கன் விலகல் என்கின்ற துல்லியத் தன்மையுடைய அணுக் கடிகாரத்தை கொலம்பிய பல்கலைக்கழக விஞ்ஞானிகள் உருவாக்கினர்.

1961 - முதன் முதலாக ஜனாதிபதி ஒருவரின் (ஜோன் எவ்.கெனடி) ஊடக மாநாடு தொலைக்காட்சி சேவையில் தேசிய ரீதியில் நேரடியாக ஒளிபரப்பப்பட்டது.

1961 - எல் சவடோரில் இராணுவ சதிப் புரட்சி மேற்கொள்ளப்பட்டது.

1964 - தொலைத்தொடர்பு விண்கலம் எக்கோ - 2 தொடக்கி வைக்கப்பட்டது.

1969 - அமெரிக்க - வட வியட் நாம் சமாதானப் பேச்சுவார்த்தை பரிஸில் தொடங்கியது.

1971 - ஹிமாலயப் பிரதேசம் இந்தியாவின் 18 ஆவது மாநிலமானது.

1974 - கிறிஸ்ரியன் பேர்னாட்டினால் பழைய இதயத்தை நீக்காது மனித இதயத்தைப் பொருத்தும் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.

1975 - பிரதமர் ஷேக்முஜிபுர் ரஹ்மானை பங்களாதேஷ் நாடாளுமன்றம் நீக்கியது.

1979 - மனிதக் கொலையொன்றைப் புரிந்ததாக அமெரிக்காவில் முதன்முதலாக றோபோ மீது ஆவணப்படுத்தப்பட்ட வழக்கு.

1980 - ஈரானின் ஜனாதிபதியாக பானி சட்டார் தேர்வு.

1980 - ஒலிம்பிக் விளையாட்டைப் பகிஷ்கரிக் ஒல்லாந்து அரசு கோரிக்கை

1980 - போர்க் கப்பலொன்றின் அதிகூடிய வேகமாக USN ஹவர் கிராப் 167 கி.மீ. /மணியை எட்டியது.

1981 - 444 நாள்கள் ஈரானில் தடுப்புக் கைதிகளாக இருந்த 52 அமெரிக்கர்கள், மீண்டும் அமெரிக்கா வந்தடைந்தனர்.

1981 - மாவோவின் விதவை மனைவியான ஜியாங் கியூங்குக்குச் சாவுத் தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

1994 - இலங்கை அரசு, தரைக் கண்ணியை எதிர்த்துச் செயற்படும் வாகனங்களைக் கொள்வனவு செய்ய ஆலோசனை.

1993 - பாதைப் படகு மூதூரில் கவிழ்ந்தது. படையினர் 17 பேர், பொதுமக்கள் நூறுக்கு மேற்பட்டோர் பயணித்த 50 பேர் உயிரிழப்பு: 10 சடலங்கள் மீட்பு.

1993 - கிளாலியூடாகப் பயணம் செய்த அங்கலிக்கன் ஆயர் மீது வழக்குத் தொடரப்பட வேண்டும் என சு.க. எம்.பி. கோரிக்கை.

1994 - அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கள் நடத்துமாறு கல்விமான்கள், புத்தி ஜீவிகள் அரசிடம் வலியுறுத்து. யோசனைகள் சிலவும் முன்வைப்பு.

1994 - இலங்கையின் மூன்றாவது உலகம் யாழ்ப்பாணம் என செஞ்சிலுவைச் சங்க வதிவிடப் பிரதிநிதி டொமினிக் டு போர் சண்டே ரைம்ஸுக்கு பேட்டி.

1998 - தமிழீழ விடுதலைப் புலிகளின் தற்கொலைத் தாக்குதலில் கண்டியில் 8 பேர் உயிரிழப்பு; 25 பேர் காயம்.

2010 - எதியோப்பிய விமானம் 409 பெய்ரூட் றாபிக் ஹாரி சர்வதேச விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட சிறிது நேரத்தின் பின்னர் றெனியன் கடற்பகுதியில் விபத்துக்கு உள்ளாகி 90 பேர் சாவு.

2013 - 2011 இன் எகிப்து புரட்சி தொடர்பாக இடம்பெற்ற தேசிய ரீதியிலான எதிர்ப்பின் போது துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 பொது மக்களும் ஒரு பொலிஸ் அதிகாரியும் சாவு 456 பேருக்குக் காயம்.

# பணிவுள்ள நாணலும் பணிவில்லாத பனைமரமும்

வைகை ஆற்றின் கரையோரம் ஏகப்பட்ட நாணல்கள் வளர்ந்திருந்தன. அந்த நாணல்களின் இடையே சில பனைமரங்கள் இருந்தன.

அப்படிப் பனைமரங்கள் இருந்தபோது அந்தப் பனை மரங்களுக்கு மிகுந்த தலைக்கனம், தலை நிமிர்ந்து உயர்ந்து நிற்கும் நாமே உயர்ந்தவர்கள், மற்றவர்கள் எல்லாம் மிக மிகத் தாழ்ந்தவர்கள் என்று.

எனவே பனைமரங்கள் நாணல்களைப் பார்த்துக் கேலி செய்யும். நீ அடிக்கடி சின்னக் காற்றுக்கெல்லாம் தலை குனிவதால்தான், உன்னை நாணல் என்று பெயரிட்டிருக்கிறார்கள் என்றெல்லாம் பழித்துச் சிரிக்கும்.

அதற்கு நாணல் கலகலவெனச் சிரித்தபடி பணிவுதான் வாழ்வில் உயர்வுதரும். பணிவில்லாத துணிவுள்ளவர்கள் அடிக்கடி ஆபத்தில் மாட்டிக் கொள்ளுவார்கள் என்று பதில் கூறும்.

இப்படி அடிக்கடி பலமுறை பனைமரம் நாணலைக் கிண்டல் செய்து வந்தது. நாணல் சிரித்துச் சிரித்துச் சமாளித்துக் கொண்டிருந்தது.

ஒருநாள் தென்றலாக வீசிக் கொண்டிருந்த காற்று புயலாக மாறியது. மழைகொட்டோ கொட்டென்று கொட்டியது. புயலும் மழையும் சேர்ந்து உலகத்தையே அழித்துவிடுவது போல் பேயாட்டம் போட்டது. கடுமையாக வீசிய சுழல் காற்று பனைமரங்களை வேரோடு சாய வைத்தது. ஆனால் நாணல்கள் அப்படியே இருந்தன.



எப்போதும் வளைந்து கொடுத்துத் தரையோடு தரையாகப் படிந்திருந்ததால் அவை தப்பின. புயல் ஓய்ந்தது. கண்ணீர் வடித்தபடி தரையிலே விழுந்து கிடந்த பனை மரங்கள் தலை நிமிர்ந்து நிற்கும் நாணல்களைக் கண்டு வெட்கத்தால் முகத்தைத் திருப்பிக் கொண்டன.


பணிவில்லாத துணிவுள்ளவர்கள் பயனில்லாத நிலையை அடைவார்கள். பணிவோடு துணிவைக் கடைப்பிடிப்பவர்கள் தலை நிமிர்ந்து நிற்பார்கள் என்ற தத்துவத்தைச் சொல்லுவது போல் நாணல்கள் காற்றில் கலகலவெனச் சிரித்தன.


# பணியாரம்



சின்னச் சின்னப் பணியாரம்
சுவை மிகுந்த ஆகாரம்
அம்மா சுட்ட பணியாரம்
ஆஹா எனக்கு ஆனந்தம்

குண்டுக் குண்டுப் பணியாரம்
கணக்காய் சுட்ட பணியாரம்
தின்னத் தின்ன சுவைக்கும்
தேனைப் போலே இனிக்கும்







# வர்ணம் தீட்டுவோம்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தண்டனைக்கும் எல்லை உண்டு

வவுனியாவில் ஒழுக்கக் குறைவாகப் பாடசாலைக்குச் சென்ற மாண வர்களை கடுமையாகத் தண்டித்தார் என்று கூறப்பட்ட ஆசிரியர் ஒருவர் இடமாற் றம் செய்யப்பட்டுள் ளமை அனைவருக்கும் தெரிந்தவிடயம். எதிலும் ஓர் அளவு இக்கத் தான் வேண்டும். அளவைக் கட்டு மீறும் எந்தச் செயலும் நீடித்த தாகவோ நிலைத்ததாகவோ சரித்திரம் இல்லை.

இளமையில் கல் சிலையில் எழுத்து என்பது பழமொழி. அது எந் தளவுக்கு உண்மை என்பதனை எவராலும் மறுத்து விட முடியாது. கற்றுயர்ந்தவர்களும் சரி ஏனையவர்களும் சரி இதன் தாற்பரியத்தை நன்குணர்ந்திருப்பர். அதனை உணராதவர்கள் அதற்குக் கிட்டவும் நெருக்கியிருக்கமாட்டாதவர்கள் என்றே கருதலாம்.

மாணவர்களைத் தண்டிக்கக்கூடாது என்பது இன்று கடுமை யாக வலியுறுத்தப்பட்டு வருகிறது. மாணவர்களை அன்பால் அர வணைத்து அவர்களது மண்டையில் உறைக்கும் வகையில் புத்திமதிகூறி மாணவர்களை வளர்த்துவிட வேண்டும்.

மாணவர்கள் சிறு வயதினர். அவர்களுக்குப் பல விடயங்கள் தெரிந் திருந்தாலும் எது சரி எது தவறு என்பதனைப் பகுத்தறியாதவர் களாகவே உள்ளனர். அதனை உணரச் செய்ய வேண்டியது ஆசிரியர்களின் கடமை.

மாணவர்களை நல்ல நிலைக்குக் கொண்டு செல்லும் ஆசான்கள் ஆசிரியர்கள். அவர்களது அறிவுரை, ஆலோசனை, வழி காட்டல் மாணவர்களுக்கு மிக அவசியம். அதற்கேற்ப அவர்களுக்கு உரிய மரியாதையும் வழங்க வேண்டியது மாண வர்களது கடமை.

அவ்வாறு வழங்கும் ஆலோசனைகளை ஏற்காத மாணவர்கள் முன்னேறியதாக எங்கும் சரித்திரம் இல்லை. ஆலோசனை களை மாண வர்கள் கேட்கத் தவறும் பட்சத்தில்தான் மாணவர்கள் மீதான அன்பு தோற்றுப் போய் தண்டிக்க வேண்டிய நிலை ஆசிரியர்களுக்கு ஏற்படுகிறது. தண்டிப்பதற்குத் தடை உள்ளது. அதனை எவரும் விரும்புவதுமில்லை. ஆனால் சில வேளைகளில் அதுதான் தேவைப்பட்டுவிடுகிறது என்பதனை ஆசிரியர்கள் மட்டுமன்றி பெற்றோரும் மறுக்க மாட்டார்கள்.

மாணவர்கள் விடயத்தில் எமது பாட்டன், முப்பாட்டன் காலத்திலிருந்து நாம் இன்றும் கேள்விப்பட்டுவரும் ஒரு பழமொழி, அடி யாத மாடு படியாது என்பது. இது எந்தளவு உண்மையாகவிருக்கிறது. இது பற்றியும் படித்து உயர்ந்தவர்கள் நன்றாகவே விளக்கம் கொடுப்பர். காலத்தின் தேவை கருதிய செயற்பாடு, சூழ்நிலையின் தேவை கருதிய செயற்பாடு, வய தின் எல்லை கருதிய செயற்பாடு என்பன அந்தந்த நேரங்களில் உரிய முறையில் கிடைக்கப்பட வேண்டும். அல்லது கிடைக்கச் செய்யப்பட வேண்டும்.

மாணவர்கள் எல்லோரும் ஒரே இயல்புடையவர்களல்லர். ஒவ் வொருவரும் ஒவ்வொரு இயல்புடையவர்கள். வெவ்வேறு பின்னணிகளையுடையவர்கள். வெவ்வேறு மனநிலைகளை யுடையவர்கள். அவர்கள் அத்தனை பேரையும் நாடிபிடித்துப் பார்த்து அவர்களை ஒன்றிணைத்துச் செயற்பட வேண்டியது ஆசிரியர்களது பணி. அந்தப் பணியை ஆசிரியர்கள் அக்கறை யுடன் செய்யவதற்கான சூழ்நிலை இருக்க வேண்டும். அதனை வெற்றிகரமாக்கி தாமும் பயன் பெறவேண்டியது மாணவர் களது கட்டாயப் பொறுப்பு. அந்த நல்லிணக்கச் சூழ்நிலை குலைய இடமளிக்கும் வகையில் மாணவர்கள் நடக்கக் கூடாது.

மாணவர்கள் எப்பொழுதெல்லாம் ஆசிரியர்கள் சொல் கேட்டு நடக்கத் தவறுகின்றனரோ அப்பொழுதெல்லாம் மாண வர்களைக் கடுமையாகக் கட்டுப்படுத்தவே ஆசிரியர்கள் முற்படுவர். அது மாணவர்களின் நலன் கருதியதாகவே இருக்கும். இருக்க வேண்டும்.

அதனையும் மீறிச் செயற்படும் மாணவர்களைத் தண்டிக்க வேண்டிய தேவை ஆசிரியர்களுக்கு ஏற்படுவது தவிர்க்க முடியாததாகி விடுகிறது. ஏனெனில் ஒவ்வொரு வகுப்பிலும் ஒருசில அவ்வாறான மாணவர்கள் இருக்கத் தான் செய் கிறார்கள். அவர்களைக் கட்டுப்படுத்தத் தவறின் ஒட்டு மொத்த மாணவர்களும் அந்தப் பழக்கங் களையே பின்பற்றத் தொடங்குவர்.

ஆனால் அந்த நேரங்களில் ஆசிரியர்களின் தண்டனை வரை யறைக்குட்பட்ட தாகவே இருக்க வேண் டும். மாணவர்களுக்கு அடிக்கக் கூடாது என்ற கட்டுப்பாடு இருக் கின்ற போதும் சிலபாட சாலை களில் இன்னும் மாணவர்களுக்கு அடி விழுந்து கொண்டு தானிருக்கிறது. ஆனால் அதனை அதிகளவான பெற்றோர் கண்டுகொள்வ தில்லை. ஏனெனில் பெற்றோருக்கும் தெரியும் அடியாத மாடு படியாது என்பது. ஆனால் ஒரு சில பெற்றோர் அதற்கு எதிர்ப்புத் தெரி விக்கின்றனர். அதுவும் ஆசிரியர்களின் எல்லை மீறிய தண் டனையைத் தான் அவர்கள் எதிர்க்கின்றனர்.




சில ஆசிரியர்கள் மாணவர்களைத் தண்டிக்கும்போது எல்லை மீறிவிடுகின்றனர். அதனால் பல மாணவர்கள் காயப்படவும் பின்னர் வைத்தியசாலைகளில் சேர்க்கப்படவும் பின்னர் பொலிஸ் நிலையம், நீதிமன்றம் என்று அலையவும் வழி ஏற்படுகின்றது. இது ஆரோக்கியமான நிலையல்ல. பின்னர் இடமாற்றம் செய்யப்படவும் இது வழிவகுத்து விடுகிறது.

எனவே ஆசிரியர்களே! எல்லைதாண்டாது செயற்படுங்கள். ஏனெனில் அடியாத மாடு படியாது என்பது உண்மை என்பது இன்னும் மறுக்கப்படவில்லை.




(நேற்றுமுன்தினம் தொடர்ச்சி)

எம்முடைய மகிழ்ச்சி, வருமானம், உடல் நலம் ஆகிய அனைத்தையும் நிர்ணயிக்கும் படியாக உரு முடிவுக்கு வந்து அதுவே பணத் தைத் தரும். காமதேனுவாகக் காட்சியளிக்கும் வரையில் உறுதியுடன் பின்பற்றிக் கொள்ள வேண்டும். எம்முடைய வாழ்க்கையில் யாராக இருந்து பணக்காரராக மாற விரும்பு கிறோம் என்பதை முதலில் தீர்மானம் செய்து, அதற்கேற்றபடி எம்மை நாமே உற் சாகப்படுத்திக் கொண்டு வாழ ஆரம்பித்தால் நிச்சயமாகச் செல்வந்தனாகத்தான் இருப் போம் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

லாங்பெல்லோ கூறுகிறார், நாம் இறை வனால் இந்த உலகத்துக்கு எம்முடைய வாழ் வின் வேலையைச் செய்வதாக அனுப்பப்பட்டு இருக்கிறோம் என்பதை ஒரு நாளும் மறந்து விடக்கூடாது. மூளை, ஆசை, திறமை ஆகிய அனைத்தும் சிறப்பாக இருக்கும்படி வைத்தி ருக்கிறான். செய்கின்ற வேலையில் ஏற்றத் தாழ்வு கிடையாது. நேர்மையான எல்லா வேலைகளும் புனிதமானவையே. நாம் நலமுடன் வாழ வேண்டும். ஆனால் கண் செய்ய வேண்டிய வேலையைக் கண்ணும், காது செய்ய வேண்டிய வேலையைக் காதும் செய்ய வேண்டும். இதே போன்று எல்லோ ருமே செல்வந்தர்களாக வேண்டுமானால் ஒவ்வொருவரும் அவரவருக்குரிய வேலை யைக் கண்டு பிடித்துச் செயலாற்ற வேண்டும். கண் செய்யும் வேலையை விட காது செய்யும் வேலையோ, நாவு செய்யும் வேலையோ எந்த வகையிலும் குறைவாகக் கருதக் கூடாது.

தான் எந்த நேரத்தில் எந்தக் காரியத்தையும் ஆற்றுவதற்குத் தகுதி வாய்ந்தவன் என்பதை அறியாத காரணத்தால் மண்ணை உழுது பயிரிட வேண்டியவன் மன்னாதி மன்னனாக விரும்புகிறான். வியாபாரியாக வர வேண்டிய வன் மருத்துவனாக வர ஆசைப்படுகிறான் என்கிறார் எட்சர்ஆலன்போ. பூமி அதிர்ச் சியினால் அலைக்கழிக்கப்பட்டு அங்குமிங் கும் இடம் மாற்றிக் தூக்கி எறியப்பட்டவர்கள் போல் வாழ்க்கை நடத்துவதை அடியோடு ஒளித்துவிடவேண்டும். நாம் எந்த வேலை யைச் செய்தாலும் அதைத்தொடர்ந்து செய்து பணம் பெற வேண்டும். ஓர் அறிஞன் அற்புதமான உண்மையை எடுத்துக்காட்டின் மூலம் கற்பனையாகக் கருத்தைத் தெரி விக்கிறான்.

இறைவன் இரண்டு வானவர்களை இந்த உலகுக்கு அனுப்பி ஒருவரைத் தெருக்களைப் பெருக்குமாறும், மற்றவரை உலகை ஆளு மாறும் உத்தரவிட்டால் அவர்கள் கூடத் தங்களுடைய வேலையை ஒருவருக் கொருவர் மாற்றிக் கொள்ளக்கூடாது. யார் தனக்குரிய வேலையை தேர்ந்தெடுத்துச் செய்கிறாரோ அவரே பணக்காரராக ஆக முடியும். எந்த வேலையைப் பூரணமாகச் செய்ய முடியாதோ அந்த வேலையைத் தேர்ந்தெடுக்காமல் இருக்க வேண்டும். மேத்திஸ் அர்னால்டு கூறுகிறார், சட்டம் தெரி யாத அறிவற்ற வழக்கறிஞனாய் இருப்பதை விட விளங்கு மாறு செய்வதில் அலெக் ஸாண்டராக இருப்பது நல்லது. போலிப் புலியாக இருப்பதை விட பூனையின் இரா ஜாவாக இருப்பது மேன்மையானது.

பூட்டுக்கு ஏற்ற சாவி போன்று, பெட்டிக்கேற்ற மூடி போன்று திறமைக்கு ஏற்ற வேலையைச் செய்ய வேண்டும். எம்முடைய இரத்தத்தோடு இரத்தமாக எந்தத்தொழில் செய்ய வேண்டு மென்ற ஆசை ஓடிக் கொண்டிருக்கிறதோ அந்த வேலையைத் தேர்ந்தெடுத்துச் செய்து பணக்காரராக வாழ வேண்டும்.

மனிதனுடைய வற்றாத ஆசைகள் தாம் அவன் வாழ வேண்டும் என்று வற்புறுத்து கின்றன என்கிறார் கார்க்கி. ஆசைகள் வளர வளரத் தேவைகளும் வளர்ந்து கொண்டே போகின்றன- என்கிறார் பிளேட்டோ. ஆசைக்கு அடிப்படையாக அமைவது பணம்! நாமும் பணக்காரராக வேண்டு மென்ற ஆசையே செயலைத்தூண்டி செல்வத்தைத் தேடித்தர வாய்ப்பை அளிக்கும். எப்படி என்றால் ஆசை மனத்தில் தோன்றி விட்டால் அதனை அடையும் வரை மனம் அமைதி கொள்ளாது. அதனை எப்படியும் பெற்று விட வேண்டு என்ற உணர்வு ஏற்பட்டு விடும். ஆசையின் வார்த்தைகள் எப்போதும் மதுரமாகவே இருக்கும் என்கிறார் காண்டேகர்.

ஜேம்ஸ் ஆபன்ஹிம் கூறுகிறார், உலகில் ஏராளமான செல்வங்கள் இருக்கின்றன. வைரம், தங்கம், வைடூரியம், மாணிக்கம், வெள்ளி, பித்தளை, ஈயம், அலுமினியம், செம்பு போன்ற உலோகங்கள் இருக்கின்றன. நாம் எதனை எடுத்துக் கொள்ள விரும்புகி றோமோ அதுதான் கிடைக்கும். உலகில் இறைந்து கிடக்கும் பொருள்களைப் பொறுக்கிக் கொள்ள வேண்டியது எம்முடைய கடமை. நாம் எத னைப் பொறுக்கிக் கொள்கிறோமோ அதற்கு ஏற்பதான் பணத்தைப் பெற முடியும்.

எம்முடைய வேலையைச் சரியான படி கண்டு பிடித்து விட்டால் நிச்சயமாக பணக்காரராக முடியும். சில சம யம் வேலையே நம்மைத்தேடி வருவதும் உண்டு. உங்களுடைய தொழிலை எவ்விதம் கண்டுபிடித் தீர்கள் என்று வாணிப விற்பன்னர் ஜார்ஜ் பீபாடியைக் கேட்ட போது; நான் அதனைக்கண்டு பிடிக்க வில்லை. அதுதான் என்னைக் கண்டுபிடித்தது என்று கூறினார். இவர் ஒருவருக்கு கடன் கொடுத்தி ருந்தார். அவரால் கடனைத் திருப் பிக் கொடுக்க முடியவில்லை. கடையை ஜார்ஜ் பீபாடியிடம் ஒப் படைத்து விட்டார். ஜார்ஜ் கடையை அபிவிருத்தி செய்து மாபெரும் வியாபாரியாகிவிட்டார். காரணம் அது அவருக்கேற்ற தொழிலாக இருந்தது தான். வாழ்க்கையின் மாபெரும் பிரிவு, மனிதனின் மகத் தான அதிர்ஷ்டம் எவையென்றால் தனக்குப் பொழுது போக்கையும், மகிழ்ச்சியையும் அளிக்கக்கூடிய வேலையின் மீது ஆசை வைப்பதுதான் என்று கூறுகிறார் எமர்சன்.

நாம் செய்யும் தொழிலில்வெற்றியையும், பணத்தையும் காணவில்லையென்றால், வேலையை நன்கு ஆராய்ந்து பார்க்க வேண்டும். அது எம்முடைய மனோ அமைப் புக்கு ஏற்றதாக இருக்கின்றதா? இல்லையா? என்பதை உடனே கவனிக்க வேண்டும். தொழிலைத்தொடங்கினால் வளர்ச்சியும், வருமானமும் பெற வேண்டும். இதற்கு மாறா கக் குறுகி வந்தால் நாம் சரியான வேலை யைச் செய்யவில்லை என்று அர்த்தம். எமக்கு ஏற்றுக் கொள்ளாத தொழிலில் ஈடுபட்டு அத னைத் தமக்கேற்ற தொழிலாக மாற்றி அமைக்க முடியாமல் திணறக் கூடாது. எம்முடைய அமைப்புக்கு ஏற்காத எந்தத்தொழிலும் பணத்தைத் தராது என்பதை என்றும் நினைவிற் கொள்ள வேண்டும்.

ஒரு செடி தகுதியற்ற இடத்தில் முளைத்து விட் டால், அதனைத் தகுந்த இடத்தில் பெயர்த்து வைப்பது வளரவே அன்றிக் கருகுவதற்கு அல்ல. அதனால் நாம் மேற்கொண்டிருக்கும் தொழிலில் சில ஆண்டுகள் சக்தி முழுவதை யும் பிரயோகித்தும் உழைத்தும் ஒருசாண் ஏறினால் ஒரு முழம் சறுக்கிக் கொண்டு போனால் நம்முடைய வேலையைத் துணி வுடன் மாற்றிக் கொள்ள வேண்டும். நாம் காணும் கனவுகளில் எம்மை அரசனாகவே காணவேண்டும். அல்லாமல் சேவகனாக எண்ணக் கூடாது. மாசு மறுவற்ற கீர்த்தியுடன் நான் அந்த இடத்தை அடைய வேண்டும் என்று நாமே உறுதி செய்து கொள்ள வேண்டும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## உடல் நிறத்தை மாற்றுகிறார் நமீதா

ஷாலோம் ஸ்ரூடியோஸ் சார்பில் ஜான்மேக்ஸ், ஜோன்ஸ் தயாரிக்கும் படம், "பொட்டு". பரத், நமீதா, இனியா, மனீர், நாசர் உட்பட பலர் இந்தப் படத்தில் நடிக்கின்றனர். ஒளிப்பதிவு, இனியன் ஜே.ஹாரிஸ். இதில், அகோரியாக நடிக்கிறார் நமீதா. அதற்காக, "நான் கடவுள்" படத்தில் நடிக்க அவர் கறுப்பாக மாற வேண்டும் என இயக்குனர் கேட்டதற்கு இணங்க, நவீன சிகிச்சை மூலம், இப்போதுள்ள நிறத்தை 3 மாதங்கள் வரை கறுப்பாக மாற்றியுள்ளார். படப்பிடிப்பு முடிந்த பின்கு பழைய நிறத்தைப் பெற முடியும். எந்த நடிகையும் இதுவரை இதுபோலச் செய்ததில்லை. பேய்ப் படத்தில் நடித்தாலும், நிஜத்தில் பேய்ப் பயம் கிடையாது. ஆனால், படத்தில் வில்லியாக வருவதால், படத்துக்காக, 96 கிலோவில் இருந்து, 73 கிலோவாக தனது உடல் நிறையையும் குறைத்துள்ளார். இப்போது "பொட்டு", "பொம்பள", "பரமபதம்", மலையாளத்தில் "புலி முருகன்" படங்களில் நடித்து வருகிறார்.

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | | | | | 5 | | | |
| 5 | 9 | | | | 4 | | | 3 |
| | | | 2 | 3 | | | | |
| | 8 | | | | | 5 | | |
| 4 | | 1 | 7 | 6 | 3 | 2 | | 8 |
| | | 9 | | | | | 7 | |
| | | | | 1 | 2 | | | |
| 7 | | | 9 | | | | 4 | 6 |
| | | | 6 | | | | | 2 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 4 | 3 | 8 | 1 | 9 | 2 | 7 | 5 | 6 |
| 2 | 6 | 5 | 8 | 7 | 4 | 1 | 3 | 9 |
| 7 | 1 | 9 | 6 | 5 | 3 | 4 | 2 | 8 |
| 6 | 2 | 1 | 9 | 4 | 8 | 3 | 7 | 5 |
| 9 | 5 | 3 | 2 | 6 | 7 | 8 | 1 | 4 |
| 8 | 7 | 4 | 5 | 3 | 1 | 6 | 9 | 2 |
| 5 | 8 | 7 | 3 | 2 | 6 | 9 | 4 | 1 |
| 1 | 4 | 2 | 7 | 8 | 9 | 5 | 6 | 3 |
| 3 | 9 | 6 | 4 | 1 | 5 | 2 | 8 | 7 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1–9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3 ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1–9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக் குள்ளும் அவ்வாறே 1–9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது.

2005 இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

## நிறைய படிச்ச பொண்ணு வேணும். ஆனா, அந்த பொண்ணு வீட்ல இருந்து வீட்டு வேலை மட்டும் பாக்கனும்...!!

Facebook/ SuryanFmPondicherry

- இந்தியன் மாமியார் லாஜிக்..

## என்ன வாழ்கைடா இது?

வெளிநாட்ல இருக்குறவனுக்கு வீட்ல இருக்க முடியலியேன்னு கவலை.

வீட்ல இருக்குறவனுக்கு வெளிநாடு போக முடியலியேன்னு கவலை!

பேஸ் புக்கில் பிடித்தவை...

♥ஜனா♥ @Jana_Vel · 3h

வாழ்கை பிடிக்கவில்லை என வெறுத்து விடாதீர்கள். வாழும் வாழ்கைக்கு உங்களை விரும்ப கற்றுக் கொடுங்கள் நிச்சயம் நமக்கு பிடிச்ச life கிடைக்கும்.

Surya official @surya_offcl · 4h

பிணத்தின் மீது மொய்க்கும் ஈக்கள் உணர்த்தி விடுகின்றன. இருக்கும் போதும் இறந்த பின்னும் சுமை தாங்க படைக்கப்பட்ட பிறப்பே மனிதப் பிறவி என்று.

## கொலம்பஸுக்கு திருமணம் ஆகியிருந்தால்....?

ஏங்க எங்கே போறீங்க?
யார் கூட போறீங்க?
ஏன் போறீங்க?
எப்படிப் போறீங்க?
என்ன கண்டுபிடிக்கப் போறீங்க?
ஏன் நீங்க மட்டும் போறீங்க?
நீங்க இங்க இல்லாம நான் என்ன பண்றது?
நானும் உங்க கூட வரட்டுமா?
எப்ப திரும்ப வருவீங்க?
எங்கே சாப்பிடுவீங்க?
எனக்கு என்ன வாங்கிட்டு வருவீங்க?
இப்படி பண்ணனும்னு எனக்கு தெரியாமல் எத்தனை நாளா பிளான் பண்ணிட்டுருந்தீங்க?
இன்னும் வேற என்னெல்லாம் பிளான் இருக்கு?
பதில் சொல்லுங்க
ஏன்?
நான் எங்க அம்மா வீட்டுக்குப் போகட்டுமா?
நீங்க என்னை அம்மா வீட்டுல கொண்டு போய் விடுவீங்களா?
நான் இனி திரும்ப வரவே மாட்டேன்.
ஏன் பேசமா இருக்கீங்க?
என்னைத் தடுத்து நிறுத்த மாட்டீங்களா?
இதுக்கு முன்னாடியும் எனக்குத் தெரியாம இந்த மாதிரி பண்ணிருக்கீங்களா?
எத்தனை கேள்வி கேட்குறேன் ஏன் மரமண்டை மாதிரி நிக்கிறீங்க?
இப்ப பதில் சொல்றீங்களா இல்லையா???
இதுக்கு அப்புறம் அவர் அமெரிக்காவைக் கண்டுபிடிக்க போயிருப்பார் என்று நினைக்கிறீங்களா?



## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

தருபவர்: வித்யா

**மேடம்:** அன்றாடச் செயல்களில் ஆர்வத்துடன் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் வருமானம் அதிகரிக்கும். மாமன், மைத்துனருக்கு உதவி செய்வீர்கள். காணாமற் தேடிய பொருள் கை வந்து சேரும்.

**இடபம்:** அறிமுகம் இல்லாதவரிடம் அதிகம் பேச வேண்டாம். தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். ஆரோக்கிய விடயத்தில் அக்கறை கொள்வது நல்லது. புத்திரரின் நற்செயலை ஊக்கப்படுத்துவீர்கள்.

**மிதுனம்:** சொல்லிலும், செயலிலும் புத்துணர்வு உண்டாகும். தொழில், வியாபார வளர்ச்சியால் வருமானம் உயரும். பெண்கள் ஆடம்பர நோக்குடன் செயற்படுவர். எதிர்பார்த்த சுபசெய்தி வந்து சேரும்.

**கடகம்:** மனதில் குழப்பம் உண்டாகி மறையும். உறவினர்களிடம் இருந்த கருத்து வேறுபாடு மறையும். தொழில், வியாபாரத்தில் மூலதனம் தேவைப்படும். இலாபம் கூடும். மாணவர்கள் வெளியிடம் சுற்றுவதைக் குறைக்கவும்.

**சிங்கம்:** தாமதமான பணிகளை விரைந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் படிப்படியாக உயரும். இஷ்ட தெய்வ வழிபாடு சிறப்பாக நிறைவேறும். சுப விடயம் குறித்த பேச்சில் முன்னேற்றம் ஏற்படும்.

**கன்னி:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிக்கும். தொழில், வியாபாரத்தில் வருமானம் திருப்தி தரும். வெளியூர்ப் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. அதிக நிபந்தனையுடன் பணக்கடன் பெற வேண்டாம்.

**துலாம்:** மக்கள் மத்தியில் செல்வாக்கு உயரும். தொழில், வியாபாரத்தில் பணவரவு திருப்திகரமாகும். விருந்து, விழாவில் குடும்பத்துடன் பங்கேற்பீர்கள். மனைவியின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வீர்கள்.

**விருச்சிகம்:** தாயின் தேவையறிந்து நிறைவேற்றுவீர்கள். தொழில், வியாபாரத்தில் ஆதாயம் பன்மடங்கு உயரும். பணியாளர்கள், பணி விடயமாக வெளியூர் செல்வர். மாணவர்கள் ஆர்வத்துடன் படித்து முன்னேறுவர்.

**தனுசு:** எதிர்கால வளர்ச்சி குறித்து ஆலோசிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் பணிச்சுமை அதிகரிக்கும். லாபம் சுமார். உறவினர் வருகையால் செலவு அதிகரிக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றவும்.

**மகரம்:** திட்டமிட்ட பணியில், திடீர் மாற்றம் ஏற்படும். தொழில், வியாபாரம் குறித்து, பிறரிடம் பேச வேண்டாம். வருமானத்தை விட, நிர்வாகச் செலவு அதிகரிக்கும். புத்திரரைக் கண்டிப்பதில் நிதானம் பின்பற்றவும்.

**கும்பம்:** சமூக மதிப்பு உயரும். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் காண்பீர்கள். குடும்பத்தினரின் தேவையறிந்து பூர்த்தி செய்வீர்கள். மாணவர்கள் கண்ணும் கருத்துமாகப் படிப்பர்.

**மீனம்:** உறவினர்களின் அன்பு கண்டு நெகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அபரிமிதமான வளர்ச்சி ஏற்படும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை கிடைக்கும். பெண்கள் புத்தாடை, ஆபரணம் வாங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



## நேற்றைய மரக்கறி விலை நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 60 | 60 | 80 | 60 | 60 | 40 | 40 |
| கத்தரி | 150 | 180 | 150 | 160 | 200 | 140 | 150 | 150 |
| கரட் | 200 | 200 | 120–300 | 180 | 200–300 | 200 | 150 | 350 |
| மரவள்ளி | 40 | 50 | 40 | 40 | 40 | 40 | 40 | 40 |
| பயிற்றை | 160 | 160 | 150 | 140 | 160 | 160 | 150 | 200 |
| பாகல் | 140 | 140 | 150 | 120 | 140 | 200 | 100 | 150 |
| கருணைக்கிழங்கு | 70 | 70 | 80 | 80 | 60 | 120 | 60 | 70 |
| பெ.வெங்காயம் | 80 | 80 | 80 | 70 | 60 | 90 | 50 | 80 |
| சி.வெங்காயம் | 120 | 140 | 100 | 120 | 110 | 120 | 100 | 80 |
| பூசணி | 60 | 50 | 60 | 60 | 70 | 80 | 45 | 60 |
| தக்காளி | 80 | 80 | 70 | 80 | 80 | 120 | 60 | 50 |
| வாழைக்காய் | 70 | 60 | 60 | 70 | 60 | 60 | 50 | 40 |
| கீரை | 20 | 30 | 40 | 10 | 20–30 | 40 | 30 | 30 |
| பொன்னாங்காணி | 20 | 40 | 30 | 40 | 20 | 20 | 15 | 12 |
| பச்சை மிளகாய் | 400 | 350 | 300 | 280 | 300 | 600 | 300 | 300-350 |
| புடோல் | 100 | 120 | 80 | 60 | 80 | 100 | 50 | 80 |
| கோவா | 120 | 140 | 120 | 120 | 120 | 140 | 100 | 120 |
| வெண்டி | 180 | 120 | 120 | 100 | 140 | 100 | 100 | 120 |
| போஞ்சி | 200 | 180 | 200 | 160 | 160 | 200 | 140 | 270 |
| லீக்ஸ் | 100 | 170 | 120 | 120 | 120 | 160 | 90 | 120 |
| தேங்காய் | 50 | 40 | 50 | 40–50 | 40–50 | 40 | 30–37 | 30 |
| உருளைக்கிழங்கு | 70 | 80 | 70 | 60 | 60–70 | 80 | 50 | 100–120 |
| தேசிக்காய் | 100 | 80 | 120 | 100 | 100 | 40 | 50 | 40 |
| வல்லாரை | 20 | 20 | 10 | 20 | 20 | 20 | 10 | 10 |
| கறிமிளகாய் | 250 | 280 | 300 | 280 | 400 | 400 | 200 | 200 |
| இராசவள்ளி | 120 | 120 | 160 | 100 | 160 | 140 | 100 | 100 |







**தேவையானவை:**
மரவள்ளிக்கிழங்கு - 1
கடலைப் பருப்பு - 1 கைப்பிடி
வெங்காயம் - 2
பச்சை மிளகாய் - 2
சோம்பு, இஞ்சி
பூண்டு - தேவைக்கேற்ப
உப்பு - தேவைக்கு
எண்ணெய் - பொரிப்பதற்குத் தேவையான அளவு.

**செய்முறை:**
கிழங்கைத் தோல் உரித்து அதை மிக்ஸியில் அரைத்துக் கொள்ளவும். கடலைப் பருப்பை ஊற வைத்து கிழங்கு மாவில் சேர்க்கவும். வெங்காயம், பச்சை மிளகாயைப் பொடியாக நறுக்கி மாவுடன் சேர்க்கவும். அத்துடன் இஞ்சி, சோம்பு, பூண்டை நசுக்கிச் சேர்க்கவும். கடைசியாக மாவில் உப்புச் சேர்த்து வடை போல் தட்டி எண்ணெயில் பொரித்து எடுக்கவும்.

## பெரிய திரை

தொடுபேசியில் உள்ள வீடியோவை, முப்பரிமாணமாகவும் பெரிதாகவும் காட்டும் திரை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் விலை 700 முதல் 1,000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகிறது. இதன் மூலம் திரையில் பார்க்கும் உணர்வைப் பெறலாம்.






## நேற்றைய கடலுணவு விலை நிலைவரம்

| | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] | [illegible] |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 600 | 700 | 600 | 650 | 500 |
| நண்டு | 250 | 500 | 300 | 400 | 400 | 300 | – |
| கணவாய் | 600 | 500 | 500 | 600 | 600 | 650 | – |
| பாரை | 450 | 400 | 500 | 600 | 600 | 600 | – |
| சுறா | 300 | 500 | 600 | 700 | 700 | 600 | – |
| சீலா | 250 | 400 | 400 | 500 | 450 | 300 | 400 |
| விளை | 500 | 450 | 400 | 500 | 500 | – | 400 |
| முரல் | 250 | 350 | 350 | 400 | 400 | 400 | – |
| கும்பிளா | 300 | 300 | 300 | 400 | 450 | 400 | 300 |
| கிழாக்கன் | 400 | 800 | – | – | 400 | – | – |
| ஓரா | 300 | 300 | – | 300 | 350 | 400 | 400 |
| திரளி | 200 | 250 | 200 | 200 | 250 | 200 | 350 |
| நகரை | 150 | 300 | – | 200 | 300 | – | 350 |
| சூடை | 130 | 150 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 200 | 200 | 150 | 300 | 350 | 200 | 200 |
| திருக்கை | 150 | 300 | 200 | 400 | 300 | 200 | 150 |
| மதனம் | 250 | 250 | 180 | 400 | 250 | 300 | 250 |
| கொய் | 100 | 150 | 60 | 100 | 120 | 100 | – |
| பாலை | 100 | 200 | 250 | 400 | 400 | 300 | – |
| வாழை | 150 | 150 | 200 | 300 | 300 | – | 200 |

## வீட்டுக் குறிப்புகள்

**சமையலறையில் எறும்பு தொல்லையா?**
வீட்டிலும், சமையல் அறையிலும் எறும்புகள் இருந்தால், அவை எங்கிருந்து வருகின்றன என்பதை பார்த்து, அங்கு சிறிது பெற்றோலியம் ஜெலியைத் தேய்த்துவிட்டால் எறும்புத் தொல்லை இனி இல்லை.

**திடீர் வெங்காயச் சட்னி செய்ய...**
இட்லிக்குத் தொட்டுக்கொள்ளும் மிளகாய்ப் பொடியுடன் வெங்காயத்தை வெட்டி போட்டு அரைத்தெடுத்தால் திடீர் வெங்காயச் சட்னி தயார். சுவையாகவும் இருக்கும்.

**பீட்ரூட், கரட் வேகவைத்த நீர்...**
பீட்ரூட், கரட் வேக வைத்து வடிகட்டும் நீரைக் கீழே கொட்டிவிடாமல் சிறிது சீனியைப் போட்டு ஆறிய பிறகு குழந்தைகளுக்குக் கொடுக்கலாம். அந்தக் கிழங்குகளை உண்பதைவிட நீரைக் குடிப்பதன் மூலம் சத்து அதிகமாகக் கிடைக்கும். சுவையாகவும் இருக்கும். அனைவரும் அருந்தலாம்.

**நாளை**
தை-12
செவ்வாய்க்கிழமை 26.01.2016
திதி: துதியை மு.ப.09.17
நட்சத்திரம்: மகம் பி.இ.12.29
ராகுகாலம்: 03.36-05.06 வரை
சுபநேரம்: 11.06-12.36 வரை

**பூண்டு சுலபமாக வேக...**
பூண்டை தனித்தனிப் பல்லாகப் பிரித்தெடுத்து சட்டியில் நன்கு வதக்கியபின் உரித்தால் சுலபமாக உரிக்கலாம். பிறகு புளியில் போட்டால் விறைத்துக் கொண்டு சுலபமாக வெந்து விடும்.

**புதிதாக வாங்கும் பொருள்கள்**
புதிதாக எந்தப் பொருளை வாங்கினாலும் அதில் ஒரு வாடை வரும். அதனைப் போக்க எளிதான வழிகள் உள்ளன.
புதிதாக வாங்கும் பிளாஸ்ரிக் பொருள்களில் பிளாஸ்ரிக் வாடை இருக்கும். வெதுவெதுப்பான சுடுநீரும் உப்பும் கலந்து சிறிது நேரம் ஊறவைத்து கழுவி விட்டுபிறகு சுடுநீர் கொண்டு கழுவினால் பிளாஸ்ரிக் வாடை இருக்காது.
புதிதாக வாங்கும் பாத்திரங்களை சோப்புப் பவுடர் போட்டு தண்ணீர் ஊற்றி ஊறவைத்து பின்னர் சிறிது நேரம் கழித்து துலக்கினால் நல்லது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுட்பம்



## சொனி எக்ஸ்பீரியா எம்5 விற்பனைக்குத் தயார்

சொனி நிறுவனத்தின் அறிமுகப்படுத்தவுள்ள சொனி எக்ஸ்பீரியா எம்5 தொடுதிரைக் கைபேசி விற்பனைக்கு விடப்படவுள்ளது என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

5 அங்குல தொடுதிரை மற்றும் முழு எச்டி தீர்மானம் கொண்ட இந்தக் கைபேசி 1920 X 1080 பிக்சல் மற்றும் அக்டா கோர் 64பிற் கொலியோ எக்ஸ்10 புராஸசர் மூலம் இயக்கப்படுகிறது.

மைக்ரோ எஸ்டி அட்டை வழியாக 16ஜிபி வரை விரிவாக்கக்கூடிய 3ஜிபி உள்ளடங்கிய சேமிப்பு நினைவகம்கொண்டதாகவும், முன்புற கமரா 13 மெகாபிக்சல் மற்றும் பின் புற கமரா 21மெகாபிக்சல் வசதி கொண்டதுமாக இந்தக் கைபேசி வடிவமைக்கப்பட்டுள்ளது.



வளர்ந்துவரும் தொடுதிரைக் கைபேசி உற்பத்தி நிறுவனங்களுள் ஒன்றான ஒப்போ தனது எவ்1 செல்பி எனும் புத்தம் புதிய தொடுதிரைக் கைபேசியை அறிமுகம் செய்யவுள்ளது.

முதன் முறையாக ஐரோப்பிய நாடுகளில் அறிமுகம் செய்யப்படவுள்ள இந்தக் கைபேசியானது 5 அங்குல 1280 X 720 பிக்சல் தீர்மானம் உடைய தொடுதிரையையும் ஒக்ரோகோர் குவாண்டம் ஸ்னப்ரகோன் 616 புரஸசரையும் பிரதான நினைவகமாக 3 ஜிபி நினைவகம் மற்றும் 16ஜிபி சேமிப்பு நினைவகம் என்பவற்றைக் கொண்டுள்ளது.

இவை தவிர 13 மெகா பிக்சல் பிரதான கமரா, 8 மெகா பிக்சல் முன்புறக் கமரா என்பனவற்றுடன் இந்தக் கைபேசி வடிவமைக்கப்பட்டுள்ளது.

## விக்கி பீடியாவுக்கு வயது பதினைந்து

உலகில் உள்ள அதிகமான விடயங்களை தெரிந்து கொள்வதற்கான தளமாக உள்ளது விக்கிபீடியா. அதிகமான இணையப் பாவனையாளர்கள் விரும்பும் ஒரு தளமாகவும் அது உள்ளது. விக்கிபீடியா தற்பொழுது தனது 15 வருட சேவையை பூர்த்தி செய்துள்ளது.

இந்தத் தளமானது, 2001ஆம் ஆண்டு ஜனவரி 15 ஆம் திகதி, ஜிம்மி வேல்ஸ் மற்றும் லர்ரி சங்கர் ஆகியோரால் ஆரம்பிக்கப்பட்டது. இணையப் பாவனையாளர்கள் அனைவருக்கும் எந்தவித தடையுமின்றி அனைத்துத் தகவல்களும் வழங்கப்பட வேண்டும் என்ற நோக்குடன் இது ஆரம்பிக்கப்பட்டது.

விக்கிபீடியாவில் உள்ள முக்கிய விடயமாக, இதனைப் பயன்படுத்தும் மக்களுக்கே இதில் பதிவுகளை மேற்கொள்ளவும் மாற்றங்களை செய்யவும் முடியும். தற்பொழுது விக்கி பீடியா 285 மொழி களில் தனது சேவையை வழங்கி வருகின்றது. இதில் பல விடயங்கள் குறித்தும், சுமார் இரண்டு கோடிக்கும் அதிகமான கட்டுரைகள் பதிவேற்றப் பட்டுள்ளன.




ஏதாவது ஒன்றைப் பற்றித் தமக்கு அறிந்த மொழியில் தகவல் தெரிந்து கொள்வதற்கு அதிகமானவர்கள் நாடும் ஒரு தளமாக விக்கிபீடியா உள்ளது. அதில் உள்ள தொடர்புகள் (லிங்) மூலமாக ஏனைய ஒரு விடயத்தைப் பற்றி அறிந்து கொள்ளக்கூடிய வசதியும் உள்ளமை சிறப்பம்சம்.

# ரயில் ரிக்கெட்டுக்கள் கொள்வனவு வசதியை ஹட்ச் அறிமுகப்படுத்தியுள்ளது




இலங்கையில் அதிவிரைவாக வளர்ச்சி கண்டு வருகின்ற 3ஜீ வலையமைப்புக்களில் ஒன்றான ஹட்ச், பெறுமதிமிக்க தனது வாடிக்கையாளர்களுக்கு வழங்கிவரும் பெறுமதிசேர் சேவைகளில் மற்றுமொரு அம்சமாக ஹட்ச் கையடக்கத்தொலைபேசியூடாக நேரடியாக ரயில் ரிக்கெட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு இடமளிக்கும் வகையில் மொபிடெல் மற்றும் இலங்கை ரயில் திணைக்களம் ஆகியவற்றுடன் பங்குடைமையை ஏற்படுத்தியுள்ளது.

தினசரி ரயில் மூலமாகப் பயணிக்கும் 300,000 பிரயாணிகளுக்கு இச்சேவை ஒரு மகத்தான வரப்பிரசாதமாக அமைந்துள்ளதுடன், அவர்கள் தமது ரிக்கெட்டுக்களைக் கொள்வனவு செய்வதற்கு நீண்ட வரிசைகளில் கால் கடுக்கக் காத்திருக்க வேண்டிய அசௌகரியத்தை அகற்றி, தமது கையடக்கத் தொலைபேசியூடாக ரயில் ரிக்கெட் முற்பதிவை மேற்கொள்ளும் வாய்ப்பை அவர்களுக்கு அளித்துள்ளது.

வாடிக்கையாளர்கள் தமது ஹட்ச் கையடக்கத் தொலைபேசியில் 356 இனை டயல் செய்து வாரத்தின் ஏழு நாள்களும், 24 மணி நேரமும் கிடைக்கப் பெறும் முற்பதிவு முகவரின் சேவையின் உதவியுடன் தமது முற்பதிவுகளை மேற்கொள்ள முடியும்.

ரிக்கெட்டுக்கான பணம் முறையான உறுதிப்படுத்தல்களின் பின்னர் கையடக்கத்தொலைபேசி நிலுவையிலிருந்து நேரடியாகக்கழிக்கப்படுவதுடன், எஸ்.எம்.எஸ் உறுதிப்படுத்தல் உடனடியாகவே வாடிக்கையாளருக்கு அனுப்பி வைக்கப்படும். முற்பதிவின் உறுதிப்படுத்தல் விவரங்களை புகையிரத நிலையத்திலுள்ள விசேட கருமபீடத்தில் சமர்ப்பித்து தமது டிக்கட்டுக்களைப்பெற்றுக்கொள்ள முடியும்.

கண்டி–கொழும்பு இன்டர்சிட்டி, வவுனியா இன்டர்சிட்டி, வவுனியா இரவு தபால், யாழ்தேவி, பதுளை இரவு தபால், உடரட்ட மெனிக்கே, பொடி மெனிக்கே மற்றும் ராஜதானி எக்ஸ்பிரஸ் அடங்கலாக முக்கிய புகையிரத மார்க்கங்களுக்கான விசேட புகையிரத ஆசன முற்பதிவு சேவை இதன் மூலமாகக் கிடைக்கப் பெறுகின்றது.

ஹட்ச் நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரியான திருக்குமார் நடராசா கருத்துத் தெரிவிக்கையில் ஹட்ச் வாடிக்கையாளர்களுக்கு மிகவும் பெறுமதியான மற்றும் சௌகரியமான இந்த புகையிரத டிக்கட் பதிவு சேவையை வழங்குவதற்காக மொபிடெல் மற்றும் இலங்கை புகையிரத திணைக் களம் ஆகியவற்றுடன் ஹட்ச் இணைந்துள்ளமையையிட்டு நான் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளேன்.

கையடக்கத்தொலைபேசி வாடிக்கையாளர்களுக்கு சாத்தியமான வழிகளில் இத்தகைய பயன்பாட்டு சேவைகளை வழங்குவதை விஸ்தரிப்பதற்கு, மொபிடெல் போன்ற தொழிற்துறை முன்னணி நிறுவனங்களுடன் ஹட்ச் நெருக்கமாக இணைந்து செயற்பட்டு வருகின்றமைக்கு மற்றுமொரு உதாரணமாக இது அமைந்துள்ளது என்று குறிப்பிட்டார்.

மொபிடெல் நிறுவனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவுக்கான சிரேஷ்ட பொது முகாமையாளரான நளின் பெரேரா கருத்துத் தெரிவிக்கையில் மொபி டெலின் எம் ரிக்கெட்டிங் தளமேடையின் மூலமாக தொழிற்றுறையில் உறுதியான பிணைப்புக்களைக் கட்டியெழுப்பி, சம்பந்தப்பட்ட ஏனைய அனைத்துத் தரப்பினருடனும் சிறந்த வியாபார உறவுமுறைகளை வளர்ப்பதற்கு எமக்கு இடமளிக்கும் வகையில் வாய்ப்பளிக்கும் புதிய பங்குடைமையொன்றில் கால் பதித்துள்ளமையையிட்டு மொபிடெல் மிகவும் மகிழ்ச்சி அடைந்துள்ளது.

ரயில் டிக்கட் முற்பதிவு சேவை ஒரு முக்கியமான முன்னெடுப்பாக அமைந்துள்ளதுடன், எம் ரிக்கெட்டிங்கினால் வழங்கப்படும் சேவைகளை தற்போது ஹட்ச் வாடிக்கையாளர்களும் பெற்று அனுபவிக்க முடியும் என்று குறிப்பிட்டார்.

(த)

# ஏனைய வங்கிகளுக்கு நிதி மாற்றலுக்கு வசதியை தருகிறது கொமர்ஷல் வங்கி

இலங்கை கொமர்ஷல் வங்கி விடுத்துள்ள அறிவித்தல் ஒன்றில், இலங்கையில் முதல் தடவையாக அறிமுகம் செய்யப்படும் திட்டம் ஒன்றின் கீழ், கொமர்ஷல் வங்கியின் இணையத்தள வங்கி சேவையை பயன்படுத்துவோர் தற்போது கணினிச் செயற்பாட்டின் மெய் மைநிலையின்படி அவர்களது கொமர்ஷல் வங்கி கணக்கில் உள்ள நிதியிலிருந்து ஏனைய வங்கிகளிலுள்ள கணக்குகளுக்குப் பணத்தை உடனடி மாற்றம் செய்ய முடியும்.

லங்கா பே சி.ஈ.எவ் திட்டமானது இலங்கை மத்திய வங்கியின் வழிகாட்டலுக்கும் அங்கீகாரத்துக்கும் அமைய லங்கா கிளியர் நிறுவனத்தினால் இயக்கப்படும் செலவு சிக்கனமானதும் சௌகரியமானதுமான ஒருங்கிணைக்கப்பட்ட இலத்திரனியல் கொடுப்பனவு முறைமையாகும். வருடத்தில் 365 நாள்களிலும் பாதுகாப்பான மெய்மைநிலை கொடுப்பனவுகளுக்கு உதவும் இந்த முறைமையில் பணம் பெறுநர் ஒரு செக்கனுக்குள் பணத்தைப் பெற்றுக் கொள்வார்.

இந்த புதிய சிறப்பம்சத்தின் மூலம் ஒரு நேரத்தில் ரூபா 100,000 வரையிலான பணத் தொகையை மாற்றிக்கொள்ள [illegible] இத்திட்டம் வாடிக்கையாளர்களுக்கு அதிக சௌகரியமாக இருக்கும் என்று கொமர்ஷல் வங்கி தெரிவித்துள்ளது.

COMMERCIAL BANK

கொமர்ஷல் வங்கி எப்பொழுதும் வாடிக்கையாளர்களுக்கு துரிதமான, சௌகரியமான சேவையை மேற்கொள்வதற்கு ஆகப்பிந்திய தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தத்தன்னை அர்ப்பணித்துள்ளது என்று வங்கியின் தகவல் தொழில்நுட்ப பிரிவு உதவிப் பொது முகாமையாளர் திரு. கிறிஷான் கமகே தெரிவித்தார். வங்கி நடவடிக்கை வசதிகளில் புதிய ஒரு பரிணாமத்தை பிரதிநிதித்துவம் செய்கிறது என்றும் இணையத்தள வங்கி நடவடிக்கை மூலம் வங்கிகளுக்கிடையிலான மெய் மை நிலை கொடுப்பனவுகளை மேற்கொள்வதில் தாங்கள் மகிழ்ச்சி அடைவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

தொழில்நுட்ப ஆற்றலிலான வங்கி நடவடிக்கை மற்றும் கொடுப்பனவுகளுக்கும் எவ்வேளையிலும் எவ்விடத்திலும் வாடிக்கையாளர் வங்கி நடவடிக்கைக்கும் இலங் கையின் வங்கித்துறையில்கொமர்ஷல்வங்கி முன்னோடியாக விளங்குகிறது. வங்கியின் ஏ.ரி.எம் வலையமைப்பும் மிகப் பெரும் இலத்திரனியல் பணம் வழங்கும் திட்டத்தையும் கொண்டுள்ள நாட்டின் ஒரேயொரு வங்கியாகும்.

வணிகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹுசைன்

இது தொடர்பில் கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளர் அல் ஹுசைனும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜும்,அடுத்த மாதம் 5ஆம் திகதி இலங்கைக்கு வருகை தரவுள்ளனர்.

இவர்கள் இருவருமே, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்ட அரசின்உயர்நிலைப்பிரமுகர்களைச் சந்தித்துப் பேசவுள்ளதுடன், வடக்குக்கும் பயணம் மேற்கொள்ளவுள்ளனர்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்களையும் சந்திக்கவுள்ள இவர்கள், வடக்கு மாகாண முதலமைச்சருடனும் கலந்துரையாடவுள்ளனர்.

இந்திய-இலங்கை கூட்டுக்குழுக் கூட்டத்துக்காக இரண்டு நாள் பயணமாகக் கொழும்பு வரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், ஆட்சி மாற்றத்துக்குப் பின்னர் இலங்கைக்கு மேற்கொள்ளும் இரண்டாவது பயணம் இதுவாகும்.

அத்துடன், கடந்த ஆண்டு ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளராகப் பதவியேற்ற பின்னர், அல் ஹுசைன் இலங்கைக்கு மேற்கொள்ளும் முதல் பயணம் இதுவாகும்.

இந்தப் பயணத்தின்போது, ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் போரினால் பாதிக்கப்பட்டவர்களையும் சந்தித்துப் பேசத் திட்டமிட்டுள்ளார் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஐ.நா.மனித உரிமைகள் ஆணையாளரின் வருகைக்கு முன்னர் இராணுவத்தினர் வசமுள்ள தனியார் காணிகள் தொடர்பான விவரங்களைப் பாதுகாப்பு அமைச்சு அவசர அவசரமாகத் திரட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (வ)

## வடக்கு

9.30 மணி தொடக்கம் 4.30 மணி வரை, அந்தந்த மாவட்ட செயலகங்களில் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன்படி ஒவ்வொரு மாவட்டத்துக்கும் இருநாட்கள் ஒதுக்கப்படவுள்ளன. இதன்போது, மக்கள் தமது கருத்துக்களை எழுத்து மூலம் அல்லது வாய்மொழி மூலம் வழங்க முடியும் எனக் குழுவினர் அறிவித்துள்ளனர்.

இதன்படி, வடக்கு மாகாணத்தில் அடுத்த மாதம் 5ஆம், 6ஆம் திகதிகளில் வவுனியா மாவட்டத்திலும், 8ஆம், 9ஆம்திகதிகளில்கிளிநொச்சி மாவட்டத்திலும் மக்களின் கருத்துக்கள் பெறப்படவுள்ளன.

அத்துடன் அடுத்த மாதம் 10ஆம் 11ஆம் திகதிகளில் மன்னார் மாவட்டத்திலும், 12 மற்றும் 13ஆம் திகதிகளில் முல்லைத்தீவு மாவட்டத்திலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

மேலும், யாழ்ப்பாணத்தில் பெப்ரவரி 15ஆம், 16ஆம் திகதிகளில் மக்கள் தமது கருத்துக்களை முன்வைக்க முடியும்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் அடுத்த மாதம் 23, 24ஆம் திகதிகளில் திருகோணமலை மாவட்டத்திலும்- 25, 26ஆம் திகதிகளில் மொனராகலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களிலும், 27 மற்றும் 29ஆம் திகதி அம்பாறை மாவட்டத்லும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

இது தொடர்பிலான மேலதிகத் தகவல்களை 011 243 7676 என்ற தொலைபேசி இலக்கத்திற்கு அழைப்பதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பருத்தித்துறையில்

பாடு பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டிருப்பதாகவும் பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பில் தெரியவருவதாவது,வடமராட்சி பருத்தித்துறை பகுதியில் இரு நகைக்கடைகள் உடைக்கப்பட்டு நகைகள் களவாடப்பட்டிருக்கின்றன. குறித்த நகைக் கடைகளின் உரிமையாளர்கள் நேற்று முன் தினம் சனிக்கிழமை இரவு கடையை ப் பூட்டி விட்டு சென்றுள்ளனர். இந்த நிலையில், குறித்த இரண்டு நகைக் கடைகளும் இரவு உடைக்கப்பட்டிருப்பதாகமுறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை போக்குவரத்து சபை டிப்போக்கு அருகில் உள்ள கடையின் உரிமையாளர் நேற்று முன்தினமிரவு கடையைப் பூட்டி விட்டு சென்ற நிலையில்,கடையின் பின் பக்கக் கதவை உடைத்து உள் நுழைந்த திருடர்கள், கடையில் சல்லடை போட்டு தேடிய போதிலும் தங்க நகைகள் எதுவும் கிடைக்காத நிலையில், அங்கு காட்சிக்கு வைக்கப்பட்டிருந்த வெள்ளி நகைகளைத் திருடிச்சென்றிருப்பதாக பருத்தித்துறை பொலிஸ் நிலையத்தில் கடை உரிமையாளரால் முறையிடப்பட்டுள்ளது.

இதேபோன்று, பருத்தித்துறை நகரப் பகுதியில் உள்ள பிறிதொரு நகைக் கடையும் உடைக்கப்பட்டு இதே பாணியில் களவாடப்பட்டுள்ளது.

குறித்த இரு சம்பவங்கள் தொடர்பில் தீவிர விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பருத்தித்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை அண்மையில் வடமராட்சியில் ஒரே இரவில் மூன்று வீடுகளுக்குள் ஆயுதங்களுடன் புகுந்த கும்பல் பெருமளவான நகைகள்,பணம் என்பவற்றை கொள்ளையடித்துச் சென்றிருந்தனர். இந்தக் கொள்ளை குழுவுக்கும் குறித்த நகைக் கடைத் திருட்டுச்சம்பவத்துக்கும் இடையில் தொடர்புகள் இருக்கின்றனவா என்ற கோணத்தில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர் .

(த-வ-109)

## முஸ்லிம்கள்

சமூகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நிறங்கள் அகற்றப்பட்டிருந்தன.

இலங்கையின் தேசியக் கொடி மஞ்சள் நிறப் பின்னணியில் அமைந்துள்ளது. இதில் இரண்டு பகுதிகளைக் காணமுடியும். கொடிக் கம்பத்தின் பக்கம் இருக்கும் பகுதியில் செம்மஞ்சளும், பச்சையுமான நிலைக்குத்தான இரண்டு பட்டைகள் உள்ளன.

கொடியின் பெரும்பகுதியை அடக்கியுள்ள மற்றப் பகுதி கருஞ்சிவப்பு நிறத்தில் மஞ்சள் நிறத்திலான வாளேந்திய சிங்கமொன்றையும், நான்கு மூலைகளிலும் அரச மரத்து இலைகளையும் கொண்டுள்ளது.

செம்மஞ்சள் நிறப் பட்டை தமிழரையும், பச்சை நிறப் பட்டை முஸ்லிம்களையும், சிங்கத்துடன் கூடிய கருஞ்சிவப்பு நிறப் பகுதி சிங்களவர்களையும் குறிப்பதாகக் கொள்ளப்படுகின்றது.

இந்த நிலையிலேயே, சிங்களவர்களை மாத்திரம் குறிக்கும் வகையில் தயாரிக்கப்பட்ட கொடியை ஏந்தியவாறு பேரணியை முன்னெடுத்தனர்.

குறிப்பாக, முஸ்லிம்கள் செறிந்து வாழும் நகரங்களை நெருங்கும் போது பலமாக சிங்க லே என்ற கோஷம் எழுப்பப்பட்டது. கேகாலை, திஹாரி போன்ற பகுதிகளில் பட்டாசு கொளுத்தி வரவேற்பளிக்கப்பட்டுள்ளது.

பின்னர், மாவனல்லை பகுதிக்கு வருகைதந்தபோது, பொலிஸாருக்கும் சிங்க லே அமைப்பினருக்குமிடையில் முறுகல்நிலை ஏற்பட்டது.

பொதுமக்கள் அமைதிக்குப் பங்கம் விளைவிக்க வேண்டாம் எனப் பொலிஸார் கோரிக்கை விடுத்தனர். அதற்கு அவர்கள் செவி சாய்க்கவில்லை. பொலிஸாரின் உத்தரவையும் மீறி பட்டாசு கொளுத்தினர். அத்துடன், நிறுத்திவைக்கப்பட்டிருந்த வாகனங்களில் சிங்க லே என்ற ஸ்டிக்கர் ஒட்டப்பட்டது.

மாலை தலதாமாளிகை சென்றடைந்ததும் தேசியக் கொடியைத் தவிர, ஏனைய கொடிகளை கொண்டு செல்வதற்குப் பொலிஸார் அனுமதியளிக்க மறுத்தனர். இதனால் பதற்றமானதொரு நிலை உருவாகிறது.

சிங்க லே என்ற அமைப்பு பொது பல சேனாவின் துணை அமைப்பாகவே கருதப்படுகிறது. சிங்கள பௌத்தர்களின் உரிமைகளைப் பாதுகாக்கின்றனர்என்றபோர்வையில்அண்மைக் காலங்களில் இனவாத பரப்புரையில் அந்த அமைப்பு ஈடுபட்டுள்ளது. நுகேகொடையில் முஸ்லிம்களின் வீடுகளுக்குச் சிங்கத்தின் இரத்தம் ஸ்டிக்கர் ஒட்டப்பட்ட விவகாரம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-வ-சி)

## கொழும்புத்

அனுமதிக்க வேண்டிய நிலையில் இலங்கை இருக்கிறது. இதனை இலங்கை அதிகாரிகள் இந்தியாவிடம் எடுத்துக் கூறியுள்ளனர்.

இந்தநிலையில் இந்தத் திட்டத்தை தொடர அனுமதிப்பதுக்கு இந்தியா இணக்கம்தெரிவித்துள்ளது. ஆனால், இரண்டு நிபந்தனைகளை இந்தியா விதித்துள்ளது.

கொழும்புத் துறைமுக நகரத்தில் சீனாவுக்கு நில உரிமை வழங்கப்படக் கூடாது, கொழும்புக்கு அருகே சீன நீர்மூழ்கிகளை நடமாட அனுமதிக்கக் கூடாது ஆகிய இரண்டு நிபந்தனைகளையுமே இந்தியா விதித்துள்ளது என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (வ)

## குருநகர்

தம்பியார் படகில் இருந்து பார்த்துக் கொண்டு இருந்துள்ளார்.

கடல் இரண்டு அடித் தண்ணியில் இருந்தாகவும் திடீரென கடல் பெருக்கெடுத்த நிலையில் கடலில் நீர் மட்டம் உயர கடலில் குதித்த சிறுவன் கடல் நீரில் மூழ்கி சாவடைந்துள்ளார்.

படகில் இருந்த தம்பியார் அழுவதை அவதானித்த தந்தையார்,மகனிடம் விசாரித்த போது, அவர் நடந்த சம்பவத்தை கூறியதாகவும் கடலில் தேடி சடலத்தை எடுத்ததாகவும் விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குறித்த சிறுவனின் சடலம் யாழ்.போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த நிலையில் உடற்கூற்று விசாரணையைத் தொடர்ந்து சடலம் பெற்றோர்களிடம் கையளிக்கப்பட்டது.

இந்தச் சம்பவம் குறித்து யாழ்ப்பாணம் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டுள்ளார்கள்.

(வ-ரி5,86, 107)

## இலங்கை


தினத்தன்று மதுரையில் மக்கள் நல கூட்டணி இயக்கம் சார்பில் மாநாடு நடத்தப்படும்.

இந்த மாநாட்டில் சட்டமன்றத் தேர்தலில் எடுக்கவேண்டிய முடிவுகள் குறித்து தீர்மானிக்க உள்ளோம். மது ஒழிப்பு, ஊழல் ஒழிப்பு போராட்டங்களுக்கு எதிர்வரும் தேர்தலில் விடை கிடைக்கும்.

இலங்கைப் பிரச்சினையிலும், ஜல்லிக்கட்டு பிரச்சினையிலும் மத்திய அரசு தமிழகத்தை வஞ்சித்து விட்டது. மக்கள் நலக் கூட்டணியில் சேருமாறு தே.மு.தி.க.வுக்கு அழைப்பு விடுத்ததற்கு இதுவரை பதில் வரவில்லை எனவும் தெரிவித்துள்ளார். (தி)

## மரண அறிவித்தல்கள்

### முத்தன் கிருஸ்ணன்



பிறப்பு 22.07.1935 — இறப்பு 20.01.2016

முருகன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வீரபத்திரர் வீதி, கோண்டாவில் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தன் கிருஸ்ணன் 20.01.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தன் - கதிரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான முத்தன் - சின்னாச்சி தம்பதியரின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், நீலாதேவி, கிருபாகரன் (லண்டன்), காலஞ்சென்றவர்களான செல்வராசா, மகேந்திரம், சிவலிங்கம், சுசிலா, ரகுநாதன், சந்திரன், சோபனா ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கனகலிங்கம் மற்றும் சுரேகா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அபினயன், கிருத்திகா, சாருகி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு பேரனும், காலஞ்சென்றவர்களான சண்முகம், ராசமணி, சின்னத்தங்கம், லட்சுமி மற்றும் அப்புத்துரை, சின்னமணி, றோசுமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (25.01.2016) திங்கட்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொட்டைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


வீரபத்திரர் வீதி,
கோண்டாவில் வடக்கு. (68312)(11,15)

தகவல்:
குடும்பத்தினர்.

077 710 8185, 077 483 4567

### ஜோசப் குணசீலன்

(ஓட்டோ சீலன்)



தோற்றம் 1962 . 08 . 24 — மறைவு 2016 . 01 . 23

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை ஜோசப் குணசீலன் 23.01.2016 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனிப்பிள்ளை விக்ரோறியா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான மரியாம்பிள்ளை, மேரிமெற்றலின் தம்பதியரின் அன்பு மருமகனும் நிர்மலாவின் அன்புக் கணவரும் சில்வியா, பெல்சியா ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிறோசா, ஜெறோசா(கனடா), ஜெனோசா, சனோசா, ரிறோன் ஆகியோரின் அன்புத்தந்தையும் டெறீந்திரன், குணபாலன் (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும் டெறீந்திரன், குணபாலன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜீன், அன்சிக்கா, மெரீன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (26.01.2016) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்திலிருந்து மாலை 3.30 மணியளவில் தூயகதிரை அன்னை ஆலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இரங்கற் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு தூயகதிரை அன்னை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சில்லாலை,
பண்டத்தரிப்பு.

தகவல்:
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்கள்

### திருமதி பரமேஸ்வரி சங்கரப்பிள்ளை

மண்ணில் 27 . 04 . 1921



விண்ணில் 23 . 01 . 2016

வல்வெட்டியைப் பிறப்பிடமாகவும் சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பரமேஸ்வரி சங்கரப்பிள்ளை (23.01.2016) சனிக்கிழமை காலை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மாணிக் கம்-தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற குணரத்தினம் -முத்துப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற சித்தஆயுள்வேத வைத்தியர் குணரத்தினம் சங்கரப்பிள்ளையின் அன்பு மனைவியும், திருமதி புவனேஸ்வரி கணேசலிங்கம், காலஞ்சென்ற மாணிக்கம் சண்முகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான திருமதி தெய்வானைப்பிள்ளை பூலோகசுந்தரம், திருமதி சிவக்கொழுந்து இராசா, செல்லத்துரை (அதிபர்), திருச்செல்வம் ஆகியோரின் மைத்துனியும், கோகிலாதேவி (கனடா), திருச்சிற்றம்பலம் (ஆஸ்திரேலியா), செல்வலக்குமி (கனடா), விக்னேஸ்வரமூர்த்தி (கனடா), ஆகியோரின் அன்புத் தாயாரும் திருநடராசா (கனடா), பாலசுந்தரி (ஆஸ்திரேலியா), செல்வானந்தம் (கனடா), கீதா (கனடா) ஆகியோரின் அன்பு மாமியும், சஜீவ், ஸ்ரீகாயத்திரி, கௌரி, ஐங்கரன், திருக்குமரன், ரஞ்ஜீவ், திருமகள், லவன், கோஸிகா, முருகானந்தம், சுரேஸ்குமார், சஞ்சாரிணி, இந்துமதி, மயூரி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், அபர்ணா, ஹரன், அருணா, ஆர்யலஷ்மி, ஆனந்மாஹி, ஆத்மீஹன், விசாள், பிரியா, மீராலஷ்மி, சியான் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2016) திங்கட்கிழமை பி.ப.ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக திருவடி நிலை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளுவன் சந்தி, சுழிபுரம்.**
**14166659007 (கனடா),**
**077 3855147**
**0766503900**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### திருமதி சரஸ்வதி முத்துக்குமார்



வேலணை கிழக்கு 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வியாசர் வீதி, பண்டாரிக்குளத்தை (வவுனியா) வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி முத்துக்குமார்நேற்று (24.01. 2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி இளையபிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை சீதேவிப்பிள்ளை தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற முத்துக் குமாரின் அன்பு மனைவியும், யசோதபாலன், பரிமளம், ஜெயபால ரட்ணம் (பிரான்ஸ்), ஸ்ரீபாலன் (சுவிஸ்), நவபாலன் (லண்டன்), விஜயா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சுந்தரபவானி, விஜயரட்ணம், வாசுகி (பிரான்ஸ்), ராதிகா (சுவிஸ்), குகதர்சினி (லண் டன்), சந்த நிகேதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், தர்சன் (துபாய்), தக்ஷன், நிக்ஷன், விதுஷன், வானுஜன், பவீனா, தேனுஷா, ஷர்மிலினி (பிரான்ஸ்), நிஷாலினி (சுவிஸ்), யதுஷா லினி (சுவிஸ்), அபினாஸ் (லண்டன்), அபிரா (லண்டன்), நிது ஷன் (சுவிஸ்), நிதுரா (சுவிஸ்) ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வியாசர் வீதி,**
**பண்டாரிக்குளம்,**
**வவுனியா**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# சீபாவில் கைச்சாத்திடுவதற்கு இந்தியாவுடன் இரகசியப் பேச்சு

## அரசைக் குற்றஞ்சாட்டுகிறது ஜே.வி.பி.

கொழும்பு, ஜன.25

சீபா உடன்படிக்கையை பெப்ரவரி மாதத்தில் கைச்சாத்திட்டுக்கொள்வதற்கு தேசிய அரசு தீர்மானித்துள்ளது என்றும், இதுபற்றி டில்லியுடன் கொழும்பு இரகசியப் பேச்சுகளை ஆரம்பித்துள்ளது என்றும் ஜே.வி.பி. தெரிவித்துள்ளது.

ஜே.வி.பியின் செய்தியாளர் மாநாடு நேற்று பெலவத்தையிலுள்ள அக்கட்சியின் தலைமையகத்தில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே நாடாளுமன்ற உறுப்பினர் பிமல் ரத்நாயக்க இந்தத் தகவலை வெளியிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

சந்திரிகா, மகிந்த ஆகியோர் இந்தியாவுடன் சீபா உடன்படிக்கையில் கைச்சாத்திடவில்லை. அதனால், நாட்டுக்கு எந்த நன்மையும் இல்லை. இதன்காரணமாகவே முன்னாள் அரசு அதை புறக்கணித்து வந்தது.

இந்தநிலையில், மைத்திரி - ரணில் அரசு இதனை மீண்டும் செய்துகொள்வது தொடர்பில் தற்போது இந்திய அரசுடன் பேச்சு நடத்தி வருகின்றது. இதற்காக இந்திய அரசுடன் இரகசிய ஆலோசனைகள் இடம் பெறுகின்றன.

அடுத்த மாதம் சீபா ஒப்பந்தம் செய்துகொள்ளப் படவுள்ளது. அவ்வாறு இந்த உடன்படிக்கை மட்டும் கைச்சாத்திடப்படுமானால், அது நிச்சயமாக இலங்கைக்குப் பெரியளவில் பொருளாதார வீழ்ச்சியையே ஏற்படுத்தும்.

அதாவது, வேலையில்லாமல் இருக்கும் இந்தியர்கள் இலகுவாக இலங்கையில் வேலை பெற்றுக் கொள்ளக்கூடிய சந்தர்ப்பங்கள் உருவாக்கப்படும். அவர்கள் சுயாதீனமாகத் தொழில் ஆரம்பித்தால், எம்மால் அதனைத் தடுக்கமுடியாத நிலைமை ஏற்படும். அங்குள்ளவர்கள் இங்கு வந்து குடியேற ஆரம்பிப்பார்கள். இலங்கைச் சந்தையை இந்தியர்கள் ஆக்கிரமிப்பார்கள். இதனால், சுதேச வர்த்தகர்களுக்கும் வியாபாரிகளுக்கும் மிகப்பெரிய நஷ்டம் ஏற்படும் .

இந்தியாவுக்கு சீபா உடன்படிக்கை சாதகமானது என்பதால், இந்திய அரசு எப்படியும் இதனை செய்துகொள்ளவே முயற்சிக்கும். எனினும், இதற்கு அரசை அனுமதிக்க விடக்கூடாது.

எனவே, தொழிற்சங்கங்களும், தொழிலாளர் இயக்கங்களும் ஒன்றிணைந்து இது விடயத்தில் அரசை தோல்வியடையச் செய்யவேண்டும் என்றார். (வ-சி)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி நிர்மலா திருஞானம்

(சுகாதாரப்பணி உதவியாளர், ஏழாலை)

பிறப்பு 07 . 04 . 1977



பிறப்பு 24 . 01 . 2016

அளவெட்டிதெற்கு கலைநகரைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி மேற்கு, காட்டுப்புலத் தினை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நிர்மலா திருஞானம் நேற்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கிருஸ்ணராஜா மற்றும் சரோஜினிதேவி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நாராயணப்பிள்ளை மற்றும் சிந்தாமணி தம்பதியரின் அன்பு மருமகளும், திருஞானத்தின் பாசமிகு மனைவியும், பிரவினி (க. பொ.சாதரணமாணவி, ஸ்கந்தவரோதயாக்கல்லூரி), மிலன்சி (தரம்-06, மாணவி, அருணோதயாக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், யோகினி, மாலினி, தினேஸ் (பிரான்ஸ்), திலீப் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01.2016) திங்கட்கிழமைநண்பகல் 12 மணியளவில் அளவெட்டி மேற்கு, காட்டுப்புலத்தில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சண்டிலிப்பாய் கொட்டுப் பனை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்டர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

### செல்வத்துரை பத்மநாதன் (வேலுமாஸ்ரர்)

(ஓய்வு பெற்ற அதிபர் - யா/காரைநகர் இந்துக்கல்லூரி, யா/காரைநகர் யாழ்ரன் கல்லூரி, யா/சுழிபுரம் விக்டோறியா கல்லூரி)

மண்ணில் 17 . 07 . 1932



விண்ணில் 24 . 01 . 2016

யாழ் கொட்டியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட செல்வத்துரை பத்மநாதன் நேற்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வத்துரை - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான சிவஞானசுந்தரம் - மனோன்மணி தம்பதிகளின் அன்புமருமகனும் லீலாவதியின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற கல்யாணி மற்றும் ராகவன் (மாகாண அலுவலகம் -தொழிற்துறைத் திணைக்களம்), கேதீசன் (தோட்ட முகாமையாளர் - பளை), மயூரன் (பிரதேசசபை - வேலணை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற அன்னலட்சுமி மற்றும் யோகலட்சுமி, பரமநாதன், தனலட்சுமி ஆகியோரின் சகோதரனும் பொன்முடி (யா/சென்.ஜேம்ஸ் மகளிர் பாடசாலை), சுகந்தினி (கோட்டக்கல்வி, அலுவலகம் - யாழ்ப்பாணம்), துவாரகா (கொமர்ஷல் வங்கி - சுன்னாகம்) ஆகியோரின் மாமனாரும் மாதுளன், சேந்தன், நிலவன், கேசாயினி, கம்சாயினி, கிரிஷா, வர்சாயினி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.01. 2016) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக வில்லூன்றி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**26, சீனிவாசகம் வீதி,**
**கொட்டடி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

# பொன்சேகாவுக்கு தேசியப்பட்டியல் நியமன எம்.பி. வழங்க எதிர்ப்பு

கொழும்பு, ஜன.25

முன்னாள் இராணுவத் தளபதி பீல்ட் மார்ஸ்சல் சரத் பொன்சேகாவுக்கு தேசியப் பட்டியல் ஊடாக ஆசனம் வழங்கப்படுவதனை ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் சிலர் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் சில அமைச்சர்கள் எதிர்ப்பை வெளியிட்டுள்ளனர்.

அண்மையில் மறைந்த முன்னாள் அமைச்சர் எம்.கே.டி.எஸ். குணவர்தனவின் வெற்றிடத்திற்காக சரத் பொன்சேகாவை நியமிக்க முயற்சிக்கப்பட்டு வருகின்றது. சரத் பொன்சேகா பொதுத் தேர்தலில் போட்டியிட்டு தோல்வியடைந்தவர் எனவும் எனவே அவரைத் தேசியப் பட்டியல் ஊடாக நியமிக்கக் கூடாது எனவும் அமைச்சர்கள் கோரியுள்ளனர்.

இவ்வாறு நிய மித்தால் அது கட்சி விதிகளை மீறும் வகையில் அமைந்து விடும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இதேவேளை, சுரனிமல ராஜபக்ச, கிரிசாந்த பிரசாத் குரே மற்றும் எர்வின் வீரக்கொடி ஆகியோரும் தேசியப் பட்டியல் பத விக்காக போட்டியிட்டு வருவதா கத் தெரிவிக்கப்படுகிறது. (வ)

## மரண அறிவித்தல்

### எஸ்தாக்கி அலன்டே (பயஸ்)



பாஷையூரை பிறப்பிடமாகவும் குருநகரை வசிப்பிடமாகவும் கொண்ட எஸ்தாக்கி அலன்டே நேற்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (25.01.2016) திங்கட்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரின் இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு பரிசுத்த கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**486/1, கடற்கரை வீதி,**
**குருநகர், யாழ்ப்பாணம்.**

**தகவல் :**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதலாம் தரத்திலிருந்து பாலியல் கல்வியை ஆரம்பிக்கப் பரிந்துரை

## வழங்கியுள்ளது சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை

கொழும்பு, ஜன.25
இலங்கையில் முதலாம் தரத்தில் பாலியல் கல்வியை முன்னெடுக்க தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை, கல்வி அமைச்சுக்குப் பரிந்துரை செய்துள்ளது.
பாடசாலை மாணவர்களுக்கு முதலாம் தரத்தில் கட்டம் கட்டமாகப் பாலியல் கல்வி குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவது அவசியம் எனவும் அதிகாரசபை சுட்டிக்காட்டியுள்ளது.
இது தொடர்பில் அந்த அமைப்பின் தலைவி மருத்துவர் நடாஷா பாலேந்திரா தெரிவித்துள்ளதாவது:-
பாலியல் கல்வியைப் பாடசாலைத் திட்டத்தின் ஒரு பகுதியாக முன்னெடுக்க தாம் நாட்டின் கல்வி அமைச்சுக்குப் பரிந்துரை செய்துள்ளோம்.
இலங்கையில் சிறார்கள் மீதான பாலியல் துஷ்பிரயோகங்களை தடுக்கும் ஒரு முயற்சியாக உடற்கூறு மற்றும் வாழ்க்கை குறித்த அடிப்படை அம்சங்களை புரிந்து கொள்ளும் வகையில் இந்தப் பாடத்திட்டம் வடிவமைக்கப்படவுள்ளது .
சிறார்களுக்கு தமது உடல் அதன் வளர்ச்சி ஆகியவை குறித்த விளக்கத்தை அளிக்க வேண்டியது அவசியம் என்பதை நாம் வலியுறுத்தியுள்ளோம்.
இவ்வாறான கல்வியறிவை போதிக்கும்போது, பாலியல் துஷ்பிரயோகம் என்றால் என்ன என்பதை சிறார்கள் அறிந்து கொள்ள முடியும். அதன் மூலம் அவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என நாம் நம்புகின்றோம்.
குற்றவியல் சட்டங்களால் மட்டும் சிறார்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாது . பெற்றோர் அல்லது பெரியோர்களும் இது தொடர்பில் சிறார்களுடன் பேசி, புரிய வைக்க வேண்டும்-என்றார்.
(வ)

## தொடர்ச்சிகள்...

### தேசியப்

கொழும்பு ஆங்கில ஊடக மான சண்டே ரைம்ஸ் வார இதழுக்கு வழங்கி யுள்ள செவ்வியிலேயே பாதுகாப்புச் செயலாளர் மேற்கண்டவாறு கூறியுள்ளார். இது தொடர்பில் அந்தச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-
வடக்கில் படையினரின் வசம் உள்ள தனியார் காணிகளை விடுவிப்பதைத் துரிதப்படுத்து வதற்காக, பாதுகாப்புச் செயலாளர் கருணாசேன ஹெற்றியாராச்சி தலைமையிலான குழுவொன்றை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நியமித்துள்ளார்.
வடக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டச் செயலாளர்கள், இராணுவத் தளபதி லெப். ஜெனரல் கிரிசாந்த டி சில்வா, மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் மற்றும் வடக்கு மாகாண ஆளுநர் எச்.எம்.ஜி.எஸ்.பளிஹக்கார ஆகியோர் பங்கேற்ற உயர்மட்டக் கூட்டத்திலேயே இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது.
ஜனாதிபதி மைத்திரிபால தலைமையில் சுமார் ஒரு மணிநேரம் இந்தக் கூட்டம் இடம்பெற்றது.
இது தொடர்பில் கருத்து வெளியிட்டுள்ள பாதுகாப்புச் செயலர் கருணாசேன ஹெற்றியாராச்சி, நாம் நாளைமறுதினம் புதன்கிழமை யாழ்ப்பாணம் சென்று படையினர் வசமுள்ள தனியார் காணிகள் தொடர்பான தகவல்களைத் திரட்டவுள்ளோம். அடுத்த ஒரு மாதத்துக்குள் ஜனாதிபதியிடம் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டியுள்ளது.
தேசிய பாதுகாப்பு நலன்களுக்குத் தேவைப்படும் காணிகள் விடுவிக்கப்படாது. அந்தக் காணிகளின் உரிமையாளர்களுக்கு மாற்று இடங்களில் காணிகள் வழங்கப்படும்-என்றார்.
படையினர் வசமிருந்த தனியார் காணிகளில் 3,000 ஏக்கர் காணிகளை அரசு இதுவரை விடுவித்துள்ளது.மேலும் 6,000 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா மற்றும் மன்னார் மாவட்டங்களில் காணிகள் விடுவிக்கப்பட வேண்டியுள்ளன.
வடக்கு மாகாணத்தில் சுமார் 11 ஆயிரம் குடும்பங்கள் மீள்குடியமர்த்தப்பட வேண்டும். இவர்களில் 1,600 குடும்பங்கள் 32 நலன்புரிமுகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் குறிப்பிட்டுள்ளார்.
அத்துடன், வடக்கில் மீள்குடியேற்றப் பணிகளைத் துரிதப்படுத்துமாறு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன விடுத்துள்ள அறிவுறுத்தலுக்கு அமைய, எமது அமைச்சின் அதிகாரிகள் மீள்குடியேற்றப் பணிகளை விரைவுபடுத்தியுள்ளனர் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.
இதேவேளை, வடக்கில் உள்ள படைத்தளங்களை வேறு இடங்களுக்கு மாற்றுவது தொடர்பான எந்த உத்தரவும் தமக்குக் கிடைக்கவில்லை என இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் ஜெயநாத் ஜெயவீர தெரிவித்துள்ளார் என அந்தச் செய்தியில் குறிப்பிடப் பட்டுள்ளது. (வ)

### காணாமற்

திறப்பு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே ஜனாதிபதி மேற்படி உறுதிமொழியை வழங்கியுள்ளார்.
இதன்போது, குறித்த ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற தமிழ் ஊழியர்களிடம் ஒரு சில கவலைகள் குறித்து கேட்டறிந்தார். போர் முடிவுக்கு வந்து ஏழு ஆண்டுகள் ஆகின்ற போதும் வடக்கின் சிலபகுதிகள் மோசமான உட்கட்டமைப்பு வசதிகளே காணப்படுகின்றன என அவர்கள் ஜனாதிபதியிடம் குறிப்பிட்டனர்.
மேலும் போரின் போதும் அதற்கு பின்னரும் பயங்கரவாத தடைச் சட்டத்தில் பல தமிழர்கள் கைது செய்யப்பட்டனர் மற்றும் பலர் காணமற்போயும் உள்ளனர் என பலர் ஜனாதிபதியிடம் கவலையுடன் தெரிவித்தனர்.
அத்துடன், தமது சொந்த வாழ்விடங்களில் வாழ்வதற்கான அனுமதியை வழங்குமாறும் குறித்த பணியாளர்கள் ஜனாதிபதியிடம் கேட்டுக்கொண்டனர். இதன்போது, உங்களுடைய வாழ்விடங்கள் எங்கே என ஜனாதிபதி வினவியுள்ளார்.
அதற்கு கேப்பாபுலவு என பதிலளித்த பணியாளர்களை, அங்கு யார் இப்போது உள்ளனர் என மீண் டும் கேள்வியெழுப்பினார் மைத்திரிபால சிறிசேன. அங்கு விமானப் படையனர் உள்ளனர் என பணியாளர்கள் குறிப்பிட்டுள்ளனர்.
இதன்போது, பதிலளித்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன,
உங்கள் அனைத்துக் கவலை கள் குறித்தும் கவனத்தில் எடுத்துக் கொள்வேன். குறிப்பாக, வடக்கில் நூற்றுக் கணக்கானோர் காணாமற் போயுள் ளதாக முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எனவே, இவை தொடர்பில் உரிய தீர்வைப் பெற்றுக் கொள்வதற்கு ஏற்கனவே அரசு உறுதியளித்ததன் பிரகாரம் காணாமற்போனோர் அலுவலகத்தை அமைக்கும்.
அத்துடன், பயங்கரவாத தடைச்சட்டத்தின் பிரகாரம் கடந்த ஆட்சியில் சந்தேகத்தின் பேரில் பலர் கைது செய்யப்பட்டுள்ளனர். எனினும் புதிய அரசு உறுதியளித்ததன் பிரகாரம் பயங்கரவாதச் சட்டத்தை நீக்கி, அதற்குப் பதிலாக புதிய சட்டத்தை அறிமுகப்படுத்துவோம்.
மேலும், வாழ்விடங்களை யிழந்து இடம்பெயர்ந்துள்ள மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்வதற்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப் படும்.போரினால் பாதிப் படைந்த மக்களுக்கு உட்கட்டமைப்பு வசதிகளை மாத்திரம் மேம் படுத்துவதால் அவர்களுக்கு சந்தோசத் [illegible] யாழ். [illegible] இதயங்களை வெல்ல வேண்டும் -என்றார். (வ-101)

6 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்
09 . 10 . 1942

ஆண்டவன் அடியில்
31 . 01 . 2010

திருமதி
இராசதுரை கமலாச்சி

நிஜமாக நீங்கள் மறைந்து
ஆண்டுகள் ஆறானதோ !
நீங்கள் இல்லா மனை
பொலிவிழந்து போனதுவோ !
உங்களை நினைத்து - தினம் தினம்
நாம் ஏங்கித் தவிக்கின்றோம்
காலங்கள் ஓடிக் கடந்தாலும் - அம்மா
உங்களை எங்கள் உள்ளத்தில்
வைத்துப் பூஜிப்போம்

உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்போம்
ஓம் சாந்தி... சாந்தி... சாந்தி...

ஒஸ்கா ஒழுங்கை
உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.

குடும்பத்தினர்.

மரண அறிவித்தல்

## திருமதி மேரிராணி ஜெயராஜா (மணி)



வல்வெட்டித்துறையைச் சேர்ந்த திருமதி மேரிராணி ஜெயராஜா (மணி) கடந்த (23.01.2016) சனிக்கிழமை இந்தியாவில் காலமானார்.
அன்னார் காலஞ்சென்ற றோமான் இமனுவல் சிறில் ஜெயராஜாவின் (இலங்கை வங்கி) அன்பு மனைவியு ம், சுபாசினி (வன்னி விளாங்குளம் அ.த.க. பாடசாலை), தர்மேந்திரா (ஜேர்மனி), தனேந்திரா, யுவனேந்திரா (டுபாய்) ஆகியோரின் அன்புத் தாயாரும், S.B. அருமைநாயகம் (கனடா), S.X குலநாயகம், காலஞ்சென்ற மேரி அமலோற்பவநாயகி (கிளி), S.V தனிநாயகம் (ஆஸ்திரேலியா),மேரிநிர்மலா (ஆசிரியை, வல்வை றோ.க.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பராசா, டொறத்தி, அருட்தந்தை நேசராஜா, ரட்ணராஜா (பிரான்ஸ்), அணற் (நியூசிலாந்து), புஸ்பராணி (கனடா), தேவஜோதி, அன்ரனி ஜெயநாதன் (பிரதி அவைத் தலைவர், வடக்கு மாகாணசபை), Dr. சுசிலா (ஆஸ்தி ரேலியா), அருச்சுனா ஆகி யோரின் மைத்துனியும், செபஸ்ரியன், லலிதா (இந்தியா), மதி (லண் டன்) ஆகியோரின் மாமியும், வேஜி, அனி, ஷாம் ஆகியோரின் பேர்த் தியும் ஆவார்.
அன்னாரின் பூதவுடல் நேற்று (24.01.2016) ஞாயிற்றுக்கிழமை இந்தியாவில் வலசரபாக்கத்தில் அடக்கம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நெடியகாடு, வல்வெடித்துறை.

தகவல்:
S.X.குலநாயகம் (சகோதரன்)
திருமதி சுபாசினி (மகள்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செரீனா காலிறுதியில்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரின் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளார் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள வீராங்கனையான செரீனா வில்லியம்ஸ்.

சர்வதேச அந்தஸ்து பெற்ற தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் மெல்பேர்ண் நகரில் நடைபெற்று வருகின்றன. ஆஸித் தொடரின் நடப்புச் சம்பியனான அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் தனது நான்காவது சுற்றில் ரஷ்யாவைச் சேர்ந்த மார்கரி தாவை எதிர்கொண்டார். இதில் செரீனா 6:2, 6:1 என்ற நேர்செற் கணக்கில் வென்று காலிறுதிக்குத் தகுதி பெற்றார். (ம)





## இங்கிலாந்து - தென்னாபிரிக்கா டெஸ்ட் இரு அணிகளும் சம பலத்தில் உள்ளன

தென்னாபிரிக்கா - இங்கிலாந்து அணிகளுக்கு இடையில் நடைபெற்றுவரும் நான்காவது டெஸ்ட் ஆட்டத்தின் இரண்டாம் நாளான நேற்று முன்தின முடிவில் தென்னாபிரிக்காவின் இன்னிங்ஸ் 475 ஓட்டங்களுடன் முடிவுக்கு வந்தது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிவரும் இங்கிலாந்து நாள் முடிவில் 138-2 என்ற நிலையில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து ஸ்ரீபன் குக், அம்லா இருவரதும் சதத்தின் உதவியுடன் முதல் நாள் முடிவில் 329-5 என்ற நிலையில் இருந்தது. பவுமா 32 ஓட்டங்களுடனும், டி கொக் 25 ஓட்டங்களுடனும் களத்தில் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். 35 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் பவுமா. அடித்து ஆடிக்கொண்டிருந்த டி கொக், 68 பந்துகளில் அரைச்சதம் கடந்தார். டி கொக் - பியட் இணை 9ஆவது இலக்குக்காக இணைப்பாட்டமாக 82 ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டது. இதில் பியட்டின் பங்கு வெறும் 19 ஓட்டங்கள் மட்டுமே. மீதியெல்லாம் கொக் குவித்ததே. 104 பந்துகளில் சதம் கடந்தார் கொக். கொக் ஒரு முனையில் நிலைத்து நின்றாலும் மறுமுனையில் இலக்குகள் சரிய 475 ஓட்டங்களுடன் தென்னாபிரிக்காவின் இன்னிங்ஸ் முடிவுக்கு வந்தது.

பந்துவீச்சில் இங்கிலாந்து சார்பாக ஸ்ரோக்ஸ் 4 இலக்குகளையும், புரோட், மொயின் அலி இருவரும் தலா இரு இலக்குகளையும், அண்டர்சன், வோக்ஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்துக்கு ஆரம்பம் சிறப்பாக அமையவில்லை. 15 ஓட்டங்களுடன் வீழ்ந்தார் கேல்ஸ். 19 ஓட்டங்களுடன் வெளியேறினார் கொம்டன். குக் - ரூட் இணை இங்கிலாந்தின் இன்னிங்ஸை மீண்டெழச் செய்தது. அரைச்சதம் கடந்தார் குக். நாள் முடிவில் இங்கிலாந்து 138-2. அலிஸ்டர் குக் 67 ஓட்டங்களுடனும், ரூட் 31 ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காது களத்தில் உள்ளனர். (ம)

## அணிக்குத் திரும்பாமலே விடைபெற்றார் சந்தர்போல்

மேற்கிந்தியத் தீவுகளைப் பிரதிநிதித்துவம் செய்த ஆகச்சிறந்த துடுப்பாட்ட வீரர்களில் ஒருவராக அடையாளம் காணப்பட்ட சிப்னாரின் சந்தர்போல் சர்வதேச கிரிக்கெட் ஆட்டங்களில் இருந்து தனது ஓய்வை அறிவித்துள்ளார்.


டெஸ்ட் ஆட்டங்களில் 11ஆயிரத்து 867 ஓட்டங்களைக் குவித்து, மேற்கிந்தியத்தீவுகள் சார்பாக டெஸ்ட் ஆட்டங்களில் அதிக ஓட்டங்களைக் குவித்தவர்கள் வரிசையில் இரண்டாமிடத்தில் சந்தர்போல் இருக்கின்றார். இவரைவிட அதிகமாக 86 ஓட்டங்களைப் பெற்று லாரா முதலிடத்தில் உள்ளார். நாற்பத்தொரு வயதான சந்தர்போல் இறுதியாக, கடந்த வருடம் மே மாதத்துக்குப் பின்னர், மேற்கிந்தியத்தீவுகள் அணியில் இடம்பெற்றிருக்கவில்லை. மேற்கிந்தியத்தீவுகளில் இடம்பெற்ற இங்கிலாந்துடனான மூன்று ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் மோசமான பெறுபேறுகளை வெளிப்படுத்தியதன் காரணமாக அணியிலிருந்து நீக்கப்பட்ட பின், எட்டு மாதங்களில் நடைபெற்ற எந்தத் தொடருக்கான அணியிலும் இடம்பெற்றிருக்காததோடு, கடந்த டிசம்பரில் மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையால் வழங்கப்பட்ட வீரர்களுக்கான ஒப்பந்தப்பட்டியலிலும் இடம்பெறவில்லை. ஒரு காலத்தில் தீவுகளைத் தூக்கி நிறுத்திய சந்தர்போல், தீவுகளால் புறக்கணிக்கப்பட்டு மீண்டும் அணிக்குத் திரும்பாமல் தனது ஓய்வை அறிவித்துள்ளார். (ம)



## பெடரர் முன்னேற்றம்

ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரின் நான்காவது சுற்றுக்கு முன்னேறியுள்ளார் முன்னணி வீரரான ரோஜர் பெடரர்.

சர்வதேச அந்தஸ்துப் பெற்ற ரென்னிஸ் தொடர்களில் ஒன்றான ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடர் மெல்பேர்ண் நகரில் நடைபெற்று வருகின்றது. இந்தத் தொடரில் சர்வதேச தரப்படுத்தலில் மூன்றாம் இடத்தில் உள்ள ரோஜர் பெடரர், 27வது இடத்தில் உள்ள பல்கேரியாவின் கிரிகோர் டிமிட்ரோவை 6:4, 3:6, 6:1, 6:4 என்ற செற் கணக்கில் தோற்கடித்து 4ஆவது சுற்றில் நுழைந்தார். 17 சர்வதேச அந்தஸ்து பெற்ற கிண்ணங்களை வென்றுள்ள பெடரருக்கு இது 300 ஆவது வெற்றியாக (சர்வதேச அந்தஸ்து பெற்ற தொடர்களில் மட்டும்) அமைந்தது. இதன் மூலம் சர்வதேச அந்தஸ்து பெற்ற தொடர்களில் 300 வெற்றிகளைக் குவித்த முதல் வீரர் என்ற பெருமையைப் பெடரர் பெற்றார். (ம)



## நியூசிலாந்து - பாகிஸ்தான் ஒருநாள் தொடர் இன்று

நியூசிலாந்து - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடர் இன்று ஆரம்பமாகவுள்ளது.

ரி-20 தொடரை 2:1 என்ற கணக்கில் கைப்பற்றியிருந்தது நியூசிலாந்து. இதனால் ஒருநாள் தொடரை கைப்பற்றுவதற்கு பாகிஸ்தான் முனைப்புக்காட்டும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. வெலிங்டன் மைதானத்தில் இலங்கை நேரப்படி அதிகாலை 3.30 மணிக்கு ஆட்டம் நடைபெறும். (ம)

## கிரிக்கெட் உணர்வுக்கான உரை இவ்வாண்டில் மக்கலத்திடமிருந்து

கிரிக்கெட்டின் உணர்வுக்கான நடப்பு வருடத்தின் உரையை நியூசிலாந்து அணியின் தலைவர் மக்கலம் ஆற்றவுள்ளார்.

லோர்ட்ஸ் மைதானத்தில், இவ்வாண்டு ஜூன் மாதத்தில் இந்த உரை இடம்பெறவுள்ளது. 2001ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த உரையை றிச்சி பனர், தெஸ்மொண்ட் துட்டு, இம்ரான் கான், குமார் சங்கக்கார, மார்ட்டீன் குரோ, இயன் பொத்தம் ஆகியோர் இதற்கு முன்னர் ஆற்றியிருந்தனர். நடப்பு வருடத்தின் உரை மக்கலத்திடம் இருந்து கிடைக்கவுள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 25

**ஜொலிஸ்ரார் வி.கழகத் தொடர்**

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ். இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் இராமநாதன் மகளிர் அணியை எதிர்த்து யாழ். இந்து மகளிர் அணி மோதவுள்ளது.

**யங்ஸ்ரார் வி.கழகத் தொடர்**

வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழகம் வவுனியா கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் அணிகளுக்கு இடையில் நடத்தும் சாந்தன், யூட், கயன் ஞாபகார்த்த கிண்ணத்துக்கான லீக் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று திங்கட்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஈஸ்வரன் அணியை எதிர்த்து லயன்ஸ் அணி மோதவுள்ளது.

**ஐக்கிய வி.கழகத் தொடர்**

நீர்வேலி ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் 65 ஆவதுஆண்டுநிறைவை முன்னிட்டு மின்னொளியில் நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் ஐக்கிய விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இதில் இன்று திங்கட் கிழமை இடம் பெறும் காலிறுதியாட்டங்களில் இரவு 7மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நீர்வேலி ஐக்கிய அணியை எதிர்த்து கைதடி வளர்மதிஅணிமோதவுள்ளது. இரவு 8மணிக்கு இடம் பெறும் ஆட்டத்தில் மட்டுவில் மோகனதாஸ் அணியை எதிர்த்து சிறுப்பிட்டி கலையொலி அணிமோதவுள்ளது.(23)



# திரில் வெற்றியுடன் இறுதியில் ரேவடி வல்வைத் தொடரில் சைனிங்ஸை வீழ்த்தி

கரணவாய், ஜன. 25

வல்வை நேதாஜி விளையாட்டுக் கழகம் வல்வெட்டித்துறைப் பிரதேச அணிகளுக்கு இடையில் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் வல்வை ரேவடி விளையாட்டுக்கழகம் இறுதியாட்டத்துக்கு தகுதி பெற்றுள்ளது.

றெயின்போய்ஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது அரையிறுதி ஆட்டத்தில் வல்வை ரேவடி விளையாட்டுக்கழகத்தை எதிர்த்து வல்வை சைனிங்ஸ் விளையாட்டுக் கழகம் மோதியது. கோல்கணக்கு ஆரம்பிக்கப்படாமல் முதல் பத்து நிமிடங்களும் உருண்டோடின. 14 ஆவது நிமிடத்தில் சைனிங்ஸ் அணியின் முன்கள வீரர் குமரன் தமது அணிக்கான முதலாவது கோலைப் பதிவுசெய்தார். கோல் கணக்கில் வேறெந்த மாற்றமும் ஏற்படாமல் சைனிங்ஸின் ஆதிக்கத்துடன் முடிவடைந்தது முதல் பாதி. 1:0 என்ற சைனிங்ஸின் ஆதிக்கத்துடனேயே இரண்டாம் பாதியும் நகர்ந்து கொண்டிருந்தது. ரேவடியால் பழிதீர்க்க இயலவில்லை. இந்த நிலையில் ஆட்டம் நிறைவடைய சில நிமிடங்களே எஞ்சியிருக்கும் பொழுது ரேவடி அணியின் வீரர் சஞ்சீவன் அசத்தலான கோல் ஒன்றைப்போட சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியாளரைத் தீர்மானிக்கும் நிலை உருவானது. சமநிலைத் தவிர்ப்பிலும் இரு அணிகளும் விடுவதாக இல்லை. இருந்தபோதும் இறுதியில் ரேவடி அணியின் கோல்காப்பாளரின் சிறப்பான செயற்பாட்டினால் 5:4 என்று கோல்களின் அடிப்படையில் ரேவடி அணி வெற்றிபெற்று இறுதியாட்டத்துக்கு முன்னேறியது. (ம-108)

## கிளிநொச்சி மாவட்ட சதுரங்கத் தொடர்

கிளிநொச்சி, ஜன. 25

கிளிநொச்சி மாவட்ட சதுரங்கச் சங்கத்தால் எதிர்வரும் 30ஆம், 31ஆம் திகதிகளில் மாவட்ட மட்டத்திலான சதுரங்கத் தொடர் ஒன்று நடத்தப்படவுள்ளது.

9வயது, 11வயது, 13வயது, 15வயது, 17வயது, 19வயது, 19வயதுக்கு மேற்பட்ட பிரிவு என்ற வயதுப் பிரிவுகளில் தொடரை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடரில் பங்குபற்ற விரும்பும் கிளிநொச்சி மாவட்டப் பாடசாலை மாணவர்கள் தமது பாடசாலைகளூடாகவும், ஏனையவர்கள் நேரடியாகவும் தமது பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ம-426,405)

## பூநகரி கால்பந்தாட்டத் தொடரின் முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 25

பூநகரி கால்பந்தாட்ட லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான 9. வீரர்கள் பங்குபற்றும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் சில நேற்று முன்தினம் சனிக்கிழமை முழங்காவில் விநாயகர் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்றன. முதலில் இடம்பெற்ற ஆட்டத்தில் பூநகரி அண்ணா அணியை எதிர்த்து முழங்காவில் விநாயகர் அணி மோதிக் கொண்டது. இதில் முழங்காவில் விநாயகர் அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இரண்டாவதாக இடம்பெற்ற ஆட்டத்தில் பள்ளிக்குடா இளந்தென்றல் அணியை எதிர்த்து இரணமாதா நகர் சென்.மேரிஸ் அணி மோதிக் கொண்டது. இதில் இரணமாதா நகர் சென்.மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. மாலை இடம்பெற்ற முதலாவது ஆட்டத்தில் வேரவில் கலைமகள் அணியை எதிர்த்து பூநகரி கலையொளி அணி மோதிக் கொண்டது. இதில் வேரவில் கலைமகள் அணி 7:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இராண்டாவது ஆட்டத்தில் பூநகரி நண்பர்களை எதிர்த்து கிராஞ்சி செந்தாரகை 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது. (ம-23)

## விண்மீன் அணி முன்னேற்றம்

கரணவாய், ஜன. 25

இலங்கை கால்பந்தாட்டச் சம்மேளனத்தினால் பருத்தித்துறை கால்பந்தாட்ட லீக்கின் அங்கத்துவ அணிகளுக்கிடையில் நடத்தப்பட்டு வரும் கால்பந்தாட்டத் தொடரில் செந்தமிழ் அணியை வீழ்த்தியது விண்மீன் அணி.

கொம்மாந்தறை நெற்கொழு கழுகுகள் விளை யாட்டுக் கழக மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் பலாலி விண்மீன் விளையாட்டுக் கழகமும் உடுத்துறை செந்தமிழ் விளையாட்டுக் கழகமும் பலப்பரீட்சை நடத்தின. எந்தவொரு அணியாலும் தனித்து ஆதிக்கம் செலுத்த முடியவில்லை. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஓர் கோலைப் பெற்றமையால் சமநிலைத் தவிர்ப்பு வரை ஆட்டம் இழுபறிப்பட்டது. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் விண்மீன் விளையாட்டுக் கழகம் 4:3 என்று வெற்றிபெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

(ம-108)



நடப்பு வருடத்தின் மாகாண மட்டப் போட்டிகள் யாழ்.துரையப்பா விளையாட்டு அரங்கில் நடைபெறவுள்ள நிலையில் மைதானப் புனரமைப்புப் பணிகள் துரிதமாக மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. (ம)

# சென்.மேரிஸ் அசத்தல் வெற்றி

யாழ்ப்பாணம், ஜன. 25

எவ்.ஏ. கிண்ணத்துக்காக கிளிநொச்சி லீக்குகளுக்கு இடையே நடைபெற்றுவரும் கால்பந்தாட்டத் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஆட்டத்தில் சென்.மேரிஸ் அபார வெற்றிபெற்றுள்ளது.



இலங்கை கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் நடத்தப்படும் எவ்.ஏ. கிண்ணத்துக்கான தொடரின் கிளிநொச்சி லீக்கில் அங்கம் வகிக்கும் கழகங்களுக்கு இடையிலான மூன்றாம் சுற்று ஆட்டத்தில் உதயதாரகை அணியை எதிர்த்து நாச்சிக்குடா சென்.மேரிஸ் அணி மோதியது. உதயதாரகை மைதானத்தில் இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் சென்.மேரிஸ் அணி 7:0 என்ற கோல் கணக்கில் அபார வெற்றிபெற்றது. (ம-23)

## யாழ். பல்கலை அபாரம்

யாழ்ப்பாணம், ஜன. 25

ஜொலிஸ்ரார் விளையாட்டுக்கழகம் ஜொலிஸ்ரார் கிண்ணத்துக்காக நடத்தும் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்.இந்துக்கல்லூரியின் கூடைப்பந்தாட்டத் திடலில் இடம்பெற்று வருகின்றன. இந்தத்தொடரில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் கே.கே.எஸ். அணியை எதிர்த்து யாழ்.பல்கலைக்கழக அணி மோதிக் கொண்டது. இதில் யாழ்.பல்கலைக்கழக அணி 79:51 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்றது. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# நியூசியை வீழ்த்த முடியாதென்பதை உணர்ந்ததாக தெரிவிக்கிறார் மகேல

நியூசிலாந்தை இலங்கை அணியால் வீழ்த்த முடியாதென்பதை, தான் தொடர் ஆரம்பமாகும் முன்பே உணர்ந்திருந்ததாக முன்னாள் தலைவர் மகேல தெரிவித்துள்ளார்.



சமீபத்தில் நியூசிலாந்துக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடிய இலங்கை அணி டெஸ்ட், ஒருநாள் மற்றும் ரி-20 என அனைத்து தொடரையும் மோசமாக இழந்தது. இதனால் இலங்கை அணியில் சில மாற்றங்களை செய்யவும், மூன்று வகை ஆட்டங்களுக்கும் ஒருவரை தலைவராக நியமிக்கவும் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை ஆலோசித்து வருகிறது.

இது பற்றி இலங்கை அணியின் முன்னாள் தலைவர் மகேல தெரிவிக்கையில், 'நியூசிலாந்து அணி வலிமையான அணி. அந்த அணியில் துடுப்பாட்ட வரிசையும், தாக்குதல் பந்துவீச்சும் சிறப்பாக உள்ளது. அதுவும் அந்த அணியை அதன் சொந்த மண்ணில் வீழ்த்துவது எளிதான விடயம் இல்லை. நேர்மையாக சொல்லப் போனால் நான் கூட இலங்கை அணியால் வெற்றி பெற முடியும் என்று நினைக்கவில்லை. சில ஆண்டுகளாக இலங்கை அணி பல வகைகளில் முன்னேற்றம் கண்டுள்ளது. அனுபவமின்மையால் ஏற்பட்ட தோல்விதான் இது. வீரர்களை குறை சொல்வது தவறு. எனவே பொறுமை காப்பது அவசியம்' என்றார். (ம)

# சிவநகர் அ.த.க. பாடசாலை மகாஜனா அரையிறுதியில் இன்று பலப்பரீட்சை






யாழ்ப்பாணம், ஜன. 25

சமபோச கிண்ணத்துக்காக தேசியமட்ட ரீதியில் நடைபெற்று வரும் கால்பந்தாட்டத் தொடரில் 15வயதுக்கு உட்பட்ட பெண்கள் பிரிவில் இன்று நடைபெறவுள்ள அரையிறுதி ஆட்டம் ஒன்றில் கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணியை எதிர்த்து தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி மோதவுள்ளது.

கொழும்பு கால்பந்தாட்டச் சங்கத்தின் மைதானத்தில் காலை 9.30 மணிக்கு இந்த ஆட்டம் நடைபெறவுள்ளது. கிளிநொச்சி சிவநகர் அ.த.க. பாடசாலை அணி தனது காலிறுதியில் நீர்கொழும்பு சென்.மேரிஸ்கல்லூரி அணியை 3:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியும், தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி அணி தனது காலிறுதியில் சிகிரியா மகா வித்தியாலயத்தை 5:1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தியும் அரையிறுதி ஆட்டத்துக்கு தகுதி பெற்றிருந்தன. அரையிறுதியில் வடமாகாண அணிகள் இரண்டு பலப்பரீட்சை நடத்துகின்றமையால் இறுதியாட்டத்தில் வடமாகாணம் பிரதிநிதித்துவம் பெறுவது உறுதியாகியுள் ளது.

(ம-422)

# வில்லியர்ஸ் முதலிடம் டில்சானுக்கு ஆறாமிடம்



சர்வதேச கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை வெளியிட்ட ஒருநாள் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் தென்னாபிரிக்காவின் வில்லியர்ஸ் தொடர்ந்தும் முதலிடத்தில் நீடிக்கிறார். இலங்கை வீரர்களில் டில்சான் ஆறாவது இடத்தில் உள்ளார்.

இந்தியா – ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான ஐந்து ஒருநாள் ஆட்டங் கள் கொண்ட தொடரில் இந்தியா 4:1 என்ற கணக்கில் தோல்வியடைந்தாலும் இந்தியத் துடுப்பாட்ட வீரர்கள், தனிப்பட்ட ரீதியில் சிறந்த பெறுபேறுகளை எட்டியிருந்தார்கள். இதனால் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் கோக்லி, ரோகித் சர்மா, தவான் மூவரும் முன்னேற்றம் கண்டுள்ளனர்.

துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தல் விவரம் – வில்லியர்ஸ், விராட் கோக்லி, கசிம் அம்லா, வில்லியம்சன், ரோகித் சர்மா, டில்சான், தவான், மக்ஸ்வெல், குப்தில், ரெய்லர்.

(ம)

# செரபோவாவும் காலிறுதியில்



ஆஸ்திரேலிய ரென்னிஸ் தொடரின் காலிறுதியில் விளையாட தகுதி பெற்றுள்ளார் ரஷ்யாவின் மரிய செரபோவா.

நடப்பு வருடத்தின் முதலாவது சர்வதேச அந்தஸ்து பெற்ற ரென்னிஸ் தொடராக ஆஸ்திரேலியாவின் ரென்னிஸ் தொடர் நடைபெற்று வருகிறது. மெல்பேர்ண் நகரில் நடைபெற்று வரும் இந்த ஆட்டங்களில் பெண்கள் ஒற்றையர் பிரிவில் நட்சத்திர வீராங்கனை செரபோவா காலிறுதிக்கு முன்னேறியுள்ளார். காலிறுதிக்கு தகுதி பெறும் ஆட்டத்தில் செரபோவாவை எதிர்த்து மோதினார் சுவிட்சர்லாந்தின் பென்சிச். முதல் செற்றை 7:5 என்று கைப்பற்றிய செரபோவா, இரண்டாம் செற்றிலும் தனது ஆதிக்கத்தை நிலைப்படுத்தி, அந்த செற்றையும் 7:5 எனக் கைப்பற்றி 2:0 என்ற நேர் செற் கணக்கில் காலிறுதிக்கு முன்னேறினார். நேர் செற் கணக்கில் ஆட்டம் நிறைவடைந்தாலும் இந்த ஆட்டம் 2 மணித்தியாலயம் 6 நிமிடங்கள் வரை நீடித்தது



## சோங்காவின் கனவான் தன்மை

ஆஸ்திரேலியரென்னிஸ் தொடரில் பரபரப்பான ஆட்டத்தின் மத்தியிலும் பிரான்ஸ் வீரர் ஜோவில் பிரட் சோங்காவின் செயல் ரசிகர்களை நெகிழ்ச்சியடையச் செய்துள்ளது.

ஆஸ்திரேலியரென்னிஸ் தொடரில் நேற்று நடந்த ஆட்டத்தில் தரவரிசைப் பட்டியலில் 9ஆம் இடத்தில் உள்ள பிரான்ஸ் வீரர் ஜோ வில்பிரட் சோங் கா, ஆஸ்திரேலிய வீரர் ஓமர் ஜெசிகாவை எதிர்த்து விளையாடினார். ஆட்டம் பரபரப்பாக சென்று கொண்டிருந்த போழுது பந்தை எடுத்துக் கொடுக்கும் பணியில் உள்ள இளம்பெண் உடல்நிலை பாதிக்கப்பட்டிருப்பதை அறிந்த சோங்கா, அவருக்கு ஆறுதல் கூறி அவரை மைதானத்துக்கு வெளியே உள்ள பணியாளர்களிடம் ஒப்படைத்தார். இதனையடுத்து சோங்காவுக்கு பாராட்டு தெரிவிக்கும் வகையில் அரங்கில் இருந்த ரசிகர்கள் எழுந்து நின்று கைதட்டி ஆர்ப்பரித்தனர். இந்த ஆட்டத்தில் 7-5, 6-1, 6-4 என்ற நேர்செற் கணக்கில் சோங்கா வெற்றிபெற்றிருந்தார்.

(ம)

# நாளை ஆரம்பமாகிறது ரி-20

இந்தியா ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்று ஆட்டங்களைக் கொண்ட ரி-20 தொடரின் முதலாவது ஆட்டம் நாளை நடைபெறவுள்ளது.

நீண்ட இடைவேளைக்குப் பின்னர் மீண்டும் அணியில் இடம்பிடித்துள்ள யுவராஜ், நெக்ரா இருவரும் நாளைய ஆட்டத்தில் களமிறக்கப்படுவார்களா என்பதே தற்பொழுது உள்ள கேள்வியாக அமைந்துள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டாவது ஆட்டம் 29ஆம் திகதியும், இறுதி ஆட்டம் 31ஆம் திகதியும் நடைபெறவுள்ளன. நாளைய ஆட்டம் இலங்கை நேரப்படி பி.ப. 1.08 மணிக்கும், ஏனைய இரு ஆட்டங்களும் பி.ப. 2.08 மணிக்கும் நடைபெறவுள்ளன.

SLEAS
மற்றும்
SLAS
போட்டிப்பரீட்சை
விசேட வகுப்புக்கள்
பிரிவு - II
ஆரம்பம்
செவ்வாய் (26/1)
பி.ப.5.00 - 6.30 மணி
செவ்வாய் தொடக்கம்
வெள்ளி வரை
ஒவ்வொரு நாளும்
T.P: 076 688 3394

யாழ் நகரின் முன்னணி ஆசிரியர்களின்
ஒருங்கிணைந்த சேவையில்
BRAIN POWER INSTITUTE
குருநகர் [B.P.I] சின்னக்கடை
சந்தை அருகில்
A/L - 2018 வர்த்தகப் பிரிவு
ஆரம்பம் 25.01.2016
இன்று மாலை 3.30 மணிக்கு
இம்மாத கட்டணம் அறவிடப்படமாட்டாது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 25.01.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.